# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 20
பக்கங்கள்: 28

சுடர் 33 கதிர் 90 மாசி 12ஆம் நாள் சனிக்கிழமை 24 பெப்ரவரி 2018 வள்ளுவர் ஆண்டு 2049


# ஆதரவு தர முன்வரும் தமிழ் கட்சிகளுடன் கூட்டமைப்பு பேசும்

*பங்காளிக் கட்சித் தலைவர்கள் நேற்றுக் கூடித் தீர்மானம்*

**யாழ்ப்பாணம், பெப்ரவரி 24**

உள்ளூராட்சி சபைகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சி அமைப்பதற்கு ஆதரவு வழங்க முன்வரும் தமிழ்க் கட்சிகளுடன் பேச்சு நடத்துவது என்று, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் நேற்று முடிவு செய்யப்பட்டுள்ளது. »23



## மகாஜனவின் வீரர் தயுஸ்ரன் 7 இலக்குகள்

யாழ்ப்பாணம், பெப். 24
வீரர்களின் போர் என்று வர்ணிக்கப்படும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கும் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிக்கும் இடையிலான இரண்டு »06

## ஐயோ! சிரியா

டமஸ்கஸ், பெப். 24
சிரியாவில் அரச தரப்புக் கூட்டுப் படையால் கடந்த ஒரு வாரகாலமாகத் தொடர்ந்து வான் தாக்குதல்கள் நடத்தப்படும் நிலையில் இந்தத் தாக்குதல்களில் இதுவரை »25



## சாம்பல் பாதி கறுப்புப் பாதி

பிரான்ஸில் பிறந்த பூனை ஒன்று முழு உலகினதும் கவனத்தை ஈர்த்துவிட்டது. முகத்தின் சரி பாதி, சாம்பல் நிறமாகவும் மீதி கறுப்பாகவும் அமைந்திருக்கிறது. சமூக வலைத்தளங்களில் இந்தப்பூனை பற்றிய செய்திதான்தற்போதுட்ரெண்ட் (ம)



## கச்சதீவுக்கான படகுகள் சீரில்லாததால் அந்தரிப்பு

யாழ்ப்பாணம், பெப். 24
கச்சதீவு ஆலயத்துக்குப் புறப்பட்ட பக்தர்களின் பயணத்துக்கான படகுகள் போதியளவில் நேற்று ஏற்பாடு செய்யப்படவில்லை. குறிகாட்டுவானில் மணித்தியாலக் கணக்கில் அனல் வெயிலில் காத்திருக்கவேண்டிய அவலம் ஏற்பட்டது என்று பக்தர்கள் தெரிவித்தனர். (விரிவு11 ஆம் பக்கம்)

## உருளைக் கிழங்கு இறக்குமதி வரி 29 ரூபாவால் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், பெப். 24
இறக்குமதி செய்யப்படும் உருளைக் கிழங்கு மீதான வரி 29 ரூபாவால் நேற்று நள்ளிரவு முதல் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதற்கான சிறப்பு அரசிதழ் நிதி அமைச்சால் வெளியிடப்பட்டுள்ளது. உருளைக்கிழங்குக் கான இறக்குமதி வரியை அதிகரிக்க வேண்டும் என்று யாழ்ப்பாணம் மற்றும் நுவரெலியா மாவட்ட விவசாயிகள் கோரிக்கை »25

## அமைச்சரவை நாளை மாறும்

கொழும்பு, பெப். 24
புதிய அமைச்சரவைக்கான சத்தியப் பிரமாணம் நாளை காலை நடைபெறவுள்ளது என்று அரச தலைவர் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.
இறுதி செய்யப்பட்ட புதிய அமைச்சரவைப் பட்டியலுடன், தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, »25

## அமைச்சரவை மாற்றத்தால் ரணிலுக்குப் பெரும் நெருக்கடி

கொழும்பு, பெப். 24
அமைச்சரவையை மாற்றும் விவகாரத்தால் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் பெரும் நெருக்கடி நிலைமை ஏற்பட்டுள்ளது. கட்சியின் மூத்த உறுப்பினர்கள் கட்சி உறுப்பினர் பதவியிலிருந்து விலகுவதற்கான தீர்மானத்துக்கு வந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.
ஐக்கிய தேசியக் கட்சியின் மூத்த உறுப்பினர் »25

## துறைசார் ஒப்பந்தம் செய்தால் சித்தமருத்துவத்துக்கு உதவிகள்

*இந்திய சித்த மருத்துவர் செந்தில்வேல் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், பெப். 24
இலங்கை - இந்தியா இடையே சித்த மருத்துவத் துறையை அபிவிருத்தி செய்வதற்குத் துறை சார்ந்த ஒப்பந்தம் கைச்சாத்திட்டால் அதிக உதவி »06

## மக்கள் ஆணையை புறந்தள்ள முடியாது

*அதன்படியே செயற்படுவோம் என்கிறார் ரணில் விக்கிரமசிங்க*

கொழும்பு, பெப்.25
2015ஆம் ஆண்டு மக்கள் வழங்கிய ஆணையின் அடிப்படையில்தான் நாம் செயற்பட முடியும். அதைத் தாண்டிச் செல்ல முடியாது.
இவ்வாறு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.
அலரிமாளிகையில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே »23

## பின்னடைவு தொடர்பில் கூட்டமைப்பு ஆராயும்!

யாழ்ப்பாணம், பெப். 24
உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஏற்பட்ட பின்னடைவு தொடர்பில் ஆராய்வது என்று நேற்று நடந்த கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது. »23

## புரிந்துணர்வு அடிப்படையில் செயற்பட முன்னணி மறுப்பு

*5 சபைகளின் நிர்வாகங்கள் என்பதில் விடாப்பிடி*

யாழ்ப்பாணம், பெப். 24
கூடிய ஆசனங்களைக் கைப்பற்றிய கட்சி ஆட்சி அமைப்பது என்று சிவில் சமூகத்தால் முன்வைக்கப்பட்ட புரிந்துணர்வின் அடிப்படையில் செயற்படுவதற்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தயாரில்லை. அந்தக் கட்சி, தாம் கூடிய ஆசனங்கள் கைப்பற்றிய »06

## அமைச்சரவையுடன் சேர்ந்து கொள்கைகளிலும் மாற்றம்

*தலைமை அமைச்சர் தகவல்*

கொழும்பு, பெப். 24
அரசின் கொள்கைகளிலும், அமைச்சரவையிலும் மாற்றம் மேற்கொள்ளப்படும். அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.
இவ்வாறு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.
அலரிமாளிகை »24

## சமாதானத்துக்கான மரதன் வவுனியாவில்

வவுனியா, பெப்.24
வவுனியாவில் பிறந்து கனடாவில் வசிக்கும் உலக சாதனை வீரன் சுரேஸ் ஜோஷிம் சமாதானத்தை வலியுறுத்தி தொடங்கப்பட்ட மரதன் ஓட்டம் நேற்று வவுனியாவில் ஆரம்பமானது. »25

## வாக்களிப்போரை பழிவாங்காவிடில் பகிரங்க வாக்கெடுப்புக்குத் தயார்

*தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பதில்*

யாழ்ப்பாணம், பெப். 24
உள்ளூராட்சி மன்றங்களில் தவிசாளர் மற்றும் உப தவிசாளர் தெரிவுகளின் போது வாக்களிக்கும் உறுப்பினர்களுக்கு எதிராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்காது எனில் நாம் பகிரங்க வாக்கெடுப்புக் குத் தயாராகவே இருக்கின்றோம்.
இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தெரிவித்தது.
உள்ளூராட்சி மன்றங்களின் தலை »24





# பன்னாட்டு சித்த மருத்துவ மாநாடும், கண்காட்சியும்

## கைதடியில் நேற்று ஆரம்பமானது



யாழ்ப்பாணம், பெப்.24
பன்னாட்டு சித்த மருத்துவ ஆய்வு மாநாடும், கண்காட்சியும் கைதடி சித்த மருத்துவ வளாகத்தில் நேற்று ஆரம்பமானது.
யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் சித்த மருத்துவ அலகு, வடக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்களம், இந்தியாவின் ஆயுஸ் அமைச்சு என்பன இணைந்து ஏற்பாடு செய்துள்ள இந்த மாநாடும், கண்காட்சியும் ஐந்த நாள்கள் நடைபெறவுள்ளன. சித்த மருத்துவ முறைகள், மூலிகைகள்,யோகக் கலைகள்,மருந்துகள் , அடங்கிய 50 க்கும் அதிகமான காட்சிக் கூடங்கள் கண்காட்சியில் அமைக்கப்பட்டுள்ளன.
நேற்றைய நிகழ்வுகளுக்கு இந்தியாவில் இருந்து துறை சார்ந்த நூறு மருத்துவர்கள் வந்திருந்தனர். மனித வாழ்வு முறையை பிரதி பலிக்கும் சிறப்பு இறுவட்டு வெளியிடப்பட்டது. மாகாண சுகாதார அமைச்சர் யா.குணசீலன் அதை வெளியிட, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் பேராசிரியர் ஆர்.விக்கினேஸ்வரன் பெற்றுக்கொண்டார்.
சித்த மருத்துவம் சார்ந்த பேடகம் வெளியிடும் நிகழ்வு நடைபெற்றது. மாகாண சுகாதார அமைச்சர் யா.குணசீலன் வெளியிட்டு வைக்க மாகாண கல்வி அமைச்சர் க.சர்வேஸ்வரன் பெற்றுக்கொண்டார்.
இந்திய மருத்துவர் ஒருவரின் சித்த மருத்துவ துறையின் அகமருந்து சிகிச்சை முறை பற்றிய நூல் ஒன்றும் வெளியிடப்பட்டது. அதை சித்த மருத்துவ முகாமைத்துவ சபையின் தலைவர் பேராசிரியர் மிகுந்தன் பெற்றுக் கொண்டார்,
நிகழ்வின் முதன்மை விருந்தினராக மாகாண சுகாதார அமைச்சர் யா.குணசீலனும், சிறப்பு விருந்தினர்களாக மாகாண கல்வி அமைச்சர் க .சர்வேஸ்வரன், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் ஆர்.விக்கினேஸ்வரன், மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் எஸ்.திருவாகரன் ,இந்திய ஆயுஸ் அமைச்சின் ஆராய்ச்சிப் பிரிவின் மருத்துவர் ஜி.செந்தில்வேல் ஆகியோரும் கலந்து கொண்டனர்.
மாணவர்கள் , பேராசிரியர்கள் ,பொது மக்கள் எனப் பலர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டதுடன், கண்காட்சியையும் பார்வையிட்டனர்.
(ற-ரி)

# சித்த மருத்துவத்தால் எதையும் மாற்றலாம்

## வடக்கு சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப்.24
ஆங்கில மருந்துக்கு குணமடையாத நோய்கள் கூட சித்த மருத்துவ முறையில் குணமடைகின்றன. அதை நாம் பாதுகாக்க வேண்டும்.
இவ்வாறு மாகாண சுகாதார அமைச்சர் யா.குணசீலன் தெரிவித்தார்.
பன்னாட்டுச் சித்த மருத்துவ ஆய்வு மாநாடும் கண்காட்சியும் கைதடி சித்த மருத்துவ வளாகத்தில் நேற்று ஆரம்பமானது. அதில் முதன்மை விருந்தினராக. கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
மேற்கத்தேய மருத்துவனாகித் தற்போது அரசியலிலும் உள்ளேன். ஆரம்பத்தில் சித்த மருத்துவ முறைகள் பற்றிப் பெரிதாக எனக்கு ஒன்றும் தெரியாது. இப்போது அதைத் தேடி அறிகின்றபோதுதான் அதன் புனிதத் தன்மை தெரிகின்றது.
இந்த நவீன உலகத்தில் அதிகளவு தொற்றா நோய்களுக்கு உள்ளாகியுள்ளோம். அதற்குக் காரணம் எமது உணவு முறைகளே. அதனால் எமது ஆயுள்காலமும் குறைந்து விட்டது. நல்ல சேவைகள் யாவும் இங்கே வியாபார நோக்கமாகி விட்டன. நாம் எமது பாரம்பரியத்தை மறந்து நோயாளிகளாக மாறிவிட்டோம்.
மேற்கத்தையே மருத்துவ முறைகளை நாடுகின்றோம். நாம் ஒன்றை புரிந்து கொள்ள வேண்டும். மனம் சார்ந்த நோய்களுக்கு ஆங்கில மருந்து முறைப்படி என்ன செய்ய முடியும் என்று திட்டவட்டமாகக் கூற முடியாது. ஆனால் சித்த மருத்துவப் பிரிவின் யோக கலையால் மனத்தை ஒரு நிலைக்கு கொண்டு வர முடியும். ஆங்கில மருந்துகளால் குணப்படுத்த முடியாத நோய்களுக்கு கூட நாம் சித்த மருத்துவத்தை நாட வேண்டிய தேவை உள்ளது - என்றார். மாகாண கல்வி அமைச்சர் க.சர்வேஸ்வரன் நிகழ்வில் உரையாற்றினார். எமது பாரம்பரியம் என்ன என்பதைத் தேடி அறியும் நிலையிலேயே நாம் உள்ளோம். எமது முன்னோரின் விடயங்களை பல்வேறு நிறுவனங்கள் இப்போது புதிது போன்று எமக்குக் காட்டுகின்றன. 500 வருடங்கள் பழமையான எமது சித்த மருத்துவ முறைகளை அறிந்த அவர்கள் இன்று அதனை பயன்படுத்தி மருந்துகள் தயாரித்து எமக்குத் தருகின்றனர். முன் காக்கும் சித்த மருத்துவ முறைகளை நாம் பாதுகாக்க வேண்டும் - என்று அவர் குறிப்பிட்டார். (ற-ரி)



# பாதையிலிருந்து விலகியது தொடருந்து

கொழும்பு, பெப்.24
கொழும்பிலிருந்து பதுளை நோக்கிச் சென்ற பயணிகள் ரயில் நானுஓயா புகையிரத நிலையத்தில் நேற்று மாலை 4.30 மணியளவில் தடம்புரண்டது. அதில் பயணித்த பயணிகள் போக்குவரத்துச் செய்வதில் சிக்கலை எதிர் கொண்டுள்ளனர். ரயிலின் என்ஜீன் பகுதியே இவ்வாறு தடம் புரண்டுள்ளது.
எனினும் அதில் பயணித்த பயணிகளை வேறொரு ரயிலுக்கு மாற்றி அனுப்பப்பட்டனர் என்று நானுஓயா ரயில் கட்டுப்பாட்டு நிலைய அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். ரயில் பாதையை சீரமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாகவும், அதன்பின் மலையக ரயில் சேவைகள் பாதிப்பில்லாமல் தொடரும் என அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர்.






செயற்றிறன் அரங்க இயக்கமும், யாழ்ப்பாணம் பொதுநூலகமும் இணைந்து நடத்திய சிறுவர் நாடக விழா நேற்று யாழ்ப்பாணம் பொதுநூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. சிறுவர் உளவிருத்தி மகிழ்வூட்டலுக்காக இந்த நாடக விழா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. குழந்தை ம.சண்முகலிங்கத்தின் கூடி விளையாடு பாப்பா என்ற நாடகம் மேடையேற்றப்பட்டது. (ற)

# நூதனமாக ஆடு திருட முயன்றோர் சிக்கினர்

யாழ்ப்பாணம், பெப்.24
ஆட்டுக்கு ஊசி போடுவது போன்று பாசாங்கு செய்து ஆட்டைக் களவாட முயன்றவர்கள் மடக்கிப் பிடிக்கப்பட்டனர். இந்தச் சம்பவம் நேற்றுக் கோண்டாவில் கிழக்கில் நடந்துள்ளது.
வயதான ஒருவரின் வீட்டுக்குச் சென்ற இருவர் அங்கிருந்த ஆட்டுக்கு ஊசி போட வேண்டும் என்று கூறி ஆட்டை அவிழ்த்துச் சென்றனர். அதன்பின்னரே அவர்களின் நடவடிக்கையில் அயல் மக்களுக்குச் சந்தேகம் வந்தது. அந்த வயோதிபரும் அவர்கள் வந்த மோட்டார்சைக்கிளின் இலக்கத்தைக் குறித்து வைத்திருந்தார். இந்த நிலையில் அவர்கள் மீண்டும் அந்தப் பகுதிக்கு வந்துள்ளனர். முன்னரைப் போன்று கூறி வேறொரு ஆட்டையும் கொண்டு செல்ல முயன்றுள்ளனர். அப்போது ஊர் மக்கள் அவர்களை வளைத்துப் பிடித்தனர் என்று கூறப்பட்டது. ஊர் மக்களால் பிடிக்கப்பட்டவர்கள் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். அவர்களில் ஒருவன் சிறுவன் என்று கூறப்பட்டது.
நெல்லியடி, அச்சுவேலி, நீர்வேலி போன்ற பிரதேசங்களில் அண்மைக்காலமாக ஆடுகள் காணாமற்போவது அதிகரித்துள்ளது என்று பிரதேச மக்கள் தெரிவித்தனர். (ற)

# உயிரிழப்பைக் கட்டுப்படுத்த சுகாதாரமாக வாழ்வோம்



## வடக்கு முதல்வர் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம்,பெப்.24**

**உரிய முறையிலான மருத்துவக் கவனிப்புகள் இன்றி உயிரிழப்புக்கள் ஏற்படுவதைக் கட்டுக்குள் கொண்டுவர வேண்டுமாயின் "வருமுன் காப்போம்" என்ற தொனிப் பொருளில் நாம் அனைவரும் இணைந்து சுகாதாரமாக வாழப் பழகிக் கொள்ள வேண்டும். இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.**

யாழ்.குருநகர் பிரதேச மருத்துவமனை மறுசீரமைப்புச் செய்யப்பட்டு நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை எமக்குக் கிடைக்கப்பெற்றிருக்கும் ஒரு வரப்பிரசாதமாக அமைந்துள்ள போதும் வேறு அரச மருத்துவமனைகள் குறைவாகக் காணப்படுவதால் பல்லாயிரக்கணக்கான நோயாளர்கள் தினமும் போதனா மருத்துவமனை நோக்கிச் செல்லவேண்டியுள்ளது.

பாரிய நோய்த் தாக்கங்களுக்கு உள்ளானவர்கள் சிறிய மருத்துவமனைகளுக்கு செல்வதனூடாக யாழ். போதனா மருத்துவமனை நெருக்கடிகள் குறைக்கப்படுகின்றன. நோயாளர்களும் இங்கு இலகுவில் நோய்ப் பரிசோதனைகளை மேற்கொண்டு அவற்றை நிறைவு செய்கிறார்கள்.

குருநகர் கடற்கரை வீதியில் அமைக்கப்பட்டுள்ள இந்த மருத்துவமனைக்கு வரும் நோயாளர்களை கவனிப்பதற்காக இரண்டு நிரந்தர வைத்தியர்கள் உட்பட 15 இற்கு மேற்பட்ட உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் நியமிக்கப்பட்டதாக அறியத்தரப்பட்டது.

நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்ட புளியங்குளம் மருத்துவமனையில் ஒரேயொரு மருத்துவர் மட்டும் முழுக் கடமைகளையும் ஆற்றவேண்டிய கட்டாயத் தேவை அவதானிக்கப்பட்டது.

ஒவ்வொரு வருடமும் நூற்றுக்கணக்கான தமிழ் மாணவர்கள் மருத்துவப் பீடங்களிலிருந்து மருத்துவக் கலாநிதிகளாக வெளிவந்து கொண்டிருக்கின்ற போதும் இன்னும் வைத்தியர்களின் பற்றாக்குறை வட மாகாணத்தில் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றது.


நகரப்புறத்தை அண்டிய பகுதிகள் சன நெருக்கம் கூடிய பகுதிகளாக உருவாக்கப்படுவதால் இந்தப் பகுதிகளில் தொற்று நோய்த் தாக்கங்கள் பரவுவதற்கு சந்தர்ப்பங்கள் அதிகம். இந்தப் பகுதிகளில் வாழும் மக்கள் தமது வீடுகளைச்

சூழவுள்ள பகுதிகளைச் சுகாதாரமாகப் பேணுவது அவசியம்.

ஒவ்வொரு மனிதனும் தனது வீடு தனது சூழல் ஆகியவற்றை சுத்தமாகப் பேணப் பழகிக் கொண்டால் நாடே சுத்தமாகும். அதற்காக எமது வீட்டுக் குப்பைகள் மற்றும் கழிவுப் பொருட்களை அடுத்தவர் வீட்டு வாயிலில் போட்டுவிடுவது அர்த்தமாகாது.

முற்றத்தில் காணப்படும் சிறிய இடமாக இருந்தால் கூட அதில் குப்பைகளைத் தாட்டு வீட்டுத்தோட்டங்களை உருவாக்குவதன் மூலமும் குப்பை கூளங்களும் அகற்றப்படும் மரக்கறி வகைகளும் கிடைக்கப் பெறும்.

மருத்துவ நிலையம் உங்களுக்கு சேவை செய்வதற்காக உங்கள் பணத்தில் இருந்து அமைக்கப்பட்ட ஒரு நிலையம் என்பதை மனத்தில் இருத்தி இதனை ஒழுங்காகவும் துப்புரவானதாகவும் வைத்திருக்க வேண்டும். ஒரு குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் 7 நாட்களை மட்டுமே தமது வாழ்க்கைக் காலமாகக் கொண்டுள்ள நுளம்புகள் இந்த மருந்தின் தாக்கத்தில் இருந்து தப்பிக் கொள்வதற்கு இசைவாக்கம் அடைந்துவிட்டன. நுளம்புகளினால் பெருக்கப்படுகின்ற டெங்கு நோய்த் தாக்கம் எம் நாட்டில் கூடுதலாகக் காணப்படுகின்றது. இன்று (நேற்று) திறக்கப்பட்டிருக்கும் இந்த மருத்துவ நிலையம் இந்தப் பகுதி மக்களுக்கான ஆரோக்கிய சூழலை உறுதி செய்வதற்கு தொடர்ந்து பாடுபடும் - என்றார். (ந.ரி2)



## வெளிநோயாளர் பிரிவு திறந்து வைப்பு

யாழ்ப்பாணம்,பெப்.24

குருநகர் பிரதேச மருத்துவனையின் வெளிநோயாளர் பிரிவு நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கட்டடத்தைத் திறந்து வைத்ததுடன், நினைவுக் கல்லையும் திரை நீக்கம் செய்தார்.

சுதந்திர சுகாதார சேவையை வலுப்படுத்தும் நோக்கத்தை முன்மாதிரியாகக் கொண்டு மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியின் கீழ்வெளிநோயாளர் பிரிவுக் கட்டடம் அமைக்கப்பட்டது.

27 மில்லியன் ரூபா செலவில் வெளிநோயாளர் பிரிவுக்கட்டடம் அவசரசிகிச்சை,பற் சிகிச்சை, கிளினிக், மகப்பேறு போன்ற பிரிவுகளை உள்ளடக்கியதாக அமைக்கப்பட்டன. நிகழ்வில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஞா.குணசீலன், வடக்கு மாகாணசபை உறுப்பினர் அ.பரஞ்சோதி, வடமாகாண தலைமைச் செயலாளர் அ.பத்திநாதன் ,வடமாகாண சுகாதார அமைச்சின் செயலர் திருவாகரன், வடமாகாண சுகாதாரப் பணிப்பாளர் மருத்துவர் கேதீஸ்வரன், சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர் மருத்துவர் நந்தகுமாரன், முதன்மை பொறியியலாளர் ஜெயசீலன் ,யாழ்.மாநகர சபை ஆணையாளர் த.ஜெயசீலன், மாவட்ட மருத்துவ அதிகாரி, பிரதேச மருத்துவமனை குருநகர் எஸ்.விமலேந்திரன், திட்டமிட்ட மருத்துவ அதிகாரிநித்தியானந்தன், ஏனைய உத்தியோகத்தர்கள், தாதியர்கள், புனித மரியன்னை பேராலய அருட்தந்தை எரோனியஸ் அடிகளார், இராஜராஜசர்மா எனப் பலரும் கலந்து கொண்டனர். (ந.ரி2)

## விவசாயிகளின் உயிரைப் பாதுகாக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்

### இராதாகிருஷ்ணன் வேண்டுகோள்



நுவரெலியா,பெப்.23

நுவரெலியா விவசாயிகளின் உயிரைப் பாதுகாப்பதற்கு அரசு மற்றும் நிதி அமைச்சு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென கல்வி இராஜாங்க அமைச்சரும் மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதி தலைவருமான வீ.எஸ். இராதாகிருஷ்ணன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தொலைநகல் மூலமாக நேற்று அரசுக்கு இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார். கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

நுவரெலியா விவசாயிகள் தாங்கள் பல சிரமங்களுக்கு மத்தியில் விவசாயம் செய்து தற்பொழுது உருளை கிழங்கு அறுவடை நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

அரசு உருளைக் கிழங்கை இறக்குமதி செய்வதன் காரணமாகவும் இறக்குமதி வரி குறைக்கப்படமை மற்றும் உரிய விலை கிடைக்காமையினால் செய்வதறியாது திகைத்துள்ளனர்.

விவசர்யம் மாத்திரமே அநேகமானவர்களின் வாழ்வாதாரத்தைகொண்டு செல்கின்ற ஒரேயொரு வருமானம்பெறக்கூடிய வழியாகும். குறிப்பாக உருளைக் கிழங்கு உற்பத்தியின் மூலமே தங்களுடைய வருமானத்தைப் பெருக்கிக் கொள்ள முடியும்.

தற்போது ஏற்பட்டுள்ள இந்த நிலை காரணமாக தமது உயிரை மாய்த்துக் கொள்வதற்கும் தயாராக இருக்கின்றனர். அவர்களின் வீடு, வாகனம், நிலம் அனைத்தையும் இழந்து நடுப்பாதைக்கு வரவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த விடயங்களைக் கருத்திற் கொண்டு விவசாயிகளின் உயிர்களைப் பாதுகாக்கும் வகையில் உடனடியாக அரசு உருளைக் கிழங்கு இறக்குமதியை நிறுத்தி உருளைக் கிழங்கு இறக்குமதிக்கான வரியை அதிகரிக்கநடவடிக்கை எடுக்க வேண்டும். என்று அதில் குறிப்பிடப் பட்டிருந்தது. (ந.ரி2)

## பௌஸியின் வழக்கு ஒத்திவைப்பு

கொழும்பு,பெப்.24

இராஜாங்க அமைச்சர் எ.எச்.எம் பௌஸிக்கு எதிராக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினால் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கு நேற்று ஒத்திவைக்கப்பட்டது.

அரச வாகனத்தை தனியார் தேவைக்கு பயன்படுத்தி, 10 இலட்சம் ரூபாவுக்கு அதிகமாக அரசுக்கு இழப்பை ஏற்படுத்திய குற்றச்சாட்டின் கீழ் அவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இந்தவழக்குவிசாரணைக்கு எடுக்கப்பட்டது. இதன்போதே வழக்கு எதிர்வரும் ஜூன் 25 ஆம் திகதி வரையில் ஒத்தி வைக்கப்பட்டது. கொழும்பு மேலதிக நீதிவான் வழக்கு விசாரணையில் பங்கேற்காத நிலையில் இவ்வாறு வழக்கு ஒத்திவைக்கப்பட்டது. (ந.ரி2)

## விமலின் வழக்கு ஒத்தி வைப்பு

கொழும்பு,பெப்.24

நாடாளுமன்ற உறுப்பினரும் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவருமான விமல் வீரவன்சவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு, ஒத்திவைக்கப்பட்டது

இந்த வழக்கு, கொழும்பு வணிக மேல்நீதிமன்ற நீதிபதி மஹிந்த சமயவர்தன முன்னிலையில் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போதே, எதிர்வரும் மார்ச் மாதம் 11 ஆம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டது.

புலமைச் சொத்து சட்டத்தை மீறிய குற்றச்சாட்டுக்கு இழப்பீடு வழங்குமாறு தெரிவித்து, விமல் வீரவன்சவுக்கு எதிராக, ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வாவினால், இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

விமல் வீரவன்சவினால், எழுதி வெளியிடப்பட்ட "நெத்த வெனுவெட எத்த" எனும் புத்தகம், தன்னுடைய கருத்தை அடிப்படையாக வைத்து எழுதப்பட்டது. அவர், ஜே.வி.பியின் உறுப்பினராக இருந்த வேளையில், ஜே.வி.பியின் நிறைவேற்றுக்குழுக் கூட்டங்களில் தன்னால் முன்வைக்கப்பட்ட கருத்துகள் மற்றும் ஆலோசனைகளை அடிப்படையாக வைத்தே, இந்தப் புத்தகம் எழுதப்பட்டதாக, அவர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார். ஆகையால், புலமைச் சொத்து சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில், அவரிடமிருந்து 50 மில்லியன் ரூபாவை பெற்றுத்தருமாறு அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ந.ரி2)

## நகரசபை மைதானம் மக்களால் சிரமதானம்


சாவகச்சேரி, பெப். 24

தென்மராட்சி பிரதேச விளையாட்டு விழா அடுத்த மாதம் நடைபெறுவதையிட்டு சாவகச்சேரி கோயிற்குடியிருப்பு பிரிவு மக்கள் நேற்று சாவகச்சேரி நகரசபையின் பொது விளையாட்டு மைதானத்தை சிரமதானம் மூலம் துப்புரவு செய்தனர். கிராம அலுவலர் ப.நிரஞ்சனின் ஏற்பாட்டில் மேற்கொள்ளப்பட்ட சிரமதானத்தில் சாவகச்சேரி நகரசபை பணியாளர்கள் மற்றும் தென்மராட்சி பிரதேச செயலக பணியாளர்களும் கலந்து கொண்டனர். பிரதேச செயலர் திருமதி தே.பாபு கணக்காளர் திருமதி வ.மனோகரன் பிரதேச விளையாட்டு அலுவலர் உட்பட பலர் சிரமதானத்தில் கலந்து கொண்டனர். (ந.ரி2,9)



# மன்னாரில் உள்ள பிரபல வெதுப்பகம் ஒன்றுக்கு சீல்

## நீதிமன்றின் உத்தரவுக்கமைய நடவடிக்கை




மன்னார்,பெப்.24

மன்னாரில் உள்ள பிரபல வெதுப்பகம் ஒன்று மன்னார் நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அமைவாக நேற்று முன்தினம் வியாழக்கிழமை சீல் வைத்து மூடப்பட்டது.

மன்னார் பொதுச் சுகாதார மருத்துவ அதிகாரி தலைமையிலான பொது சுகாதாரப் பரிசோதகர்கள் அடங்கிய குழுவினர் மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் திடீர் பரிசோதனைகள் மேற்கொண்டனர்.

இதன்போது குறித்த வெதுப்பகத்தில், உடல் நலத்துக்கு ஒவ்வாத வகையில் பொருள்களை களஞ்சியப்படுத்தியமை, ஊழியர்கள் சிலர் தனிநபர் சுகாதாரத்தை கடைப்பிடிக்காமை, காலாவதியான உணவுப் பொருள்களை விற்பனை செய்தமை உள்ளிட்ட பல்வேறு குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்ட நிலையில், குறித்த வெதுப்பகத்தின் உரிமையாளருக்கு எதிராக நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மன்னார் நீதிமன்றத்தில் பொது சுகாதார வைத்திய அதிகாரியால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

விசரணைகளை மேற்கொண்ட மன்னார் நீதிவான் ஏ.ஜீ.அலெக்ஸ்ராஜா குறித்த வெதுப்பகத்தின் உரிமையாளர் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து 25 ஆயிரம் ரூபாய் தண்டம் விதித்தார்.

மேலும் நீதிமன்றின் மறு அறிவித்தல் வரை வெதுப்பகத்தை சீல் வைத்து மூடுமாறும் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

இதேவேளை மன்னார் நகரில் உள்ள பிரபல மருந்தகம் ஒன்றில் காலாவதியான மருந்துகள் விற்கப்பட்டமையால் மருந்தகம் சீல் வைத்து மூடப்பட்டது.

மன்னார் நகரில் அமைந்துள்ள மருந்தகங்கள் மற்றும் ஏனைய வர்த்தக நிலையங்கள் என்பவற்றில் மன்னார் மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் அதிகாரிகள் கடந்த வாரம் திடீரென சோதனைகள் மேற்கொண்டனர்.

சுமார் 8 வர்த்தக நிலையங்களுக்கு எதிராக மன்னார் நீதிமன்றத்தில் கடந்த 20ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மன்னார் நீதி மன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இதன்போது மன்னார் நகரில் உள்ள பிரபல மருந்தகம் ஒன்றில் காலாவதியான மருந்துகள் விற்கப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்ட நிலையில் குறித்த மருந்தகத்தின் உரிமையாளருக்கு எதிராகவும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. குறித்த நபர் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் 20 ஆயிரம் ரூபா தண்டம் தம் செலுத்த நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

மேலும் குறித்த மருந்தகத்தை சீல் வைத்து மூடுமாறும் மன்று உத்தரவிட்டதோடு, இதற்கான வழக்கு எதிர்வரும் 6ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-56)

# வன்னி நியமனங்கள் குறைக்கப்படவே கூடாது மீறினால் முதல்வர், ஆளுநருக்கு எதிராகப் போர்

## உறுப்பினர் தியாகராசா எச்சரிக்கிறார்

யாழ்ப்பாணம், பெப். 24

கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் நியமனம் உயர்புள்ளி பெற்றவர்களைக் கொண்டதாக தெரிவு செய்யாது மாவட்டங்களை மையப்படுத்தியே இருத்தல் வேண்டும். இவ்வாறு அமைந்த நேர்முகத்தேர்வை இடைநிறுத்திய வடக்கு மாகாண முதலமைச்சர் மற்றும் ஆளுநருக்கு எதிராக போர்க்கொடி தூக்குவோம் என்று வடக்கு மாகாணசபை உறுப்பினர் தியாகராசா நேற்றுத் தெரிவித்தார்.

வவுனியா விபுலானந்தாக் கல்லூரியில் அதன் முன்னாள் அதிபர் அமிர்தலிங்கத்தின் சாரணிய சேவைக்கான பணிநயப்பு விழா நேற்று நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே உறுப்பினர் இப்படித் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நியமனங்கள் தெரிவு செய்யப்படுகின்றபொழுது வடக்கு மாகாண சபையிலே கூட இன்று ஒருபெரிய புரளிகிளம்பியுள்ளதை நீங்கள் பார்ப்பீர்கள். சமூக சேவைத் திணைக்களத்திலே அமைச்சராக இருக்கின்றவர்கள் என்றாலும் சரி முதலமைச்சராக இருந்தாலும் சரி ஆளுநர் என்றாலும் சரி ஒரு பொதுக் கொள்கையை விட்டுத் தனியாக யாழ்ப்பாண மாவட்டத்தை மட்டுமே மையப்படுத்தி சேவைகள் நடைபெறுகின்றன. இந்தக் காலச் சூழலிலே வன்னி மாவட்டங்களைச் சேர்ந்த மாகாணசபை உறுப்பினர்கள் சேர்ந்து உத்தியோகத்தர்களை நியமிக்கும்போது மாவட்ட ரீதியில் வெட்டுப் புள்ளிகளை வைத்தே நிரப்ப வேண்டும் என்று நாம் பல தடவை மாகாண சபையிலே குரல் கொடுத்திருக்கிறோம். அதன் அடிப்படையில் இன்று கூட்டுறவுத் திணைக்களத்தின் ஊடாக அபிவிருத்தி உத்தியோகத்தர்களைத் தெரிவு செய்து திங்கட்கிழமை அவர்களுக்கான நேர்முகத் தேர்வு நடைபெறவிருந்தது. இந்தநிலையில் ஆளுநருடைய தலையீட்டால் அதை நிறுத்திவிட்டார்கள். வன்னி மாவட்டம் ஒவ்வொன்றுக்கும் தலா மூன்று உத்தியோகத்தர்களும் யாழ்ப்பாண மாவட்டதுக்கு 13 உத்தியோகத்தர்களும் நியமிக்க இருந்தனர். நாளை மறுதினம் திங்கட்கிழமை இதற்கான நேர்முகத் தேர்வு இடம்பெறவிருந்தது. இந்த நிலையிலே ஆளுநரும் முதலமைச்சரும் தலையிட்டு அதை நிறுத்தி இருக்கிறார்கள். எமது தமிழ்ப் பிரதிநிதிகள் இருக்கின்ற மாகாண சபையிலேயே எங்களுடைய பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது போனால் பல சமூகம் இருக்கின்ற நாடாளுமன்றிலே நாம் எப்படி எமக்கான தேவையைப் பெற்று கொள்வது என்ற கேள்வி எழுகிறது.

இந்த உத்தியோகத்தர்கள் நியமனத்தை நடைமுறைப் படுத்தாவிட்டால் நான்கு மாவட்ட மக்களையும் இணைத்து முதலமைச்சருக்கும் ஆளுநருக்கும் எதிராகப் போர்க்கொடி தூக்குவதோடு மாகாணசபையிலும் போர்க்கொடி தூக்குவோம். எமது மாவட்டங்கள் போரால் பாதிக்கப்பட்டவை. அதை வளர்ச்சியடையச் செய்யாமல் புறக்கணிப்பது போல யாழ்ப்பாணத் தலைமைகள் செயற்படுவது வேதனை அளிப்பதாக உள்ளது. எனவே முதலமைச்சரையும் ஆளுநரையும் இந்த நியமனத்தை உடனடியாக வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன் - என்றார்.

குறித்த பதவிகளுக்கான நேர்முகத்தேர்வு மாவட்ட அடிப்படையில் வன்னிக்கு தலா 3 பேரும் யாழ்ப்பாணத்துக்கு 13 பேரும் என்று அறிவிக்கப்பட்டாலும் அது அரசிதழில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. மாவட்டத் தெரிவு இடம்பெற்றால் குறித்த பரீட்சையில் அதிக புள்ளிகளைப் பெற்றிருக்கும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமக்குப் பாதிப்பு என்பது பாதிக்கப்பட்டிருப்பதாகக்கூறும் - நேர்முகத்துக்குத் தெரிவான யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்களது வாதமாக இருக்கிறது. (4)



யாழ்ப்பாணம் வெற்றிலைக் கேணி றோ.க.த.க.பாடசாலையின் இல்ல விளையாட்டு போட்டி பாடசாலை மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

# இல்ல மெய்வன்மை விளையாட்டுப் போட்டி



யாழ்ப்பாணம்,பெப்.23

யாழ்ப்பாணம் ஆனைப்பந்தி மெதடிஸ் மிஷன் வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மை விளையாட்டுப் போட்டி வித்தியாலய மைதானத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை மதியம் 1.30 மணிக்கு நடைபெற்றது.

வித்தியாலய அதிபர் யோ.ஜெகஆனந்தம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் சண்.தயாளன் மற்றும் சிறப்பு விருந்தினராக ஆனைப்பந்தி மெதடிஸ் மிஷன் வித்தியாலய ஓய்வு பெற்ற ஆங்கில ஆசிரியர் யோகேஸ்வரி சுந்தரநேசன் ஆகியோர் கலந்து கொண்டனர். நிகழ்வில் பழைய மாணவர்கள் ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (எ)

# கிளிநொச்சி, முல்லைத்தீவில் மாபெரும் நடமாடும் சேவை

யாழ்ப்பாணம்,பெப்.24

வடக்கு மாகாண சமூகசேவைகள், மகளிர் விவகார அமைச்சரின் ஏற்பாட்டில் முல்லைத்தீவு, கிளிநொச்சியில் சமூக சேவைகள் தொடர்பான நடமாடும் சேவை நடைபெறவுள்ளது.

போரால் பாதிப்புக்குள்ளாகியிருக்கும் முல்லைத்தீவு, கிளிநொச்சி வாழ் மக்களின் நலன் கருதி அந்தந்த மாவட்ட செயலகங்களுடன் இணைந்து இந்த நடமாடும் சேவை நடைபெற உள்ளது.

புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியில் இன்று சனிக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக சமூக வலுவூட்டல், நலனோன்புகை மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்கவும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனும் கலந்து கொள்ளவுள்ளனர்.

குறித்த மாவட்டங்களில் உள்ளோர் சந்தர்ப்பத்தை தவறவிடாது கலந்து கொண்டு பயன் பெறுமாறு தெரிவிக்கபடுகின்றது.

வடக்கு மாகாண சமூக சேவைகள் அமைச்சு, வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களம் ஆகியவற்றின் நெறிப்படுத்தலிலும் மத்திய அரசின் சமூக சேவைகள் திணைக்களம், அங்கவீனமுற்றோருக்கான தேசிய செயலகம், முதியோர்களுக்கான தேசிய செயலகம் என்பவற்றின் பங்குபற்றலுடனும் நடமாடும் சேவை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-8)

## பொதுக்கூட்டமும் இணையத்தள ஆரம்பிப்பும்

வவுனியா,பெப்.24

வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் பழைய மாணவர் சங்க இணையத்தளம் ஆரம்பிப்பு நிகழ்வும் வித்தியாலயத்தின் அதிபர் ரி. அமிர்தலிங்கம் தலைமையில் பாடசாலையின் ஜயாத்துரை மண்டபத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணியளவில் இடம்பெறவுள்ளன என்று வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கச் செயலாளர் எஸ். சுஜன் தெரிவித்துள்ளார். அனைத்து பழைய மாணவர்களையும் கலந்துகொண்டு பாடசாலையின் வளர்ச்சியில் பங்கு கொள்ளுமாறும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-4)

## கள் வைத்திருந்த நால்வருக்கு தண்டம்

கிளிநொச்சி, பெப். 24

மேலதிகமாக கள் உடைமையில் வைத்திருந்த நான்கு பேருக்கு 4ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதித்தது கிளிநொச்சி நீதிவான் மன்று.

கிளிநொச்சி மாவட்டத்தின் மதுவரித் திணைக்களப் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் மேலதிகமாக கள்ளை உடமையில் வைத்திருந்த நான்கு பேரை கைது செய்த மதுவரி திணைக்களத்தினர் அவர்களை நேற்றைய தினம் நீதிமன்றில் முற்படுத்தினர். இதில் 1500 மில்லி லீற்றர் கள்ளை உடமையில் வைத்திருந்த நபருக்கு ஆயிரத்து500 ரூபா தண்டம் விதிக்கப்பட்டதுடன் ஏனைய மூவருக்கும் தலா 1000 ரூபா தண்டம் விதித்து தீர்ப்பளித்தது கிளிநொச்சி நீதிவான் மன்று. (எ-6)

## மணல் ஏற்றிய ஹன்டருடன் சாரதி கைது

யாழ்ப்பாணம், பெப். 24

சட்டவிரோதமாக மணல் ஏற்றிய குற்றச்சாட்டில் ஹன்டருடன் ஒருவரைக் கைது செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

மணற்காட்டில் வைத்து அவர் நேற்றுப்பிற்பகல் கைது செய்யப்பட்டார். குடத்தனையைச் சேர்ந்த அவரிடம் மணல் ஏற்றுவதற்கான அனுமதிப்பத்திரம் எதுவும் இருக்கவில்லை. அவர் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். விசாரணைகளின்பின்னர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (4,26)

# சுழிபுரம் மேற்கு, பனிப்புலத்துக்கான பேருந்து சேவை திடீரென நிறுத்தம்

## பிரதேச பயணிகள் அந்தரிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.24

**கடந்த சில வருடங்களாக காரைநகர் சாலை இலங்கைப் போக்குவரத்துச் சபையால் சுழிபுரம் மேற்கு, பனிப்புலம் ஊடாக யாழ்ப்பாணத்துக்கு தினமும் நான்கு தடவைகள் நடத்தப்பட்டு வந்த பேருந்து சேவையானது கடந்த சில நாள்களாக மேற்கொள்ளப்படாது இடைநிறுத்தப்பட்டுள்ளமையால் மாணவர்களும், உத்தியோகத்தர்களும், வைத்தியசாலைக்குச் செல்லும் நோயாளரும் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகப் பிரதேச மக்கள் தெரிவித்தனர்.**

சேவை இடைநிறுத்தப்பட்டமையால் மூன்று கிலோமீற்றர்களுக்கு மேல் நடந்தோ, முச்சக்கரவண்டி போன்ற அதிக செலவை ஏற்படுத்தும் வாகனங்களைப் பயன்படுத்தியோ பயணங்களை மேற்கொண்டே ஏனைய பேருந்துச் சேவைகளைப் பயன்படுத்தவேண்டிய நிர்ப்பந்தத்துக்கு பிரதேச மக்கள் உள்ளாகியுள்ளனர். இது தொடர்பாக பல்வேறு தரப்பினருக்கும் அறிவித்திருந்தும் இதுவரை எந்தவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படாமை குறிப்பிடத்தக்கது. எனவே, உரிய தரப்பினர் இந்த விடயத்தில் விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் எனப் பாதிக்கப்படும் பொது மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.
இது தொடர்பில் காரைநகர் சாலை முகாமையாளரை தொடர்பு கொண்டு கேட்டபோது,
'இலங்கை போக்குவரத்துச் சபையில் காரைநகர் சாலையில் சாரதிகள் பற்றாக்குறையால் சில பேருந்து சேவைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. காரைநகர் பனிப்புலம் சேவை உள்ளடங்கலாக மூன்று சேவைகள் தற்போது வரை நிறுத்தப்பட்டுள்ளன. எமது சாலையில் பணியாற்றும் மேலும் ஐந்து சாரதிகளின் ஒப்பந்த காலம் விரைவில் முடிவடையவுள்ளது. இதனால் காரைநகர் சாலையின் ஊடாக இடம்பெற்றுவரும் பல சேவைகள் நிறுத்தப்பட வேண்டிய சூழ்நிலைக்குள் இருக்கின்றன. எனவே சம்பந்தப்பட்டவர்கள் இதற்கு உரிய தீர்வைப் பெற்றுத்தர வேண்டும். எமக்குள்ள சாரதிப் பிரச்சினைக்கு தீர்வு பெற்றுத் தந்தால் நாம் மக்களுக்கான சேவைகளை வினைத்திறனாக வழங்க முடியும்- என்றார். (எ-8)

### கலந்துரையாடல்

யாழ்ப்பாணம் ,பெப்.24
யாழ்ப்பாண முகாமையாளர் சம்மேளனம் நடத்தும் 'வடக்கு மாகாணத்தில் அபிவிருத்தியில் தனியார்துறையின் பங்களிப்பும், எதிர்கொள்ளும் பிரச்சினைகளும்' எனும் தொனிப்பொருளிலான கலந்துரையாடல் யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 4மணிக்கு நடைபெறவுள்ளது .ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

### வருடாந்த ஒன்றுகூடல்

காரைநகர் பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கமும் அதன் ஊழியர் நலன்புரிச் சங்கமும் இணைந்து நடத்திய வருடாந்த ஒன்று கூடல் நலன்புரிச் சங்க தலைவர் ப.சுதாகரன் தலைமையில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது.
முதன்மைவிருந்தினராக பனைதென்னை வள அங்கத்துவ கூட்ற வுச்சங்கத்தின் தலைவர் பொ. தர்மலிங்கம் கலந்து கொண்ட ஒன்றுகூடலில் அங்கத்துவ சங்கங்களின் தலைவர்கள், பெறுநர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.
சங்கப்பணியாளர்கள், முன்பள்ளி ஆசிரியர்களது நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. (63)

### யாழ்ப்பாணம் – பொன்னாலை வீதிக்காக காணி சுவீகரிப்பு

யாழ்ப்பாணம் பொன்னாலை வீதி அகலிப்பதற்கான முதற் கட்ட ஏற்பாடாக காணி சுவீகரிக்கும் நடவடிக்கை நடைபெறவுள்ளது. அதற்கான ஏற்பாடுகள் நிறைவடையும் கட்டத்தை அடைந்துள்ளன. குறிப்பாக சுவீகரிக்கப்படவிருக்கும் காணிகளுக்கான நில அளவை வரைபடம் தயாரிக்கும் நடவடிக்கைகள் அனைத்தும் நிறைவடைந்துள்ளன.
ஏற்கனவே காணிகள் சுவீகரிப்புத் தொடர்பாக உரிய சட்ட ஏற்பாடுகளுக்கு அமைவாக அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. பொதுமக்களின் கருத்துக்கள் மற்றும் ஆட்சேபனைகளைப் பெற்றுக்கொள்வதற்கும் அவகாசம் வழங்கப்பட்டது. தற்போது அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டுவருகிறது. இந்த வீதியை அகலித்து புனரமைப்புச் செய்வதற்கான அமைச்சரவை அனுமதி ஏற்கனவே கிடைத்துள்ளதாகவும் இந்த ஆண்டு புனரமைப்புப்பணிகள் ஆரம்பிக்கப்படும் என்றும் அதிகாரிள் தெரிவித்தனர்.



### சாலை விதிமுறை தொடர்பான விழிப்பூட்டல் செயலமர்வு

யாழ்ப்பாணம் பெப். 24
யாழ்ப்பாண அரச அலுவலகங்களில் கடமையாற்றும் சாரதிகளுக்கு காவல்துறையால் சாலை விதிமுறைகள் தொடர்பான விழிப்பு ணர்வூட்டும் செயலமர்வு நடத்தப்பட்டது.
வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணத்தை அடிப்படையாகக் கொண்டு வாகன விபத்துக்களைக் கட்டுப்படுத்திக் கொள்வதற்காக யாழ்ப்பாணப் பிரதேச அரச அலுவலகங்களில் கடமையாற்றும் சாரதிகளுக்கு சாலை விதிகள் பற்றிய விழிப்புணர்வூட்டும் செயலமர்வு யாழ்ப்பாணப் பொது நூலகக் கேட்போர் கூடத்தில்கடந்ததிங்கட்கிழமை நடைபெற்றது. ஆளுநர் செயலகமும் பொலிஸ் திணைக்களமும்இணைந்து ஒழுங்குபடுத்திய இந்த நிகழ்வுக்கு ஆளுநர் ரெஜினோல்ட் குரே தலைமை தாங்கினார். நிகழ்வில் ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், பிரதிப் பிரதமசெயலாளர்(ஆளணி), பிரதிப் பிரதம செயலாளர் (நிர்வாகம்), வடக்கு மாகாணப் போக்குவரத்து ஆணையாளர் ஆகியோர் கலந்துகொண்டனர். (எ-4)

### வலி.கிழக்கு பிரதேச சபை தவிசாளர் தெரிவில் இழுபறி

வலிகாமம்,பெப்.24
வலிகாமம் கிழக்கு பிரதேச சபைக்கான தவிசாளரைத் தெரிவு செய்வதில் தடங்கல். அடுத்தவாரத் தொடக்கத்தில் தவிசாளர் நியமனம் உறுதி செய்யப்படலாம் என கூறப்படுகின்றது.
யாழ்ப்பாண மாவட்டத்தில், தமிழ் தேசியக் கூட்டமைப்பு பெரும்பான்மையாக வெற்றி பெற்ற உள்ளூராட்சி சபைகளுக்கான தவிசாளர்கள் யார் என முடிவு செய்யப்பட்டுள்ள போதிலும் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் தவிசாளர் யார் என்பது முடிவு செய்யப்படவில்லை.
வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் தவிசாளர் பதவி, தமிழ் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ரெலோ அமைப்புக்கு என தேர்தலுக்கு முன்னரே முடிவு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரெலோ அமைப்பின் தெரிவுக்கு தமிழ் தேசிய கூட்டமைப்பு சந்தர்ப்பம் வழங்கியுள்ளது.
ரெலோ அமைப்பு உள்ளூர் அரசியலில் அறிமுகம் இல்லாத ஒருவரை தவிசாளராக நியமிப்பதற்கு முன்வந்த போதிலும் அந்தத் தெரிவுக்கு ரெலோ நிர்வாதிகள் மத்தியிலும் முழுமையான உடன்பாடு கிடைக்கவில்லை எனக் கூறப்படுகின்றது.
தவிசாளர் பதவி வழங்கப்படும் என்ற உறுதி மொழி வழங்கப்பட்டுரெலோ அமைப்பால் அபேட்சகராக நிறுத்தப்பட்டவர், தங்களுக்கு வாக்குறுதி வழங்கப்பட்ட பிரகாரம் தவிசாளர் பதவி வழங்க வேண்டும் என வலியுறுத்தி வருகின்றார்.
இறுதி முடிவு ஒருசில தினங்களில் உறுதி செய்யப்படும் என கூறப்படுகின்றது. (எ-11)

## மூதாட்டிகளிடம் நகை பறித்த பெண் பிணையில் விடுவிப்பு

சாவகச்சேரி,பெப்.24
சாவகச்சேரி.ஆதார மருத்துவமனை விடுதியில் தங்கியிருந்த மூதாட்டிகளை ஏமாற்றி அவர்களின் தங்க நகைகளை அபகரித்துச் சென்ற பெண்ணை கடந்த புதன்கிழமை காலை மருத்துவமனை வளாகத்தில் வைத்து பிடித்த பாதுகாப்பு அலுவலர்கள் பொலிஸாரிடம் ஒப்படைத்திருந்த நிலையில். அவர் விசாரணை யின் பின்னர் நீதிமன்றால் பிணையில் விடு விக்கப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.
கடந்த ஒக்டோபர் மாதம் விடுதியில் தங்கியிருந்த மூதாட்டியிடம், 'நீங்கள் எக்ஸ்ரே எடுக்கச் செல்ல வேண்டும்' நகைகள் மற்றும் பணம் இருந்தால் தந்து விட்டுச் செல்லுங்கள்' என்று கூறியுள்ளார். அங்கு கடமையாற்றம் ஊழியர் என நினைத்து தன்னிடமிருந்த பணம் அலைபேசி மற்றும் தங்க நகைகளை மூதாட்டி அவரிடம் ஒப்படைத்துள்ளார். ஏக்ஸ்-ரே அறைக்கு ஏற்றிச் செல்வதற்கு தள்ளுவண்டி எடுத்துச் வருவதாகக் கூறி பொருள்களுடன் சென்ற பெண் திரும்பி வராததால் விடுதி தாதிய அலுவலரிடம் தெரிவித்துள்ளார். எக்ஸ்-ரே எடுக்கும்படி தாங்கள் கூறவில்லையெனக் கூறியதால் தான் ஏமாற்றமடைந்ததை மூதாட்டி உணர்ந்துள்ளார்.
அதேபோல், கடந்த 12ஆம் திகதி அதே பெண் அதேவிடுதியில்தங்கியிருந்துரிக்கற் வெட்டி வீடு செல்ல ஆயத்தமாக இருந்த மூதாட்டிக்கு வெளிநோயாளர் பிரிவில் மருந்துகள் எடுத்துக் கொடுத்துவிட்டு அவர் அணிந்திருந்த ஒரு பவுண் நிறையுடைய தோடுகள் விழும் நிலையில் காணப்படுவதாகக் கூறி அவற்றைக் கழற்றச்செய்து அவற்றுக்கு வாசர் போட்டுவருவதாகக்கூறிஅவற்றுடன்தலைமறைவானார்.
இது தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட மருத்துவமனை நிர்வாகத்தினர் அங்கு பணிபுரியும் பாதுகாப்பு அலுவலர்களை விழிப்புடன் இருக்குமாறு அறிவுறுத்தியுள்ளனர். இந்த நிலையில் இரண்டாவது சம்பவம் இடம்பெற்ற வேளையில் மருத்துவமனை முதன்மை வாசலில் கடமையிலிருந்த பாதுகாப்பு அலுவலர், கடந்த புதன்கிழமை கடமையிலிருந்த வேளையில் மருத்துவமனைக்குள் சென்று திரும்பிய பெண்ணில் சந்தேகம் கொண்டு மற்ற பாதுகாப்பு அலுவலருடன் பிடித்து விசாரித்த போது முன்னர் இடம் பெற்ற திருட்டுக்களை தான் செய்ததாக ஒப்புக் கொண்டார். இதனையடுத்து மருத்துவமனை பொலிஸாரிடம் பெண் ஒப்படைக்கப்பட்டதையடுத்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.
விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் பெண்ணை நேற்றுமுன்தினம் சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தினர். வழக்கினை விசாரித்த நீதிவான் பெண்களின் வாழ்விடப் பதிவை உறுதிப்படுத்தி கிராம அலுவலரின் சான்றிதழை நீதிமன்றில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டு 2 லட்சம் ரூபா பிணையில் செல்ல அனுமதித்தார் எனவும் தெரிவிக்கப்பட்டது. (எ-9)

### தவக்கால இறைத்தியான வழிபாடு

சாவகச்சேரி,பெப்.24
சாவகச்சேரி புனித லிகோரியார் ஆலயத்தில் தவக்கால இறைத்தியான வழிபாடு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் இடம்பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. ஆலயபங்குத்தந்தை அருட்பணி றெக்ஸ் சௌந்தரா தலைமையில் நடைபெறும் வழிபாடுகளை இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள இரு அருட்பணியாளர்கள் நடத்தவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-9)

### பொதுக் கூட்டமும் பரிசளிப்பும்

வடமராட்சி,பெப்.24
உடுப்பிட்டி நாவலடி சிக்கனக் கடன் வழங்கு கூட்டுறவுச்சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டமும் ஓய்வுபெற்ற விஞ்ஞானக்கல்வி அதிகாரி அமரர் இ.வே செல்வரத்தினம் நிதியப் பரிசளிப்பும் நாவலடி முன்பள்ளி மண்டபத்தில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது. சங்கத்தின் தலைவர் கொ. குணசிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (எ)

### கள் வைத்திருந்த நால்வருக்கு தண்டம்

கிளிநொச்சி, பெப். 24
மேலதிகமாக கள்ளினை உடமையில் வைத்திருந்த நான்கு பேருக்கு 4ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதித்தது கிளிநொச்சி மாவட்ட நீதிவான் மன்று.
கிளிநொச்சி மாவட்டத்தின் மதுவரித் திணைக்களப் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் மேலதிகமாக கள்ளினை உடமையில் வைத்திருந்த நான்கு பேரை கைது செய்த மதுவரி திணைக்களத்தினர் அவர்களை நேற்றைய தினம் நீதிமன்றில் முற்படுத்தினர். இதில் 1500 மில்லி லீற்றர் கள்ளினை உடமையில் வைத்திருந்த நபருக்கு ஆயிரத்து500 ரூபா தண்டம் விதிக்கப்பட்டதுடன் ஏனைய ரூவருக்கும் தலா 1000 ரூபா தண்டம் விதித்து தீர்ப்பளித்தது கிளிநொச்சி மாவட்ட நீதிவான் மன்று. (எ-6)

# முனைக்காட்டில் இனந்தெரியாதோரால் மீனவர்களின் வலை,தோணிகள் எரிப்பு

மட்டக்களப்பு,பெப்.24

மட்டக்களப்பு, கொக்கட்டிச்சோலைகாவல்பிரிவுக்குட்பட்ட முனைக்காட்டுப் பகுதியில் அமைந்துள்ள ஆற்றங்கரையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மீனவர்களின் தோணி மற்றும் மீன்பிடிப்பதற்கான வலைகள் என்பன இனந்தெரியாதோரால் தீ வைக்கப்பட்டு எரிக்கப்பட்ட சம்பவம் நேற்று அதிகாலையில் இடம்பெற்றுள்ளது.

நேற்று வெள்ளிக்கிழமை என்பதால், மீன்பிடிக்குச் செல்லாமல் ஆற்றங்கரையில் தோணிகள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. நிறுத்தி வைக்கப்பட்டிருந்த தோணிகளில் மூன்று தோணிகளும், வலைகளும் அடுக்கி வைக்கப்பட்டு எரியூட்டப்பட்டுள்ளன. அதே வேளை இன்னும் மூன்று தோணிகள் அடுக்கப்பட்டு எரியூட்டப்பட்டுவதற்கானமுயற்சிகளும் இடம்பெற்றுள்ளன. இதற்கான தடயங்கள் காணப்படுகின்ற நிலையிலும் அந்தத் தோணிகள் எரியவில்லை.

அன்றாடம் மீன்பிடித்தொழில் செய்து வாழ்கின்ற மீனவர்களின் தோணிகளும், வலைகளுமே எரிக்கப்பட்டுள்ளன.

இச்சம்பவம் பற்றி மீனவர்கள் குறிப்பிடுகின்ற போது,

'சட்டவிரோத கசிப்பு உற்பத்திகள் ஆற்றை அண்டிய பகுதியிலும், களப்பு பகுதிகளிலும் நடைபெறுவதால் அவ்வாறான இடங்கள் அண்மைக்காலமாக தோணிகளின் உதவியுடனேயே முற்றுகையிடப்பட்டன. இதன் காரணமாக தமது தோணிகள் தீயூட்டப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகம் எழுகின்றது' எனத் தெரிவித்தனர்.

தோணிகள் மற்றும் வலைகள் எரித்தமை தொடர்பில், கொக்கட்டிச்சோலை காவல் துறையினர் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.(எ)

# நுவரெலியா அக்கல பிரதேசத்தில் கேரளக் கஞ்சாவுடன் ஒருவர் கைது

நுவரெலியா,பெப்.24

நுவரெலியா பொலிஸ்பிரிவிக்குட்பட்ட அக்கல பிரதேசத்தில் ஒரு தொகை கேரளக் கஞ்சாவுடன் ஒருவர் கைது செய்யபட்டுள்ளார் என நுவரெலியாப் பிரதேச அதிரடிப் படையினர் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இரவு 10 மணி அளவில் குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. சிறப்பு அதிரடிப் படையினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் அக்கல பிரதேசத்தில் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போதே குறித்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டார். குறித்த நபர் அக்கல் பிரதேசத்தைச் சேர்ந்தவர் என ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

கைது செய்யபட்ட சந்தேக நபர் நுவரெலியா பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

நுவரெலியா பொலிஸார் மற்றும் சிறப்பு அதிரடிப் படையினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத் தக்கது. (எ)

# மட்டக்களப்பில் நெத்தலி கருவாடு உற்பத்தி அதிகரிப்பு

மட்டக்களப்பு,பெப்.24

மட்டக்களப்பு மாவட்டத்தில் வறட்சியான வானிலை நீடிப்பதையடுத்து, நெத்தலிக் கருவாடு உற்பத்தியில் பெரும் எண்ணிக்கையிலான மீனவர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

தற்போதைய வானிலை காரணமாக தினமும் அதிகளவிலான நெத்தலி மீன்கள் பிடிபடுவதால் அவற்றைக் கருவாடாக மாற்றி, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் நடவடிக்கைகளில் உள்ளூர் வர்த்தகர்கள் ஈடுபட்டுள்ளனர் என்று மீனவர்கள் தெரிவித்தனர்.

நாவலடி, வாகரை, ஏத்துக்கால், பூநொச்சிமுனை, களுதாவளை உட்பட பல கரையோரப் பிரதேசங்களில் குறித்த நெத்தலிக் கருவாடு உற்பத்தி செய்யும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

மொத்த வியாபாரிகளுக்கு, ஒரு கிலோகிராம் நெத்தலிக் கருவாடு 750 ரூபாவுக்கு விற்பனை செய்கின்றனர். சந்தையில் ஒரு கிலோகிராம் நெத்தலி 1,000 ரூபா முதல் 1,300 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (எ)

# மக்களுக்கு சேவையாற்றுவதற்காகவே ஆளுநர் பதவியைப் பொறுப்பேற்றேன்

## கிழக்கு மாகாண ஆளுநர் தெரிவிப்பு



கிழக்கு மாகாணத்தில் அனைத்துமக்களுக்கும் இனமத வேறுபாடின்றி சேவையாற்றவே நான் ஆளுநர் பதவியைப் பொறுப்பேற்றேன். மாகாணத்திலுள்ள அனைத்துப் பகுதிகளுக்கும் சென்று மக்களின் பிரச்சினைகளை இனங்கண்டு தீர்த்து வைப்பேன் என்று கிழக்கு மாகாண ஆளுநர் ரோஹித போகொல்லாகம தெரிவித்தார்.

அம்பாறை மாவட்ட மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்வதற்காக அம்பாறை நகர சபை கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மக்கள் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்திலுள்ள மக்களின் பிரச்சினைகளை திருகோணமலை ஆளுநர் செயலகத்துக்கு வருகை தந்து கூற வேண்டிய நிலை ஏற்பட்டிருந்த போதிலும் மக்களுக்கு சிறந்த சேவையை வழங்கும் நோக்கில் அம்பாறை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களிலும் மக்கள் சந்திப்புக்களை நடத்தத் திட்டமிட்டுள்ளதாகவும் சுகாதாரத் துறை மற்றும் கல்வித்துறைகளை கிழக்கு மாகாணத்தில் அபிவிருத்தியடையச் செய்யவுள்ளதாகவும், அதற்காக வேண்டி பல திட்டங்களை முன்னெடுக்கவுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இந்தச் சந்திப்பின்போது கிழக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் அசங்க அபேவர்தன, ஆளுநரின் இணைப்புச் செயலாளர் நிமால் சோமரத்ன மற்றும் அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த அரச திணைக்கள அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ)

மட்டக்களப்பு மாவட்டத்தில்

# வறட்சி காரணமாக குளங்களின் நீர்மட்டம் குறைவடைந்துள்ளது

மட்டக்களப்பு,பெப்.24

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள கடும் வறட்சி காரணமாக, பெருமளவான நீர்ப்பாசனக் குளங்களில் நீர்மட்டம் வெகுவாகக் குறைவடைந்துள்ளது. இதனால் சிறுபோக வேளாண்மைச் செய்கை பாதிப்படைந்துள்ளது என கமநல அபிவிருத்தி திணைக்களத்தின், மாவட்டப் பிரதி ஆணையாளர் எம். சிவலிங்கம் தெரிவித்தார்.

இந்த மாவட்டத்தில் 420 சிறிய நீர்ப்பாசனக்குளங்கள் உள்ளன. இவற்றுள் 200 குளங்களிலிருந்து நெற்செய்கைக்கான நீர் பெறப்படுகின்றது. தற்போது நிலவும் வறட்சி காரணமாக, இந்தக் குளங்களின் நீர்மட்டம் குறைவடைந்துள்ளது. இதனால் வயல்நிலங்களுக்கு நீரைப்பெறமுடியாத சூழல் ஏற்பட்டிருக்கின்றது என, அவர் மேலும் தெரிவித்தார்.

இங்குள்ள கொக்கட்டிச்சோலை, வவுணதீவு வெல்லாவெளி, கிரான், செங்கலடி உட்பட பல பிரதேச செயலகப்பிரிவுகளில் குளத்து நீரை நம்பி விவசாயிகள், சிறுபோக நெற்செய்கையை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(எ)

## துறைசார்...

களை இந்திய அரசு வழங்கும் .

இவ்வாறு இந்திய சித்த மருத்துவர் ஜி.செந்தில் வேல் தெரிவித்தார்.

கைதடி சித்த மருத்துவ வளாகத்தில் ஐந்து நாள்களைக் கொண்ட முதலாவது பன்னாட்டுச் சித்தமருத்துவ ஆய்வு மாநாடும் கண்காட்சியும் நேற்று ஆரம்பமானது. அதில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

சித்த மருத்துவம் என்பது எமது வாழ்க்கையுடன் தொடர்புபட்டது. அதைப்பற்றி ஆராய்ந்து பல்வேறு விடயங்களை நாம் கண்டறிய வேண்டும். ஆய்வுகளை மேற்கொள்வது சுலபமல்ல. அதற்கான வளங்கள் எம்மிடம் இருக்க வேண்டும். யாழ்ப்பாணத்தில் எல்லோரும் அதற்காகப் பாடுபடுவதை நான் காண்கின்றேன். அவர்களுக்கான அங்கீகாரம் கிடைக்க வேண்டும்.

நாம் அனைத்து உதவிகளையும் செய்யத் தயாராக உள்ளோம். கலைகளுடன் கூடிய மருத்துவம் இது. இதன் மூலமாகவும் மருந்துகள் மூலமாகவும் அதற்குச் சிகிச்சை அளிக்கலாம். மருந்துகள் இல்லாமலும் சிகிச்சை அளிக்கலாம். மனவளக்கலை, யோகா கலை என்பன மருந்துகள் இல்லாமல் சிகிச்சை அளிக்கும் முறைகளாகும். அவற்றில் ஒரு விடயத்தை நாம் முழுமையாகப் பெறவேண்டும். நாம் தற்போது மலேசிய அரசுடன் ஒப்பந்தம் மேற்கொண்டு அங்கே ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றோம்.

**இலங்கை மற்றும் இந்தியாவுக்கிடையே துறைசார்ந்த ஒப்பந்தம் செய்தால் அதிகளவான உதவிகளை இங்குள்ளவர்கள் பெறலாம்.** அதற்கு இந்திய அரசு தயாராக உள்ளது. காரணம் இதுவும் பன்னாடுகளுடனான ஒரு ஒப்பந்த முறையே. ஆய்வு ஒன்றை மேற்கொள்வதற்கு 5 கோடி ரூபா வரையில் செலவாகும். அதனை இங்கும் மேற்கொள்ளலாம். ஒவ்வொரு வருடமும் ஐந்து மாணவர்கள் இங்கிருந்து பட்டப்படிப்புக்காக இந்தியாவுக்கு அழைக்கப்படும் வாய்ப்பும் ஏற்படும். அத்துடன் பட்ட நெறித்துறையை இங்கு ஆரம்பிப்பதற்கும், அதற்கான பேராசிரியர்களை உள்வாங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கக் கூடியதாக இருக்கும். இங்கே உள்ள துறை சார்ந்தவர்கள் இந்த ஒப்பந்த நடவடிக்கையில் கைச்சாத்திட வழிவகைகள் செய்ய வேண்டும்.

இலங்கையின் முதலாவது சித்த மருத்துவ பல்கலைக் கழகம் இது. பதஞ்சலி, திருமூலர் ஆகியோர் எமக்குத் தந்த வரம் இந்த சித்த மருத்துவம். ஆனால் திருமூலரை நாம் மறந்து விட்டோம். அவர்கள் தந்த வரப் பிரசாதங்கள் இங்கே எம்மிடம் உள்ளன. பன்னாட்டு அளவில் இங்கு நடைபெறும் இந்த ஆய்வரங்கு அனைத்து நாடுகளுக்கும் தெரியப்படுத்தப்பட்டு வரலாற்றில் பொறிக்கப்படும்- என்றார்.

யாழ்ப்பாண பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் இ.விக்னேஸ்வரன் உரையாற்றினார்.

அவர் தெரிவித்ததாவது:

சித்த மருத்துவத் துறைக்கு நல்ல ஒரு ஆரம்பமாக இந்த நிகழ்வு அமையும். இந்தத் துறையை விரிவுபடுத்துவதற்கு நாம் என்ன செய்ய வேண்டும் என்று யோசிக்க வேண்டும். அதற்கு மருத்துவர் ஜி.செந்தில்வேல் கூறிய துறைசார்ந்த ஒப்பந்தம் இரண்டு நாடுகளுக்குமிடையே கைச்சாத்திட்டால் நன்மை பயக்கும். இந்த விடயம் தொடர்பில் சாதகமாக ஆராய்ந்து உரிய நடவடிக்கை எடுக்க முயற்சிப்போம்-என்றார். (ற-4,ரி)

## புரிந்துணர்வு...

சபைகளை விட ஏனைய கட்சிகள் கூடிய ஆசனங்களைப் பெற்ற பல சபைகளில் ஆட்சி அமைக்க உரிமை கோருவதற்கு முடிவு செய்துள்ளது.

வடக்கில் உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சி அமைக்க முடியாத தொங்கு நிலை ஏற்பட்டுள்ளது. இந்தப் பிரச்சினையில் சிவில் சமூகத்தினர் தலையிட்டனர். எந்தக் கட்சி கூடிய ஆசனங்களைப் பெற்றுள்ளதோ, அவர்கள் அந்தச் சபைகளில் ஆட்சி அமைப்பது என்றும் ஏனைய கட்சிகள் அதனைக் குழப்பாமல் இருப்பது என்ற புரிந்துணர்வு சிவில் சமூகத்தால் சகல கட்சிகளிடமும் முன்வைக்கப்பட்டது.

ஆனால் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, யாழ்ப்பாணம் மாநகர சபை, கரவெட்டிப் பிரதேச சபை, நல்லூர்ப் பிரதேச சபை என்பவற்றில் ஆட்சி அமைக்க உரிமை கோரும் என்று தெரிவித்திருந்தது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, முன்னணி கூடிய ஆசனங்களைக் கைப்பற்றிய பருத்தித்துறை நகரசபை, சாவகச்சேரி நகர சபை என்பவற்றில் ஆட்சியைக் கைப்பற்ற உரிமை கோரும் என்று கூறியிருந்தது.

கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. அதில் சிவில் சமூகம் முன்வைத்த புரிந்துணர்வின் அடிப்படையில் கூட்டமைப்பு செயற்படுவது என்ற தீர்மானம் எடுக்கப்பட்டது.

கூட்டமைப்பின் இந்த நிலைப்பாடு தொடர்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அமைப்பாளர் சட்டத்தரணி வி.மணிவண்ணனிடம் கேட்டோம்.

"கூட்டமைப்பின் நிலைப்பாட்டை ஏற்றுக் கொள்ள முடியாது. சபைகளில் ஆட்சி அமைப்பது தொடர்பில் முடிவெடுக்கும் உரிமையை, சபை உறுப்பினர்களிடமே வழங்கவேண்டும். அரசியல் கட்சிகள் அதனைத் தீர்மானிக்கக் கூடாது.

உள்ளூராட்சி சபையில் நிர்வாகத்தை நடத்த அந்தச் சபையில் உள்ள உறுப்பினர்களின் பெயர்களில் யாரையும் முன்மொழிய முடியும். அதற்கான சட்ட ஏற்பாடுகளும் உள்ளன. சபைகளில் உள்ள உறுப்பினர்களே யார் நிர்வகிக்க வேண்டும் என்பதைத் தீர்மானிக்க வேண்டும். நாம் யாழ்ப்பாண்ம் மாநகர சபை, நல்லூர் பிரதேச சபை உட்பட ஐந்து சபைகளை நிர்வகிப்பதில் உறுதியாக உள்ளோம். மேலும் சில சபைகளை நிர்வகிப்பது தொடர்பில் முயற்சி எடுத்து வருகின்றோம்-"என்றார். (ற-5,8)

## மகாஜனவின்...

நாள்களைக் கொண்ட டெஸ்ட் ஆட்டத்தில் நேற்றைய முதல்நாளில் மகாஜனக் கல்லூரியின் வீரர் தயுஸ்ரன் 7 இலக்குகளை வீழ்த்தினார்.


தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் ஆட்டம் இடம்பெற்று வருகிறது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மகாஜனக் கல்லூரி அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தவரோதயக் கல்லூரி 233 ஓட்டங்களைக் குவித்தது. பந்துவீச்சில் தயுஸ்ரன் 7 இலக்குகளை வீழ்த்தினார்.

பதிலுக்குத் தனது முதலாவது இன்னிங்ஸை ஆரம்பித்த மகாஜனக் கல்லூரி அணி, நாள் முடிவில் 2 இலக்குகளை இழந்து 93 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

(தொடர்புடைய செய்தி - பக்கம் 27)

## போதுமான அரிசி கையிருப்பில்

கொழும்பு, பெப். 24
நாட்டுக்குத் தேவையான போதுமான அரிசி கையிருப்பில் காணப்படுவதாக சதொச மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் விற்பனையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.
பெரும்போக அரிசி தற்சமயம் சந்தைக்குக் கிடைக்கின்றது. இதற்கு மேலதிகமாக இறக்குமதி செய்யப்பட்ட அரிசியும் சந்தையில் காணப்படுகின்றது. இதனால் புதிதாக அரிசி இறக்குமதி செய்யப்பட மாட்டாது என்று சதொச நிறுவனத்தின் தலைவர் மொஹமட் றிஸ்வான் தெரிவித்துள்ளார். (5)



நன்றி: டெய்லிமிரர்

## எதிர்க்கட்சித் தலைவராவதற்கு
# மகிந்த சு.க. உறுப்பினர் பதவியையும் துறப்பார்

### பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவிப்பு

மகிந்த ராஜபக்ச சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினராக இருப்பது தான் எதிர்க்கட்சி தலைமைத்துவத்தை அவருக்கு வழங்குவதற்கு இடையூறாக இருக்குமாக இருந்தால் அதனை நீக்கினாலும் எந்தப் பிரச்சினையும் இல்லை என்று பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:
எதிர்கட்சித் தலைமைத்துவத்தை முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவுக்கு வழங்குமாறு வலியுறுத்துகின்றோம். எதிர்க் கட்சித் தலைமைத்துவத்தை ஒப்படைப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தயாராக இல்லை. ஆனால் நாம் இந்த விடயத்தில் அசாதாரணமாகஇருக்கப்போவதில்லை. மகிந்த ராஜபக்ச சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினராக உள்ளார். அதன் காரணமாக அவருக்கு எதிர்க் கட்சித் தலைமைத்துவத்தை வழங்க முடியாது என்று கருத்தையும் ஒரு சாரார் முன்வைத்துள்ளனர்.
அது தான் அவர் எதிர்க் கட்சித் தலைமைத்துவைத்தை ஏற்பதற்கு தடையாக இருக்குமாக இருந்தால் சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து அரச தலைவர் மைத்திரிபால, மகிந்தவை தாராளமாக நீக்கலாம்- என்றார். (5,31)

# உதயங்கவுக்கு எதிராக சிவப்பு அறிவித்தல்

*கொழும்பு, பெப். 24*
*ரஷ்யாவுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்கவுக்கு எதிராக பன்னாட்டுப் பொலிஸாரின் சிவப்பு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.*

இலங்கை அதிகாரிகளின் கோரிக்கைகளை அடுத்து, பன்னாட்டுப் பொலிஸாரால் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார்.
மிக் போர் வானூர்திக் கொள்வனவில் இடம்பெற்ற மோசடிகள் தொடர்பாக விசாரணைகளை நடத்தி வரும் பொலிஸார், உதயங்க வீரதுங்கவுக்கு அழைப்பாணை விடுத்திருந்தும், அவர் விசாரணைகளுக்கு முன்னிலையாகாத நிலையில் நீதிமன்றத்தின் ஊடாக இந்தப் பன்னாட்டுப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.
உதயங்க வீரதுங்க கடந்த 4ஆம் திகதி டுபாய் வழியாக அமெரிக்கா செல்ல முயன்றபோது, தடுத்து நிறுத்தப்பட்ட போதிலும், பன்னாட்டுப் பொலிஸாரின் சிவப்பு ஆணை பிறப்பிக்கப்படாததால், அவரைக் கைது செய்து இலங்கைக்கு



கொண்டு வரும் முயற்சிகள் தோல்வியடைந்தமை குறிப்பிடத்தக்கது. (5)

## அமைச்சரவை மாற்றத்தில்
# மனோவுக்கு கனதியான அமைச்சு வழங்குங்கள்

### கொழும்பு இந்து இளைஞர் மன்றம் கோரிக்கை

கொழும்பு, பெப். 24
தமிழ் மக்களுக்குச் சேவை செய்யக் கூடிய சிறப்பான அமைச்சை அமைச்சர் மனோகணேசனுக்கு, இடம்பெறவுள்ள அமைச்சரவை மாற்றத்தின்போது வழங்குமாறு கொழும்பு இந்து இளைஞர் மன்றம் கோரிக்கை விடுத்துள்ளது.
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருக்கு, இந்து இளைஞர் மன்றத்தின் தலைவர் மற்றும் செயலர் இணைந்து கையெழுத்திட்டு அனுப்பி வைத்துள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறப்பட்டுள்ளது.
அதில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:
மனோ கணேசன் இந்த நல்லாட்சி அரசு அமையப் பெற காரண கர்த்தாவாக விளங்கியவர். அவரது பெரிய பங்களிப்புக் காரணமாகவே நல்லாட்சி அரசு தோற்றம்பெற்றது. இதனை சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் என்று முழு நாட்டு மக்களுமே நன்கறிவர். அவரது நல்லெண்ணத்துக்கும், நாட்டின் அமைதிக்காக அவர் முன்னெடுத்த பெரிய முயற்சிக்கும் கடந்த இரண்டு ஆண்டுகள் அவருக்கு வழங்கப்பட்டிருந்த அமைச்சுப் பதவியானது எவ்வகையிலும் பொருத்தமற்றது.
நல்லாட்சி அரசு தோற்றம் பெறுவதற்கு எதிராக நின்று செயற்பட்டதுடன், தமிழ் மக்களுக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும், திரைமறைவிலும் எதிராகச் செயற்பட்டவர்களுக்கும் தமது சமூகங்களை உயர்நிலைப் படுத்தவும், தமது சமூகத்தவர்களுக்கு விரும்பியவாறு வேலை வாய்ப்புக்களை வழங்கவும், தமது சமூக மக்கள் வாழும் பிரதே சங்களை விரும்பியவாறு அபிவிருத்தி செய்யவும் தேவையான வளங்களையும், வசதிகளையும் கொண்ட அமைச்சுப் பொறுப்புக்கள் வழங்கப்பட்டிருந்தன. இது மிகவும் வேதனை தந்த விடயமாக அமைந்திருந்தது. இதனை இனி மாற்றியமைக்க வேண்டும் - என்றுள்ளது. (5)

# எதிராளி முகத்தில் கொதிநீர் ஊற்றிய பெண் பொலிஸ்

கொழும்பு, பெப். 24
வாய்த் தர்க்கம் காரணமாக எதிராளியின் முகத்தில் கொதி நீரை ஊற்றிக் காயப்படுத்திய பெண் பொலிஸ் அதிகாரியொருவரைக் கைது செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது.
வெல்லம்பிட்டி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மீதொட்டமுல்லை பிரதேசத்தில் வசிக்கும் ஓய்வுபெற்ற பெண் பொலிஸ் அதிகாரியான பத்மா மங்கலிகா தன்னுடன் வாய்த் தர்க்கம் புரிந்த குமுதுனி என்ற பெண் மீது கொதி நீரைக் கொட்டியுள்ளார். அவரின் முகம் வெந்து காயப்பட்டுள்ளது.
சம்பவம் தொடர்பில் அவர் பொலிஸில் முறைப்பாடு செய்து வழக்குத் தொடர்ந்துள்ளார். வழக்கு கொழும்பு மேலதிக நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது சந்தேக நபரான முன்னாள் பெண் பொலிஸ் அதிகாரி நீதிமன்றத்தில் முன்னிலையாகாத நிலையில் அவரைக் கைது செய்து நீதிமன்றத்தில் முற்படுத்துமாற நீதிபதி ரங்க திசாநாயக்க உத்தரவிட்டுள்ளார். (5)



### அட! அப்படியா சங்கதி!!
## பொருத்தமானவர்களை பொருத்தமான இடத்துக்கு அழையுங்கள்

இப்போது பாடசாலைகளில் விளையாட்டுப் போட்டி 'சீசன்' முடியும் நிலையில் உள்ளது. பெரும்பாலும் அரசியல்வாதிகளே பிரதம விருந்தினர்களாக பாடசாலைகளால் அழைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். விளையாட்டுப் போட்டிக்கு அதற்குப் பொருத்தமானவர்களை அழைக்கவேண்டும். ஆனால், இங்கோ பாடசாலை அபிவிருத்திக்கு நிதி கொடுத்தவர், பாடசாலைக்கு மதில் கட்டிக் கொடுத்தவர் என்று வரையறை இல்லாமல் பிரதம விருந்தினராக பொருத்தமில்லாதவர்கள் அழைக்கப்படுகின்றனர்.
சென்னை 600028 படத்தில் ஒரு காட்சி வரும். கிரிக்கெட் போட்டியின் ஆரம்ப விழாவுக்கு பிரதம விருந்தினராக உள்ளூர் அரசியல்வாதியான சண்முகசுந்தரம், நாணயத்தைச் சுழற்றுவார். நடிகர் சிவா நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்றதும், 'போலிங்கா, பீல்டிங்கா' என்று சண்முகசுந்தரம் சிவாவிடம் கேட்பார். கிரிக்கெட்டைப் பற்றித் தெரியாத ஒருவரை அழைத்தால் இப்படித்தான்.
அரியாலையில் பாடசாலை ஒன்றின் விளையாட்டுப் போட்டி மிக அண்மையில் நடைபெற்றது. பிரதம விருந்தினராக நியமன அரசியல்வாதி ஒருவர் அழைக்கப்பட்டிருந்தார். அவருக்கு நேரமில்லை. அவர் தனது தந்தையை நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக அனுப்பி விட்டார். அவர் இப்போதுதான் அரசியலுக்குள் உத்தியோகபூர்வமாக நுழைந்திருக்கின்றார். விளையாட்டுப் போட்டியை ஆரம்பித்து வையுங்கள் என்று அறிவிப்பாளர் கூறிவிட்டு ஒலிவாங்கியை அவரின் கையில் கொடுத்ததும், ஒலிவாங்கியைப் பொத்திக் கொண்டு, நான் என்ன சொல்ல வேண்டும் என்று அந்த அறிவிப்பாளரிடமே பிரதம விருந்தினராக வந்த அந்தப் 'புதுஅரசியல்வாதி' கேட்டாராம்.
பொருத்தமானவர்களை அழைக்கவேண்டும். நிகழ்வுக்கு வருபவர்களும், தாங்கள் அந்த நிகழ்வுக்கு பொருத்தமானவர்களா என்பதையும் சீர்தூக்கிப் பார்த்துவிட்டுப் பங்கேற்கவேண்டும்.

## மாகாண சபைத் தேர்தல்:
# விகிதாசார முறையில் நடத்த ஐக்கிய தேசியக் கட்சி ஆர்வம்

கொழும்பு, பெப். 24
மாகாணசபைத் தேர்தல்களை விகிதாசார முறைப்படியே நடத்துவது குறித்து ஐக்கிய தேசியக் கட்சி ஆராய்ந்து வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.
உள்ளூராட்சித் தேர்தல்களின் போது கடைப்பிடிக்கப்பட்டது போன்ற, கலப்பு முறையிலான தேர்தல் முறையை மாகாணசபைத் தேர்தல்களின் போதும் அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.
50 வீத உறுப்பினர்களை தொகுதி முறையிலும், 50 வீத உறுப்பினர்களை விகிதாசார முறையிலும் தெரிவு செய்யும் வகையில் புதிய கலப்பு தேர்தல் முறையை கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.
இதற்காக மாகாணசபைகளுக்கான தேர்தல் தொகுதிகளை வரையறை செய்வதற்கான குழுவொன்றும் அமைக்கப்பட்டு அதன் அறிக்கையும் பெறப்பட்டுள்ளது.
அதேவேளை, புதிதாக உள்ளூராட்சித் தேர்தலில் அறிமுகப்படுத்தப்பட்ட கலப்பு தேர்தல் முறையினால், ஆளும் கட்சிகள் தோல்வியைத் தழுவியுள்ள அதேவேளை, இந்த தேர்தல் முறை குழப்பங்களையும் ஏற்படுத்தியுள்ளது.
இதனால், ஏற்கனவே நடைமுறையில் இருந்த விகிதாசாரப் பிரதிநித்துவ முறைப்படியே தேர்தலை நடத்துவது குறித்து ஐக்கிய தேசியக் கட்சி ஆராய்ந்து வருவதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (5)

## ஒப்பந்தத்தை

# இரகசியமாகவேனும் வெளிப்படுத்துங்கள்

### சபையில் கெஞ்சிய மகிந்த அணி

கூட்டு அரசை நீடிப்பது தொடர்பான ஒப்பந்தத்தை வெளிப்படுத்தக்கூறி நாடாளுமன்றத்தில் ஆளும், எதிர் தரப்பினரிடையே வாக்குவாதம் ஏற்பட்டது. ஒப்பந்தத்தைப் பகிரங்கமாக வெளிப்படுத்த முடியாவிடின் இரகசியமாகவேனும் வெளிப்படுத்துங்கள் என்று மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்தன சபையில் கோரிக்கை விடுத்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் ஒழுங்குப் பிரச்சினை எழுப்பிய தினேஸ் குணவர்தன மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியானது பல கூட்டணிக் கட்சிகளுடன் இணைந்த முன்னணியாகும். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஒரு கட்சியான சிறிலங்கா சுதந்திர கட்சி கூட்டு அரசை முன்னெடுப்பதில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஒப்பந்தம் ஒன்றை முன்னெடுத்துள்ளது என்று கூறியுள்ளது. அரசமைப்பின் 46ஃ4 உறுப்புரிமையின் பிரகாரம் இரண்டு தரப்பினரும் உடன்படிக்கையை முன்னெடுத்துச் செல்வதாக சபையில் தெரிவித்தனர்.

இந்த விடயத்தில் மேலும் குழப்பங்கள் உள்ளன. இதில் பிரதான கட்சியுடன் ஏனைய கட்சிகள் இணைந்து செயற்படுமாயின் நாடாளுமன்றத்தில் உடன்படிக்கை குறித்து வெளிப்படுத்த வேண்டும். சபை அனுமதியினை பெற வேண்டும். கூட்டு அரசை முன்னெடுப்பது குறித்து எந்தவொரு எழுத்து ஆவணமும் சபையில் சமர்ப்பிக்கப்படவில்லை. ஒப்பந்தம் இருந்தால் மாத்திரமே கூட்டு அரசு ஏற்றுக்கொள்ளப்படும். செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கையில் இரகசியத்தன்மை இருக்குமாயின் சபாநாயகரிடம் ஒப்படைத்து ஆவணத்தைப் பார்க்கக் கோரிக்கைவிடும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மாத்திரம் வெளிபடுத்துவது சபாநாயகரின் கடமையாகும். எமது கோரிக்கைக்கு தெளிவான தீர்வை சபாநாயகர் பெற்றுத்தர வேண்டும் - என்றார்.

சபை முதல்வர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்ததாவது. கூட்டு அரசு தொடர்பில் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க சபையில் தெளிவுபடுத்தியுள்ளார். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நிலைப்பாட்டை முன்னணியின் செயலர் மகிந்த அமரவீர தெளிவுபடுத்தியுள்ளார். கூட்டு அரசு இப்போதும் உள்ளது. ரணிலும், மகிந்த அமரவீரவும் கூறியதை சபையில் ஏற்றுகொள்ள வேண்டும். அதை விடுத்து தொடர்ந்தும் இதனைப் பிரச்சினையாக கருதி குழப்புவது நியாயமற்ற செயற்பாடாகும் என்றார்.

மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ், கூட்டு அரசை நீடிப்பது குறித்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி செயலர் மகிந்த அமரவீர சபையில் தெரிவித்திருந்தார். நாடாளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்த்தனவும் அதே கட்சியின் முக்கிய நபர். அவரின் கோரிக்கையை முக்கியத்துவம் விளங்கி செயற்பட வேண்டும். கூட்டு அரசை நீடிப்பது அல்லது முறிப்பது குறித்து எமக்குப் பிரச்சினை இல்லை. ஆனால் கூட்டு அரசு அடுத்த சில கால கட்டத்துக்கு செயற்படுவது குறித்து செய்துகொள்ளப்பட்ட இருதரப்பு ஒப்பந்தத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும் - என்றார்.

மற்றொரு மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரசிறி கஜதீர தெரிவித்ததாவது, நாமும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர்களாகவே இன்றும் செயற்பட்டு வருகின்றோம். இந்த உடன்படிக்கை என்னவென்பது குறித்து தெரிந்து கொள்ள எமக்கும் அதிகாரம் உள்ளது. இன்று வார்த்தைகளில் கூறும் வாக்குறுதிகள் நாளை மாறிவிடும். கூட்டு அரசில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அங்கம் வகிக்கின்ற நிலையில் அதன் உறுதித் தன்மையை வெளிப்படுத்த வேண்டும். தெளிவான உடன்படிக்கை ஆவணம் இருக்குமாயின் அதனை சபையில் வெளிப்படுத்த வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் சபாநாயகரின் பதவியையும் கூட ஏற்றுக் கொள்ள முடியாது. அரசு இல்லையென்றால் அனைத்துமே இல்லையென்று அர்த்தப்படும் என்று குறிப்பிட்டார்.

'இன்று நாடாளுமன்றத்தில் தொடர்ச்சியாக கேள்வி எழுப்பும் மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒரு வாரத்துக்கு முன்னர் சிறிலங்கா சுதந்திர கட்சியுடன் இணைந்து அரசை அமைப்பதாகக் கூறினார்கள். சிறிலங்கா சுதந்திர கட்சியின் உறுப்பினர் நிமல் சிறிபால டி சில்வாவை தலைமை அமைச்சராக நியமிக்க உதவுவதாக இவர்கள் கூறினார்கள். இந்த முயற்சியை நாம் தோற்கடித்த காரணத்தினால் தான் இன்று இவர்கள் அனைவரும் முதலைக் கண்ணீர் வடிக்கின்றனர். நீங்கள் விரும்பினால் கூட்டு அரசில் இணைந்துகொள்ள முடியும். நீங்களும் சிறிலங்கா சுதந்திர கட்சி உறுப்பினர்கள்' என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார். (5,31)

## உள்ளூராட்சித் தேர்தலில்

# 4,544 வட்டாரங்களில் 534 பெண்கள் வெற்றி



கொழும்பு, பெப். 24

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சித் தேர்தலில் 4 ஆயிரத்து 544 வட்டாரங்களில் 534 பெண்கள் வெற்றி பெற்றுள்ளனர். 2011 ஆம் உள்ளூராட்சித் தேர்தலுடன் ஒப்பிடுகையில், இது 8 சதவீத அதிகரிப்பு. இவ்வாறு தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

பெண்களின் பிரதிநிதித்துவம் சபைகளில் 25 சதவீதமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. வட்டாரங்களில் போட்டியிட்ட பெண்களில் 10 சதவீதத்தினர் வெற்றி பெற்றுள்ளனர். எவ்வாறெனினும் கடந்த தேர்தலில் விருப்பு வாக்குமுறை நடைமுறையில் இருந்த போது இரண்டு வீதப் பெண்களே தேர்ந்தெடுக்கப்பட்டனர். இம்முறை அது 10 வீதமாக அதிகரித்திருப்பது மகிழ்ச்சிக்குரியதும் வரவேற்கத்தக்கதுமாகும்.

யாழ்ப்பாணம் 21, கிளிநொச்சி 4, மன்னார் 3, வவுனியா 4, முல்லைத்தீவு 4, திருகோணமலை 7, மட்டக்களப்பு 8, அம்பாறை 26 என்ற அடிப்படையில் பெண்கள் வட்டாரங்களில் வெற்றி பெற்றுள்ளனர் - என்றார். (5)



# கூட்டு அரசைத் தொடர்வதில் எந்தச் சட்டச்சிக்கலும் இல்லை

### கரு அறிவிப்பு

கொழும்பு, பெப். 24

கூட்டு அரசில் அங்கம் வகிக்கும் இரு பிரதான கட்சிகளும் ஒன்றிணைந்து பயணிப்பதாக அறிவித்துள்ளன. கூட்டு அரசைக் கொண்டு செல்வதில் எந்தவொரு சட்டச் சிக்கலும் இல்லை என்று எனக்குச் சட்ட ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு சபாநாயகர் கரு ஜயசூரிய சபையில் தெரிவித்தார்.

கூட்டு அரசைக் கொண்டு செல்வது தொடர்பில் நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வாக்குவாதத்தின்போதே சபாநாயகர் மேற்கண்டவாறு கூறினார்.

'கூட்டு அரசைத் தொடர்ந்து கொண்டு செல்வதாயின் அதற்குரிய ஒப்பந்தத்தை நாடாளுமன்றத்துக்குச் சமர்பிக்க வேண்டும். இல்லையேல் கூட்டு அரசைத் தொடர்ந்து கொண்டு செல்ல முடியாது' இவ்வாறு மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர்களான தினேஸ் குணவர்தன, சந்திரசிறி கஜதீர ஆகியோர் வலியுறுத்தினர்.

சபை முதல்வர் லக்ஸ்மன் கிரியெல்ல எதிர்கட்சியினரின் வாதத்தை மறுதலித்தார்.

இந்த வாக்குவாதத்தின் போது சபாநாயகர் கரு தனது நிலைப்பாட்டை சபைக்குத் தெரியப்படுத்தினார். கூட்டு அரசில் அங்கம் வகிக்கும் இரு பிரதான கட்சிகளும் ஒன்றிணைந்து பயணிப்பதாக அறிவித்துள்ளன. ஆகையால் கூட்டு அரசைக் கொண்டு செல்வதில் எந்தவொரு சட்டச் சிக்கலும் இல்லை என்று எனக்குச் சட்ட ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது, என்று குறிப்பிட்டார். (5,31)

# 'ரப்' வழங்கும் திட்டம் தற்காலிகமாகவே நிறுத்தம்

### கல்வி அமைச்சர் அகிலவிராஜ் தெரிவிப்பு

கொழும்பு, பெப். 24

உயர்தரப் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்களுக்கான 'ரப்' வழங்கும் திட்டம் தற்காலிகமாகவே இடைநிறுத்தப்பட்டுள்ளது. எதிர்வரும் காலங்களில் அந்தத் திட்டத்தை மீள ஆரம்பிப்போம் என்று கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின் போது டலஸ் அழகப்பெரும எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

'உயர்தரப் பாடசாலை மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்குமான 'ரப்' வழங்கும் திட்டம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. இதனால் மாணவர்களின் எதிர்பார்ப்புகள் முழுமையாக இல்லாமல் போயுள்ளன. இந்தத் திட்டம் முற்றாக நீக்கப்பட்டதா ?' என்று டலஸ் கேள்வி எழுப்பினார்.

இந்தக் கேள்விக்கு கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் பதில் வழங்கினார். அவர் அதில் தெரிவித்ததாவது, உயர்தர பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்களுக்கான 'ரப்' கணினி வழங்கும் திட்டம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. எதிர்வரும் காலங்களில் அந்தத் திட்டத்தை மீள ஆரம்பிப்போம்.

அமைச்சரவையால் பரிந்துரைக்கப்பட்ட 'ரப்' கணினி மாதிரியையே நாம் தேர்ந்தெடுத்தோம். இதில் மோசடிகள் ஏற்பட வாய்ப்பு இல்லை. நாம் அனைத்து



நடவடிக்கைகளையும் உரிய ஒழுங்கு முறைமையின் பிரகாரமே செயற்படுத்தினோம். தற்போது பாடசாலைகளில் வேறு பல குறைபாடுகளை நிவர்த்தி செய்ய வேண்டியுள்ளமையினால் இந்தத் திட்டத்தைத் தற்காலிகமாக இடைநிறுத்தினோம். இதனை மீண்டும் ஆரம்பிப்போம். ஏனெனில் கணினி தொழில்நுட்பத் துறையுடன் கூடிய கல்வியை நாம் கட்டியெழுப்ப வேண்டும் - என்றார். (5,61)

# உள்ளூராட்சித் தேர்தலால் நான் களைத்துவிட்டேன்

### ஆணையாளர் மகிந்த தெரிவிப்பு

உள்ளூராட்சித் தேர்தல்கள் தம்மைக் களைப்படைய வைத்து விட்டதாகவும், தமக்கு ஓய்வு தேவைப்படுகிறது என்றும் தெரிவித்துள்ளார் தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர் மகிந்த தேசப்பிரிய.

கொழும்பில் நடத்திய செய்தியாளர்கள் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

உள்ளூராட்சித் தேர்தல்கள் தொடர்பான வேலைகளை மேற்கொண்டு நான் மிகவும் களைத்து விட்டேன்.

இந்த வேலைகளையெல்லாம் யாரிடமாவது கொடுத்து விட்டு, குறைந்தது ஒரு மாதத்துக்கு விடுமுறையில் சென்று ஓய்வெடுப்பதே நல்லது என்று நினைக்கிறேன். இதற்கு அரசமைப்பு இடமளித்திருக்கிறது.

உள்ளூராட்சித் தேர்தல்களில் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் விவரங்களை அரசிதழில் வெளியிட்ட பின்னர், இதுபற்றி நான் யோசிக்கவுள்ளேன்.

வேறு காரணங்கள் எதுவுமில்லை. நான் மிகவும் களைத்துப் போய் விட்டேன், என்றும் அவர் சலிப்புடன் கூறினார். (5)

# தமிழருக்கு மாத்திரம் நல்லிணக்கப் பரப்புரை

## செய்வதாக புதிய அலைவரிசை இருக்கக் கூடாது என்கிறார் மனோ

கொழும்பு, பெப். 24
ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தால் ஆரம்பிக்கப்படும் நேத்ரா நல்லிணக்க தமிழ் தொலைக்காட்சி, தெற்கில் இருந்து வடக்குக்கு மாத்திரம் நல்லிணக்கப் பரப்புரைகளைக் கொண்டு செல்லும் ஒருவழிப் பாதை ஊடகமாக இருக்கக் கூடாது. இதனைப் பயன்படுத்தித் தெற்கில் இருந்து வடக்குக்கு மட்டும் உங்கள் நல்லிணக்கச் செய்திகளை அனுப்பாதீர்கள். அங்கிருந்தும் தமிழ் மக்களின் துயரங்களை, துன்பங்களை, அபிலாசைகளை ஏன் கோபங்களைக் கூட செய்திகளாக இங்கு கொண்டு வந்து சிங்களத்தில் மொழி பெயர்த்து சிங்கள மக்களுக்கும் சொல்லுங்கள்.

அதை ரூபவாஹினி சிங்கள அலைவரிசையில் நேரம் எடுத்துக் காண்பியுங்கள். இது அரச ஊடகம். இலாபம் சம்பாதிப்பதை மாத்திரம்நோக்காகக் கொண்டு நீங்கள் செயற்பட முடியாது. இங்கே கலந்துகொண்டிருக்கும் நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் என் நண்பர் மங்கள சமரவீர கவனத்தில் கொள்வார். இவ்வாறு முற்போக்கு கூட்டணி தலைவரும், தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சருமான மனோ கணேசன் கூறினார்.

நேத்ரா நல்லிணக்க தமிழ் தொலைக்காட்சியை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இது இன்னமும் ஒரு முழுமையான தொலைக்காட்சி அலைவரிசை அல்ல என்று அறிகிறேன். இது இன்னும் நிறைய தொழிநுட்பரீதியாக வளம் பெற வேண்டும். நாடு முழுக்க ஒளிபரப்பாக வேண்டும். தமிழர் வடக்கில் மட்டும் வாழவில்லை. கிழக்கில், மலையகத்தில், இங்கே மேற்கிலும் வாழ்கிறார்கள். தமிழ் பேசும் முஸ்லிம் மக்களின் சனத்தொகையில் அறுபது விகித விழுக்காட்டினரும், தமிழர்களில் ஐம்பது விகித விழுக்காட்டினரும் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு வெளியில் வாழ்கிறார்கள். வடக்கில் போர் வடுக்கள் அதிகம். வடக்குக்குத்தான் நல்லிணக்க அலைவரிசை தொடர்பில் முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும்.

இதற்கு முன் நேத்ரா அலைவரிசையில் கிரிக்கெட் வர்ணனைகளை காட்டிக் கொண்டு இருந்தீர்கள். தமிழ் செய்திகளைக் கூட நிறுத்தி விட்டு விளையாட்டு வர்ணனைகளை காட்டியமை பற்றி இங்கே குறை கூறப்பட்டது. அது தவறுதான். அது இனி இந்த அலைவரிசையில் நிகழக்கூடாது. அதற்கு இன்னொரு பக்கமும் இருக்கிறது.

இந்த நாட்டில் அரசியல்வாதிகள், மதத் தலைவர்கள் தோற்றுப்போன வேளைகளில் கூட தேசிய நல்லிணக்கத்தைக் கட்டி எழுப்புவதில் கிரிக்கெட் பெரிய பங்காற்றியுள்ளது என்பதை நாம் மறக்க முடியாது. என்னைப் பொறுத்த வரையில், கிரிக்கெட் இலங்கையின் ஐந்தாவது மதம். அந்த கிரிக்கெட் கொண்டு வந்து விட்ட இடத்தில் இருந்து தேசிய நல்லிணக்கத்தை நேத்ரா நல்லிணக்க தமிழ் தொலைக்காட்சி மூலம் மேன்மேலும் கட்டி எழுப்ப ரூபவாஹினி கூட்டுத்தாபன தலைவர் ரவி ஜெயவர்த்தன முயல வேண்டும் என்றார்.

**சிவஞானசோதி**

நல்லிணக்கத் தொலைக்காட்சி ஆரம்பிக்கப்பட்டமை தொடர்பில் தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க அமைச்சின் செயலர் வி.சிவஞானசோதி தெரிவித்ததாவது, தொலைக்காட்சி ஆரம்பிப்புக்காக 180 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது. பொருத்தமான அலைவரிசையைப் பெற்றுக் கொள்வதற்காக கொக்காவில், யாழ்ப்பாணம், மடோல் சீமை, ஹந்தானை மற்றும் கொழும்பு ஆகிய இடங்களில் புதிதாக அலைபரப்பிகள் நிறுவப்பட்டன.

ஆரம்பத்தில் நல்லிணக்கத் தொலைக்காட்சி அலைவரிசையினூடாக ஆவணப்படங்களும் இசை நிகழ்ச்சிகளுமே ஒலிபரப்பப்படும். யாழ்ப்பாணத்தில் புதிதாகக் கலையகம் அமைக்கப்பட்ட பின்னரே முழு நேர ஒலிபரப்புகள் விரிவாக்கப்படும். வடக்கு மாகாண மக்களுக்கு இந்தக் கலையகமானது கல்வி, கலாசார மற்றும் சமூக நிகழ்ச்சிகள் தொடர்பானஅறிவை மேம்படுத்தவதற்கான ஒரு சந்தர்ப்பத்தை வழங்குகின்றது.

தொலைக்காட்சி அலைவரிசையானது வடக்கு தெற்குக் கலந்துரையாடலை உருவாக்கி, நல்லிணக்க மற்றும் ஒருமைப்பாட்டை வலுவூட்ட உதவுகின்றது. இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனமானது நல்லிணக்கத் தொலைக்காட்சிஅலைவரிசையினூடாக நல்லிணக்கம் மற்றும் சமாதானம் பற்றிய தகவல்களை நாடு முழுவதும் பரப்புவதுடன் சமாதானத் தூதுவர்களையும் தலைவர்களையும் பலப்படுத்தி அவர்களை நிலை பேறான சமாதானத்தை உருவாக்கும் தலைவர்களாகவும், வசதியளிப்பவர்களாகவும் விளங்கச் செய்கின்றது.

நல்லிணக்கத் தொலைக்காட்சி அலைவரிசையானது ஏற்படுத்தப்பட்டதனூடாக நேத்ரா அலைவரிசையானது மேம்படுத்தப்பட்டு நல்லிணக்க நிகழ்ச்சி ஒலிபரப்புகளில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தி நிலைபேறான சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் கட்டியெழுப்புவதன் மூலம் வளமான இலங்கையை உருவாக்க முடியும் - என்றார். (5)



# ஐ.தே.கவினரை அரவணைக்கும் அரச தலைவர் மைத்திரிபால

கொழும்பு, பெப். 24
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நாடாளுமன்றத்துக்கு நேற்றுமுன்தினம் வருகை தந்தார். முன்னாள் அமைச்சரும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முன்னாள் பொதுச் செயலருமான விஸ்வ வர்ணபால மீதான அனுதாப பிரேரணையில் உரையாற்றினார். தனது உரையை முடித்து கொண்ட பின்னர் ஐக்கிய தேசியக் கட்சி அமைச்சர்களுடன் மிகவும் சகஜமாக சிரித்துப் பேசிக் கொண்டிருந்தார். சபாபீடத்தில் இருந்து வெளியேறியதன் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்துப் பேசியுள்ளதாக தெரியவருகின்றது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முன்னாள் பொதுச்செயலராக இருந்த விஸ்வ வர்ணபாலவின் அனுதாப பிரேரணை நடத்தப்பட்டது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் நோக்கில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நாடாளுமன்றத்துக்கு வருகை தந்தார்.

அவர் சபாபீடத்திற்குள் நுழையும் போது சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த பலரும் பின்தொடர்ந்து வருகை தந்தனர். அமைச்சர்களான மகிந்த சமரசிங்க, சுசில் பிரேமஜயந்த, சந்திம வீரக்கொடி, நிமல் சிறிபால டி சில்வா மற்றும் பிரதி சபாநாயகர் திலங்க சுமதிபால ஆகியோர் பின்தொடர்ந்து வந்தனர்.

அரச தலைவர் தனது உரையை நிகழ்த்தி முடித்த பின்னர் சபாபீடத்தில் தனக்கான ஆசனத்தில் அமர்ந்து கொண்டு ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சர்களான லக்ஸ்மன் கிரியெல்ல, கயந்த கருணாதிலக, தயாகமகே மற்றும் ஜோன் அமரதுங்க ஆகியோருடன் சகஜமாக சிரித்துப் பேசிக் கொண்டிருந்தார். இதன்பின்னர் சபாபீடத்தில் இருந்து வெளியேறும் போது ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும் எழுந்து நின்று மரியாதை செலுத்தினர்.

நாடாளுமன்ற கட்டடத்தொகுதியில் வைத்து ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடனும் சுதந்திரக் கட்சியினருடன் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளதாகத் தெரியவருகின்றது. (5,31)

### உள்ளூராட்சியில் கூட்டு ஆட்சி

# 150 சபைகளில் ஐ.தே.க அதிகாரம் செலுத்துமாம்

## கட்சியின் செயலர் கபீரின் கணிப்பு

கொழும்பு, பெப். 24
ஐக்கிய தேசியக் கட்சியால் ஏனைய கட்சிகளின் ஆதரவைப் பெற்றுக் கொண்டு 150 உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சியமைக்க முடியும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் செயலர் அமைச்சர் கபீர் ஹாசிம் தெரிவித்துள்ளார்.

கேகாலையில் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முடிவுகளின் பிரகாரம் அதிகளவான சபைகளில் தனிக் கட்சியினால் ஆட்சியமைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. ஏனைய கட்சிகளுடன் இணைந்தே ஆட்சியமைக்க வேண்டியுள்ளது. அவ்வாறான சபைகளில் நாம் கூட்டிணைந்து ஆட்சியமைப்பதற்கு எதிர்பார்த்துள்ளோம். நிலையான உள்ளூராட்சி மன்றங்களை அமைப்பதாயின் கூட்டிணைந்தே ஆட்சியமைக்க வேண்டியுள்ளது.

150 உள்ளூராட்சி மன்றங்களில் ஐக்கிய தேசியக் கட்சி ஏனைய கட்சிகளுடன் இணைந்து ஆட்சியமைக்க முடியும். அது தொடர்பிலான பேச்சு தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

சில தரப்பின் சொந்த நிகழ்ச்சி நிரலுக்காவே இரண்டரை ஆண்டு காலமாக உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடத்தப்படாது காலம் தாழ்த்தப்பட்டு வந்தது. அந்தத் தரப்பு தாம் தேர்தலில் வெற்றிபெறுவதற்காகவே இழுத்தடிப்புச் செய்து வந்தது. புதிய தேர்தல் முறையை அவசரமாக அறிமுகப்படுத்த முடியாதெனவும் ஆழமாக ஆராய்ந்த பின்னரே அது குறித்துத் தீர்மானிக்க வேண்டும் எனவும்அப்போதிலிருந்தே நாம் தெரிவித்து வந்தோம். அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆகவேதான் உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் பின்னர் இவ்வாறான சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளது - என்றார்.

ஐக்கிய தேசியக் கட்சி 34 உள்ளூராட்சி மன்றங்களிலேயே கூடிய ஆசனங்களைப் பெற்றுக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5,61)

# புதிய அரசமைப்பு பொதுவாக்கெடுப்பு ஊடாகவே நிறைவேற்றப்பட வேண்டும்

## தேர்தலில் மகிந்த அணி முன்னிலை பெற்ற பின்னரும் கூட்டமைப்பின் நிலைப்பாடு இதுதான்

யாழ்ப்பாணம், பெப். 24
உள்ளூராட்சித் தேர்தலில் தெற்கில் மகிந்த அணியின் கை ஓங்கியுள்ள நிலையிலும், புதிய அரசமைப்பு பொதுவாக்கெடுப்பின் ஊடாகவே நிறைவேற்றப்பட வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

இலங்கை வந்துள்ள அமெரிக்கக் காங்கிரஸ் உறுப்பினர் ஜேம்ஸ் சென்சென்ப்ரெக்னெர் மற்றும் அவரது தலைமை அதிகாரி மட் பைசென்ஸேனிஸ் ஆகியோர் எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தனை நாடாளுமன்றத்திலுள்ள எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் சந்தித்துக் கலந்துரையாடினர். இந்தச் சந்திப்பின்போதே, இரா.சம்பந்தன் மேற்கண்டவாறு தெரிவித்ததாக அவரது அலுவலகத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.



'அண்மையில் இடம்பெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் தொடர்பிலும் அதன்பின்னர் உள்ள அரசியல் நிலமை தொடர்பிலும் இரா.சம்பந்தன் எடுத்துரைத்தார். புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த இரா. சம்பந்தன் இந்த நடைமுறைகள் முன்னெடுக்கப்பட்டு சாதகமான முடிவை எட்டவேண்டும். அதேவேளை புதிய அரசமைப்பானது பொது வாக்கெடுப்பின் மூலம் மக்களின் ஆணையைப் பெறவேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்' என்று அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (5)

## காணி விற்பனைக்குண்டு

விதானை வீதி, கொழும்புத்துறையில்
1 ¼ பரப்பில் காணி விற்பனைக்குண்டு.
071 040 6537

## வான் விற்பனைக்கு

ELF கன்ரர் ISUZU Model- 2004
JAPAN நல்ல நிலையில் உள்ளது.
077 717 9778

## தவறிவிட்டது

திருமதி துஷ்யந்தினி நிர்க்குணானந்தன்
ஆகிய எனது பாடசாலை
**பாடப்பதிவுகள் கைந்நூல்**
**அடங்கிய பை 15.02.2018**
வியாழக்கிழமை சுன்னாகம் சந்திக்கும்
பன்னாலைக்கும் இடையில் தவறிவிட்டது.
கண்டெடுத்தவர்கள் தொடர்புகொள்வும்
076 757 9846
**சுன்னாகம் ராஜா கொம்பிளக்ஸ் இல்**
**கொடுக்கவும்.**
(சன்மானம் வழங்கப்படும்)

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நாவலர் வீதியில்
(50 பேர்ச்சஸ்) 5 பரப்புக் காணியில்
8 அறைகள். 2 ஹோல். 5 குளியலறைகள்
உடைய வீடு விற்பனைக்கு.
077 760 1224

## ஆசிரியை தேவை

**தையல் ஆசிரியைக்கு** விண்ணப்பங்கள்
கோரப்படுகின்றன.
இடம்: நவமங்கை நிவாசம்
இராச வீதி. கோப்பாய் மத்தி
விண்ணப்ப முடிவுதிகதி : 25.03.2018
021 223 0418 நிர்வாகம்

## இலவச தையல் பயிற்சி வகுப்புக்கள்

இடம்: நவமங்கை நிவாசம்
இராச வீதி. கோப்பாய் மத்தி
வகுப்புகள் கிழமை நாள்களில் நடைபெறும்.
விண்ணப்ப முடிவுதிகதி : 25.03.2018
021 223 0418 நிர்வாகம்


## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

**திருமதி செல்வராணி சின்னராசா**

தோற்றம் 24.09.1957 மறைவு 10.03.2014



எங்கள் இனிய தெய்வமே!
நீங்கள் எம்மைவிட்டுப் பிரிந்து ஆண்டுகள்
நான்கு சென்றாலும்
எங்கள் உயிர் இருக்கும்வரை எங்களுடன்
இருப்பீர்கள்
இந்தநாளில் உங்கள் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல இறைவனை வேண்டி
நிற்கின்றோம்
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

கணவர், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள் மற்றும் உறவினர்கள்.
கருணாநிதி சனசமூக நிலையம்
(அருகில்), வல்வெட்டி, வல்வெட்டித்துறை

திதி:- 24.02.2018
வளர்பிறை நவமி

(ANE/408)(11.17)

உ
சிவமயம்





"அமெரிக்க ஹவாய் ஆதீன முதல்வர்"

**சற்குரு போதிநாத வேலன் சுவாமிகளின் தரிசனம்**

**இடம்**
ஸ்ரீ சுப்பிரமுனிய கோட்டம்
பழைய வீதி, கோப்பாய்.

**காலம்**
25.02.2018 ஞாயிற்றுக்கிழமை
மாலை 4.00 மணி

**அன்புடையீர் வணக்கம்**

அமெரிக்காவிலுள்ள ஹாவாய் சைவ ஆதீன முதல்வர் சற்குரு போதிநாத வேலன் சுவாமிகள் உலகின் பல பாகங்களையும் சேர்ந்த 65 அடியவர்கள் சகிதம் ஆன்மீக யாத்திரையாக எம் மண்ணுக்கு வருகை தந்துள்ளார். அவர்களை அடியவர்கள் தரிசித்து ஆசி பெறுவதற்கு எமது ஸ்ரீ சுப்பிரமுனிய கோட்டம் ஏற்பாடு செய்துள்ளது. இவ்வரிய தெய்வீக நிகழ்ச்சியில் அனைவரும் கலந்து கொண்டு சுவாமிகளின் நல்லாசிகளைப் பெற்றுக்கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி

**இங்ஙனம்**


ஸ்ரீ சுப்பிரமுனிய கோட்டம்,
பழைய வீதி, கோப்பாய்.

ஸ்ரீ சுப்பிரமுனிய கோட்டச்
சைவச் சிறுவர்கள்


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

# அமரர் கணபதிப்பிள்ளை புலேந்திரன்

(New V.M.K ஜுவல்லறி - V.M.K மில்ஸ் உரிமையாளர்)



**மலர்வு 04.05.1953**　**உதிர்வு 26.01.2018**



அன்பின் ஊற்றாய் நின்று
ஆற்றலின் பிறப்பிடமாய்த் திகழ்ந்தவரே!
எம் குடும்பத்திற்கு வேராக இருந்து
நீராக அன்பைப் பொழிந்தவரே!
ஆறுமோ வெந்துயரம் அன்பு அப்பாவே!
நேசத்துடன் எமை அரவணைத்து இன்று
வானுறையும் தெய்வமாகிவிட்ட தங்கள்
நினைவுகள் நீங்காது எம் நெஞ்சங்களில்.

கடந்த 26.01.2018 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தின் குலவிளக்கு **அமரர் கணபதிப்பிள்ளை புலேந்திரன்** அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (25.02.2018) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் வருகை தந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இதனைத் தனிப்பட்ட அழைப்பாகவும்**
**ஏற்றுக்கொள்ளவும்**

கண்டி வீதி, சாவகச்சேரி.　V.M.K.குடும்பத்தினர்.

(V.18)(18.13)

# போதிய படகுச் சேவை இல்லாததால் கச்சதீவு செல்லவிருந்தோர் அவதி

## அனல் பறக்கும் வெயிலில் நீண்ட நேரம் காத்திருப்பு

யாழ்ப்பாணம், பெப். 24

**கச்சதீவு ஆலயத்துக்குச் சென்ற யாத்திரிகர்கள், போதிய படகுச் சேவைகள் தயார்படுத்தல் இன்மை காரணமாக பெரும் ஏமாற்றம் அடைந்தனர். நெடுநேரம் வெயிலிலும் காத்திருக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது. படகு ஏற்பாடு செய்துதருவதாகக் கடற்படையினர் கூறியிருந்தபோதும் இறுதியில் நேற்று அவர்களின் படகு பணியில் ஈடுபடுத்தப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.**





வரலாற்றுச் சிறப்பு மிக்க கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்த உற்சவத்துக்குச் சென்ற யாத்திரிகர்களுக்கான படகுச் சேவை நேற்றையதினம் போதிய அளவில் இடம்பெறாமையால் ஆலயத்துக்குச் செல்வதற்காக புறப்பட்ட பல யாத்திரிகர்கள் ஏமாற்றமடைந்தனர்.

நேற்றுக்காலை 10 மணிக்கும் முன்பதாக முதலில் ஆயிரத்து 580 யாத்திரிகர்களும், பின்னர் 400 யாத்திரிகர்களும் 20 படகுகளில் பயணித்தனர். அதன் பின்பும் பலர் குறிகட்டுவான் இறங்கு துறைக்கு வருகை தந்தவண்ணம் இருந்தனர் படகுச் சேவை இடம்பெறவில்லை. இறங்குதுறையில் நெருக்கடி ஏற்பட்டது.

இதன் காரணமாக மாவட்டச் செயலகம் வடதாரகை மற்றும் எழுதாரகை படகுகளை இரண்டாம் கட்டச் சேவையில் ஈடுபடுத்தியது. இருப்பினும் யாத்திரிகர்களின் தேவையை முழுமை செய்ய முடியாத நிலமை காணப்பட்டது.

'கச்சதீவு பெருநாளுக்கான ஏற்பாடுகள் அனைத்தும் முழுமையடைந்துவிட்டன என உரிய பல அதிகாரிகளால் கூறப்பட்டிருந்தது. இருப்பினும் படகு சேவை இன்று (நேற்று) போதியளவில் இல்லை. இதன் காரணமாக பல மணிநேரம் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது. காலை 8.30 தொடக்கம் மதியம் 1.30 தாண்டியும் இன்னமும் காத்திருக்கின்றோம். தென்னிலங்கையிலிருந்து வந்திருந்த சுமார் 300 யாத்திரிகர்கள் படகில் காலையிலேயே கச்சதீவுக்கு அனுப்பப்பட்டுவிட்டனர். ஆனால் இங்குள்ளவர்களுக்கு உரிய படகு வசதிகள் ஏற்படுத்தித்தரவில்லை' என்று வெயிலில் காத்திருந்தவர்கள் ஆதங்கத்துடன் தெரிவித்தனர்.

நிலமை தொடர்பில் மாவட்டச் செயலகத்துடன் தொடர்பு கொண்டு கேட்டபோது "வருடந்தோறும் கடற்படையினரின் வசமுள்ள பெரிய கப்பல் ஒன்றின் மூலம் 400 தொடக்கம் 500 யாத்திரிகர்கள் ஏற்றிச் செல்லப்படுவர். இருப்பினும் நேற்றைய தினம் கடற்படையினர் முன் அறிவித்தல் இன்றி குறித்த படகுச் சேவையை மேற்கொள்ளவில்லை. இதன் காரணமாகவே மேற்படி நெருக்கடி ஏற்பட்டது. இருப்பினும் எமது படகுகளை இரண்டாவது சேவையில் ஈடுபடுத்தி குறிப்பிட்டளவு யாத்திரிகர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர்" என்று தெரிவித்தனர். (எ-101)





# சாரணர் ஒன்றுகூடல்

கிளிநொச்சி,பெப்.24

கிளிநொச்சி மாவட்ட சாரணர் சங்கத்தின் ஏற்பாட்டில், கிளிநொச்சி மற்றும் தென்மராட்சிக் கல்வி வலயங்களுக்கான 2018ஆம் ஆண்டுக்கான சாரணர்களுக்கான ஒன்றுகூடல் நடைபெற்றது.

மாவட்ட சாரண ஆணையாளரும், கிளிநொச்சி இந்துக் கல்லூரியின் அதிபருமாகிய கி.விக்கினராஜா தலைமையில் கிளிநொச்சி இந்துக்கல்லூரியில் கடந்த திங்கட்கிழமை மாலை 3 மணிக்கு ஆரம்பமாகி நேற்றுமுன்தினம் சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வுடன் நிறைவு பெற்றது

நிகழ்வுக்கு கிளிநொச்சி கல்வி வலயத்திலிருந்து பத்துப் பாடசாலைகளிலிருந்தும், தென்மராட்சி கல்வி வலயத்திலிருந்து ஆறு பாடசாலைகளிலிருந்தும் மொத்தம் 364 சாரண மாணவர்களில் 307 ஆண் சாரண மாணவர்களும், 57 பெண் சாரண மாணவர்களும் கலந்து கொண்டனர். அத்துடன் 25 சாரண ஆசிரியர்களும், 10 வளவாளர்களும் பங்குபற்றியிருந்தனர். நிகழ்வில் சாரண மாணவர்களுக்கான கூடார ஒழுங்கமைப்பு மற்றும் சிறப்புப் பயிற்சிகள், அணிநடை வகுப்பு, விளையாட்டுகள், தீப் பாசறை என்பன சிறப்பாக இடம்பெற்றிருந்தன. இறுதிநாளான நேற்றுமுன்தினம் சாரண அமைப்பின் தந்தை பேடன் பவல் தினத்தில் கிளிநொச்சி இந்துக் கல்லூரியின் முதன்மை மண்டபத்தில் மாலை 2 மணியளவில் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது. (எ-4)

### உருளைக் கிழங்குகளுக்கிடையே

# முளை கட்டிய பயற்றை விதைத்து காலந்தாழ்த்தி அறுவடைசெய்யலாம்

யாழ்ப்பாணம்,பெப்.24

யாழ்ப்பாண மாவட்டத்தில் உருளைக்கிழங்கு அறுவடையை உரிய விளைச்சல் கொண்டதாக அறுவடை செய்வதற்கு உருளைக்கிழங்கு பயிரிட்டுள்ள தோட்டத்தில் முளை கட்டிய பயற்றை விதைத்து வளரச் செய்வதன் மூலம் காலம் தாழ்த்தி அறுவடை செய்யலாம். இதன்மூலம் உருளைக்கிழங்கு அழுகி சேதமடையாமல் பாதுகாக்கலாம் என உருளைக்கிழங்கு உற்பத்தியாளர் கூட்டுறவுச்சங்கங்களின் யாழ்ப்பாண மாவட்ட சமூகத்தின் தலைவர் இ.தெய்வேந்திரன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாண மாவட்டத்தில் உற்பத்திசெய்யப்படும் உருளைக்கிழங்கின் விலைத் தளம்பலுக்கு உரிய காலத்துக்கு விளையவிடாமல் இரண்டு மூன்று வாரங்களுக்கு முன்னரே அறுவடை செய்யப்படுவதும் ஒரு காரணமாகும். விளைச்சல் காலத்துக்கு முன்னரே அறுவடை செய்யப்படும் உருளைக்கிழங்கு சந்தைகளில் விற்பனைக்கு வைக்கும்போது தோல் உரிந்து கவர்ச்சி இல்லாமல் காணப்படுகின்றது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் உரிய கால அளவுக்கு தோட்டத்தில் விடும்போது அதிகரித்த வெப்பநிலையால் அழுகி சேதமடைவதாக கூறுகின்றனர். அதில் நியாயம் இல்லாமல் இல்லை.

விளைந்த உருளைக்கிழங்கு வெளி வெப்பநிலையால் பாதிக்கப்படாமல் இருப்பதற்கு பயற்றை விதைத்து நிழல்பரப்பச் செய்வது வாய்ப்பாக அமையும். அவற்றுடன் உரிய கால அளவுக்கு விளைந்த உருளைக்கிழங்கு தோல் உரியாமல் உரிய அமைப்பில் இருப்பது கவர்ச்சியாக இருப்பதால் பாவனையாளர்கள் விரும்பி கொள்வனவு செய்வதோடு கிழங்கின் சுவையும் நிறையும் கூடியதாக இருக்கும்-என்றார். (எ-11)

### வவுனியா பழைய பேருந்து நிலைய நெருக்கடி:

# முதலமைச்சரின் சாதகமான பதிலுக்காக காத்திருக்கின்றனர் வவுனியா வர்த்தகர்கள்

வவுனியா, பெப். 24

தனியார் மற்றும் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் உள்ளூர் சேவைகள், பழைய பேருந்து நிலையத்தினூடாகவும், அந்தப் பகுதியில் சிறிது நேரம் தரித்துச் செல்வதற்கும் அனுமதிக்க வேண்டும் என்று வடக்கு முதலமைச்சரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது.

எனினும்அதற்கானசாதகமானபதில் இன்னும் கிடைக்கவில்லை. முதலமைச்சர் இந்த விடயத்தில் சாதகமாகப் பரிசீலித்து விரைவில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரப்படுகிறது. வவுனியா பழைய பேருந்து நிலையத்தை அண்மித்துள்ள வியாபார நிலைய உரிமையாளர்கள் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

வவுனியா பழைய பேருந்து நிலையத்திலுள்ள வியாபார நிலைய உரிமையாளர்களின் நெருக்கடி நிலைமைகள் தொடர்பாக முதலமைச்சருடன் அண்மையில் கலந்துரையாடப்பட்டது. அதில் கலந்துரையாடப்பட்ட விடயங்களில் கூறப்படாவிட்டாலும் மேற்குறித்த விடயம் தொடர்பில் குறித்த பகுதி வர்த்தகர்கள் முதலமைச்சரிடமிருந்து நல்லதொரு முடிவை ஆவலுடன் காத்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் குறித்த வர்த்தகர்கள் தெரிவித்ததாவது:

தற்போது பழைய பேருந்து நிலையத்திலுள்ள வர்த்தக நிலையங்கள் பொதுமக்களின்றி வெறிச்சோடிக் காணப்படுகின்றன.

பல இலட்சம் ரூபாவைத் வர்த்தக நிலையங்களில் முதலிட்டுள்ள வர்த்தக நிலைய உரிமையாளர்கள் வங்கிகளில் பெறப்பட்ட கடனைச் செலுத்த முடியாமலும் கொள்முதல் செய்யப்பட்ட பொருள்களுக்கான பணத்தைச் செலுத்த முடியாமலும் திண்டாடி வருகின்றனர்.

கடந்த ஜனவரி முதலாம் திகதியி லிருந்து பழைய பேருந்து நிலையத்திலுள்ள பேருந்து சேவைகள் அனைத்தும் முதலமைச் சரின் உத்தரவுக்கு அமைவாக நிறுத்தப்பட்டு புதிய பேருந்து நிலையத்தில் இருந்து மேற்கொள்ளப்படுகின்றன.

தற்போதுவரை 5க்கும் மேற்பட்ட வியாபார நிலையங்கள் மூடப்பட்டுவிட்டன. இவ்வாறான எமது நெருக்கடி நிலையை வடக்கு மாகாண முதலமைச்சர் புரிந்துகொண்டு எமக்கு சாதகமான பதிலை வழங்கவேண்டும்.

இதேவேளை, கடந்த வாரம் பழைய பேருந்து நிலையப்பகுதியை வடக்கு மாகாண முதலமைச்சரின் செயலாளர் பார்வையிட்டார். பழைய பேருந்து நிலையப் பகுதிக்குள் பேருந்துகள் செல்லாது வெளியே முதன்மை வீதியில் பேருந்துகளிலிருந்து வருபவர்களை ஒரு பக்கமாக இறக்கிவிடுவதற்கும் பழைய பேருந்து நிலையப்பகுதியிலுள்ளவர்களை உள்ளூர் வெளியூர் பேருந்தில் ஏற்றிச் செல்வதற்குமான ஒரு யோசனையை முன்வைத்துள்ளார். எனினும் அது தொடர்பில் எதுவிதமான நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லை-என்றனர்.

இவற்றை முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கவனத்தில் எடுத்து உரிய தீர்வைப் பெற்றுத் தரவேண்டும் என்று அவர்கள் கோரியுள்ளனர். (எ-4)

# நுளம்புக் குடம்பியைக் கட்டுப்படுத்த மீன்களைக் கிணறுகளில் விடமுடியும்

## மருத்துவ அதிகாரி பணிமனைகளில் பெறலாம் சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவுறுத்தல்

**யாழ்ப்பாணம், பெப். 24**

**மலேரியா நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தவே யாழ்ப்பாண மாநகரப் பகுதிகளில் மீன்கள் விடப்பட்டன. அவை விடப்படாத கிணறுகளில் வலைகளால் மூடுமாறு அறிவுறுத்தப்படுகிறது. அவ்வாறு செய்வது, கிணற்றில் டெங்கு நுளம்பு பெருகுவதைக் குறைத்துவிடும். (வலைக்குப் பதிலாக நைலோன் சீலைகளையும் பயன்படுத்தலாம்) என்று யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் க.நந்தகுமாரன் தெரிவித்தார்.**

மன்னார் மாவட்டத்தில் பரவிய மலேரியா நுளம்பு பெருக்கம் யாழ்ப்பாண மாவட்டத்தில் தொடருந்து நிலையத்தை அண்மித்த பகுதிகள் உள்ளிட்ட பல இடங்களிலும் பரவியமை கண்டறியப்பட்டது. அதனால் யாழ்ப்பாண மாநகர எல்லைக்குள் சகல கிணறுகளிலும் நுளம்புக் குடம்பியை உண்ணும் மீன்கள் விடப்பட்டன. சிலர் கிணறுகளை இறைக்கும்போது அதற்கு முன்னர் குளோரின் இடுவதால் மீன்கள் இறந்தன. அந்த இடங்களுக்கு மீன்கள் மீண்டும் விடப்பட்டன. அது வெற்றியளித்துள்ளது. எனினும் சில இடங்களில் அது சாத்தியமாகாததால் கிணறுகளுக்கு வலைகளைப் போடுமாறு அறிவுறுத்தப்பட்டது. அவ்வாறு மீன் குஞ்சுகள் விடுவதன்மூலம் மலேரியாவைத் தடுப்பதற்கு மட்டுமன்றி மாவட்டத்தின் அனைத்து இடங்களிலும் அதிகரித்துக் காணப்படும் டெங்குத் தொற்றையும் தடுத்து நிறுத்த முடியும். குடம்பியை உண்ணும் மீன்கள் தேவையானோர், சுகாதார மருத்துவ அதிகாரிகள் பிரிவில் பெற்றுக் கொள்ளமுடியும் என்று தெரிவித்தார்.

**வவுனியாவில் பெருக்கம் பூச்சியியலாளர்களும் ஆய்வு**

அநேகமானோர் தற்போது மின்மோட்டர் மூலமே தண்ணீரைத் தேவைகளுக்குப் பயன்படுத்தி வருகின்றனர். கிணற்றில் வாளி படுவதுமில்லை, கிணற்றின் மேல்மட்டத்திலுள்ள தண்ணீர் கலங்குவதில்லை. இவ்வாறு பராமரிப்பின்றி கிணறுகள் உள்ளதால் அவற்றில் டெங்கு நுளம்புகள் குடம்பிகளைப் பரப்புகின்றன. அதனால் கிணற்றில் நுளம்பு உற்பத்தியாகிறது. எனவே இந்த விடயத்தில் ஒவ்வொருவரும் அவதானமாக இருக்கவும் என்று வவுனியா மேற்பார்வை பொது சுகாதாரப்பரிசோதகர் க. தியாகலிங்கம் தெரிவித்தார்.

தேவையான ஆலோசனைகளை உங்கள் பிரதேசங்களில் பொது சுகாதாரப் பரிசோதகர்களிடம் கேட்டுக் கொள்ளுமாறும் அவர் தெரிவித்தார்.

இவ்வாறு இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

வவுனியாவில் டெங்கு நுளம்பு புதிய பரிணாமம் பெற்று முதற் தடவையாக பாழடைந்த கைவிடப்பட்ட கிணறு ஒன்றிலிருந்து பெருக்கமடைவது பூச்சியியலாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது ஒரு அபாய நிலையாகும். இவ்வாறு பெருக்கம் அடைந்தால் கட்டுப்படுத்துவதும் ஒரு சவாலாகும். இவ்வாறு பல இடங்களில் உள்ள கிணறுகளில் டெங்கு நுளம்பின் தாக்கம் இருக்கும். எனவே பொதுமக்கள் அவதானத்துடன் நடந்துகொள்ளவேண்டும்.

வவுனியாகந்தசாமி ஆலய வீதியிலுள்ள கைவிடப்பட்ட பழமை வாய்ந்த கிணறு ஒன்றிலிருந்து டெங்கு நுளம்பு பெருக்கமடைவது பூச்சியியலாளர்களால் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டது. இதையடுத்து பரிசோதகர் குழுவினர் அங்கு சென்று கிணற்றினை சுற்றி பாதுகாப்பு நுளம்புவலைகள் அமைத்தனர். நுளம்பு மேலும் பல இடங்களுக்கு பெருகவிடாமல் தடுக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. கைவிடப்பட்ட கிணறுகளில் டெங்கு நுளம்பு பெருக்கம் ஏற்படவாய்ப்புக்கள் காணப்படுகின்றன.

இது தொடர்பாக விழிப்புணர்வு நடவடிக்கைகளை நாங்கள் மேற்கொள்ளவுள்ளதுடன் பொதுமக்கள் மிகவும் அவதானத்துடன் இருக்க வேண்டும்.

உங்கள் வீடுகளிலுள்ள கிணறுகளை நுளம்பு உட்செல்லாத வகையில் நுளம்பு வலைகளை போட்டு பாதுகாப்பாக வைத்திருக்குமாறும் கிணறுகளை எவ்வாறு சுத்தமாக வைத்திருப்பது என்பது தொடர்பாக எமது சுகாதார பரிசோதகர்களிடம் ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளுமாறும் மேலும் தெரிவித்துள்ளார். (எ-4)

---

### மான் இறைச்சி வைத்திருந்தவருக்கு ரூ.12,000 தண்டம்

கிளிநொச்சி,பெப்.24

மான் இறைச்சி உடமையில் வைத்திருந்த நபருக்கு 12ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது கிளிநொச்சி மாவட்ட நீதிவான் மன்று.

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரிப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் மான் இறைச்சியை உடமையில் வைத்திருந்த நபரைக் கைது செய்த பூநகரி பொலிஸார் நேற்றைய தினம் கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்தினர். சந்தேக நபர் குற்றத்தை ஒப்புக்கொண்டமையடுத்து அவருக்குத் தண்டம் விதித்து தீர்ப்பளித்தது கிளிநொச்சி மாவட்ட நீதிவான் மன்று. (எ-6)

### வாகனம் செலுத்த அனுமதியில்லை ரூ. 20,000 தண்டம்

கிளிநொச்சி பெப் 24

வழித்தட அனுமதிப்பத்திரம் இன்றி வாகனம் செலுத்திய சாரதிக்கு 20ஆயிரம்ரூபா தண்டம் விதித்தது கிளிநொச்சி மாவட்ட நீதிவான் மன்று.

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரிப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் வழி அனுமதிப்பத்திரம் இன்றி பஸ் செலுத்திய சாரதியை கைது செய்த பொலிஸார் நேற்றைய தினம் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் மன்றில் முற்படுத்தினர்.

சந்தேகநபரான சாரதி குற்றத்தை ஏற்றுக்கொண்டதன் காரணத்தால் அவருக்கு தண்டம் விதித்து வாகனத்தை விடுவித்து தீர்ப்பளித்தது கிளிநொச்சி மாவட்ட நீதிவான் மன்று. (எ-6)

### சங்கம் உடைத்து பொருள்கள் திருட்டு

யாழ்ப்பாணம், பெப். 24

காங்கேசன்துறை கனகம்பனை பகுதியில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் உடைக்கப்பட்டு பொருள்கள் திருடப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் நேற்றுமுன்தினமிரவு இடம்பெற்றது. அங்கிருந்த அரிசி, சீனி, பால்மா உள்ளிட்ட சுமார் 45 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களே திருடப்பட்டுள்ளன என்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. அது தொடர்பில் விசாரணை இடம்பெறுவதாக காங்கேசன்துறைப் பொலிஸார் தெரிவித்தனர். (4-26)

### வெற்றிலையுடன் புகையிலை விற்ற ஐவருக்குத் தண்டம்

கிளிநொச்சி, பெப்.24

வெற்றிலையுடன் சேர்த்து புகையிலை விற்பனை செய்த கடை உரிமையாளர்கள் ஐவருக்குத் தலா 1000 ரூபா தண்டம் விதித்தது கிளிநொச்சி மாவட்ட நீதிவான் மன்று.

கிளிநொச்சி மாவட்டத்தின் மதுவரித் திணைக்களத்துக்கு உட்பட்ட பகுதியில் வெற்றிலையுடன் சேர்த்து புகையிலை விற்பனை செய்த கடை உரிமையாளர்கள் ஐவரை மதுவரி திணைக்களத்தினர் நேற்றையதினம் கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்தினர்.

சந்தேக நபர்கள் குற்றத்தை ஏற்றுக்கொண்டதன் காரணத்தால் தலா 1000 ரூபா தண்டம் விதித்து தீர்ப்பளித்தது கிளிநொச்சி மாவட்ட நீதிவான் மன்று. (எ-6)

### கசிப்புடன் கைதான மூவருக்கு தண்டம்

கசிப்பினை உடமையில் வைத்திருந்த பெண்கள் இருவர் உள்ளிட்ட மூவருக்கு 17ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதித்தது கிளிநொச்சி மாவட்ட நீதிவான் மன்று.

கிளிநொச்சி மாவட்ட மதுவரித் திணைக்களத்தின் எல்லைப் பரப்புக்கு உட்பட்ட பகுதியில் கசிப்பினை உடமையில் வைத்திருந்தனர் எனக் கைது செய்யப்பட்டவர்கள் நேற்றைய தினம் கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.

இதில் 1000 மில்லி லீற்றர் கசிப்பினை உடமையில் வைத்திருந்த நபருக்கு 7ஆயிரத்து 500 ரூபா தண்டமும் 800 மற்றும் 700 மில்லி லீற்றர் கசிப்பினை உடமையில் வைத்திருந்த இரு பெண்களுக்கு தலா 5ஆயிரம் ரூபா தண்டம விதித்து தீர்ப்பளித்தது கிளிநொச்சி மாவட்ட நீதிவான் மன்று. (எ-6)

---

*மன்னாரில்*

### விக்கிரகங்கள் சேதப்படுத்தப்பட்டமைக்கு இலங்கை முதலுதவிச் சங்கம் கண்டனம்

யாழ்ப்பாணம்,பெப்.24

இந்துசமய தெய்வ விக்கிரகங்களைச் சேதப்படுத்தல், களவாடுதல் போன்ற செயல்களை வன்மையாக கண்டிக்கிறோம். அண்மைக்காலங்களாக மன்னாரில் இந்து சமயத்தவரின் புனிதமான வழிபாட்டுச் சின்னங்கள் சேதப்படுத்தப்பட்டும் களவாடபட்டும் வருவதைக் காணமுடிகின்றது. இந்தச் செயலானது மிகவும் வேதனைக்குரியதும் கண்டிக்கத்தக்கதுமாகும்.

இவ்வாறு இலங்கை முதலுதவிச் சங்கம் தெரிவித்தது.

இது தொடர்பில் சங்கம் அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

அண்மைக்காலங்களாக நடைபெற்றுவரும் இந்தச் செயற்பாடானது சைவ மக்களையும் அவர்களின் புனிதத்தையும் சீர்குலைக்கும் வகையில் திட்டமிட்ட ஏதொவொரு பின்புலத்துடன் செயற்படுத்தப்படுகின்றது என்று தோன்றுகின்றது.

எவர் மற்றவர்களை துன்புறுத்துகின்றார்களோ, துரோக செயலில் ஈடுபடுகின்றார்களோ அவர்கள் அதற்கான எதிர்விளைவுகளை சந்திக்க நேரிடும் என்பதை எமது சைவசமய புராணங்கள் வரலாறுகள் விரிவாக கூறுகின்றன.

புனிதமான தெய்வ விக்கிரகங்களை சேதப்படுத்துவதையும் களவாடுவதையும் சைவர்களாகிய நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. சைவர்களின் மிகப் புனிதமான சிவராத்திரி தினமன்று மூன்று தெய்வ விக்கிரகங்கள் சேதப்படுத்தப்பட்டமை மேலும் ஆத்திரமூட்டக்கூடிய செயலாகவுள்ளது. எனவே இந்தச் செயலில் ஈடுபடும் விசமிகளை கண்டறிய அரசும் நாட்டின் பாதுகாப்புத்துறையும் குறிப்பாக மன்னார் மாவட்டப் பொலிஸாரும் விசாரணை முன்னெடுத்து தவறு செய்தவர்களை நீதியின் முன் நிறுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றோம் -என்றுள்ளது.

### நீலகண்டனது மறைவுக்கு முதலுதவிச் சங்கம் இரங்கல்

யாழ்ப்பாணம் ,பெப்.24

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் தலைவரும் சட்டத்தரணியுமான அமரர் கந்தையா நீலகண்டனது மறைவு இலங்கை வாழ் சைவ சமூகத்துக்கு பேரிழப்பாகும். இவ்வாறு இலங்கை முதலுதவிச் சங்கம் தெரிவித்தது.

"சைவமும் தமிழும் தழைத்தோங்க அயராது பாடுபட்ட தியாகச் செம்மல் சமூகத் தொண்டனின் மறைவானது எமது சமூகத்துக்கு பேரிழப்பாகும். ஈடு செய்யமுடியாத வெற்றிடத்தை நிரப்ப அவர் காட்டிய பாதையில் அனைவரும் முயற்சிக்க வேண்டும். அதற்கு எல்லாம் வல்ல சிவபெருமானிடம் வேண்டுகின்றோம்" என்று சங்கம் அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.



உலகத்தமிழ் மாணவர் ஒன்றியத்தின் கல்விக்கான உதவித்திட்டத்தின் கீழ் சுப்பர் மடம் சமூக சேவைகள் அமைப்பின் நிதி வழங்கலில் உடையார்கட்டு குரவில் மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த பதினைந்து மாணவர்களுக்கு புத்தகப்பைகள் மற்றும் கற்றல் உபகரணங்கள் ஒன்றியத்தின் அமைப்பாளர்களான ஜனார்த்தன், தீனோஜன், மேனகன் ஆகியோரால் நேற்று வழங்கி வைக்கப்பட்டன.



## முச்சக்கரவண்டி 50அடி பள்ளத்தில் பாய்ந்து விபத்து

நுவரெலியா.பெப்.24
மஸ்கெலியா பிரதான வீதியில் முச்சக்கர வண்டியொன்று 50 அடி பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளானது. இந்த விபத்து நேற்று முன்தினம் இடம்பெற்றது.
அதில் ஒருவர் படுகாயமடைந்தார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.
இரத்தினபுரியிலிருந்து சிவனொளிபாதமலைக்கு வந்த முச்சக்கர வண்டியே விபத்துக்குள்ளானது. காயமடைந்தவர் மஸ்கெலியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டனர். (ந.ரி4)

## துப்பாக்கிச் சூட்டில் பாதாள உலக தலைவர் சாவு

கொழும்பு.பெப்.24
கொழும்பு - வத்தளை பகுதியில் சிறப்பு அதிரடிப்படையினர் நேற்று மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்தார் என்றும், உயிரிழந்தவர் ஒரு பிரபல பாதாள உலகத் தலைவர் எனவும் தெரிவிக்கப்பட்டது.
தடல்லகே மஞ்ஜு என்பவரே இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தார். பாதாள உலகக் குழுவைச் சேர்ந்தவர்கள் என்று கருதப்படும் மேலும் இருவர் சிறப்பு அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டனர்.
இதேவேளை கொழும்பு மாவட்டத்தில் பாதாள உலகக் குழுவினரது செயற்பாடுகளைத் தடுப்பதற்காக சிறப்பு அதிரடிப் படையினரடங்கிய குழுவொன்று அண்மையில் நியமிக்கப்பட்டிருந்தது. (ந.ரி4)

# போதைப் பொருள் பாவனையை ஒழிப்பதற்காக புதிய திட்டங்கள்

## அரச தலைவர் மைத்திரிபால தெரிவிப்பு

**கொழும்பு,பெப்.24**
**கிராம மட்டங்களில் வறுமை நிலை அதிகரிப்பதற்கு போதைப்பொருள் பாவனையே பிரதான காரணமாக உள்ளது.குறைந்த வருமானமுடைய மக்கள் போதைப் பாவனைக்கு அதிகளவு உட்படுகின்றமை இதற்கு முக்கிய காரணம்.**

இவ்வாறு தெரிவித்தார் அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன. "கிராமங்களை உருவாக்குவோம்" கிராமிய போதைப்பொருள் ஒழிப்பு செயற்றிட்டத்தின் ஆரம்ப நிகழ்வு எம்பிலிபிட்டிய மகாவலி விளையாட்டரங்கில் நேற்று நடைபெற்றது. அதில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது;
கிராமங்களை உருவாக்குவோம்" கிராமிய போதைப்பொருள்ஒழிப்புசெயற்றிட்டத்தின் கீழ் இலங்கையின் சகல கிராமங்களிலும் சமூக பொலிஸ் குழுக்களை அடிப்படையாகக் கொண்ட போதைப்பொருள் தேடல்கள், மறுவாழ்வு அளித்தல் மற்றும் போதைப் பொருள் ஒழிப்பு செயற்பாடுகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டன. சிறந்த சமூகத்தையும் அபிவிருத்தியடைந்த நாட்டையும் ஆரோக்கியமான மக்களையும் கட்டியெழுப்புவதில் காணப்படும் சவாலான போதைப்பொருள்களை, இல்லாதொழிப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் கடந்த மூன்று வருட காலத்துக்குள் அரசால் நடைமுறைப்படுத்தப்பட்ட செயற்றிட்டங்களால் தேசிய மட்டத்தில் சிறந்த பெறுபேறுகள் கிடைத்து வருகின்றன. போதைப்பொருள் பாவனையை இல்லாதொழிப்பதற்கான பல்வேறு செயற்பாடுகள் இந்தச் செயற்றிட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும். என்றார். நிகழ்வில் அமைச்சர்களான ராஜித சேனாரத்ன, ஜோன் செனவிரத்ன, தலதா அத்துகோரள, மஹிந்த அமரவீர ஆகியோரும் பிரதியமைச்சர் கருணாரத்ன பரணவிதான உள்ளிட்ட மக்கள் பிரதிநிதிகளும் இரத்தினபுரி மாவட்ட செயலாளர், பிரதேச செயலாளர்கள், கல்விப் பணிப்பாளர்கள் உள்ளிட்ட அரச அதிகாரிகளும் பாதுகாப்பு பிரிவின் பிரதானிகள் உள்ளிட்ட குழுவினரும்கலந்துகொண்டனர். (ந.ரி4)

## வாகன விபத்தில் மூவர் காயம்

தென்மராட்சி, பெப் 24 (147)
நாவற்குளி - கேரதீவு வீதியில் ஏற்பட்ட விபத்தில் மூவர் காயமடைந்தனர். இந்த விபத்து நேற்று இடம்பெற்றது.
ஒழுங்கையிலிருந்து ஏ 32 முதன்மைச் சாலைக்குள் நுழைந்த மோட்டார் சைக்கிளை முதன்மைச் சாலையில் வந்த மோட்டார் சைக்கிள் மோதியது எனத் தெரிவிக்கப்பட்டது. டெங்கு பரிசோதனையில் ஈடுபட்டவர்களை ஏற்றிச் சென்ற வாகனத்தில் காயமடைந்தவர்கள் ஏற்றப்பட்டு சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.
கையில் பாதிப்பு காணப்பட்ட ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்தவமனையில் சேர்க்கப்பட்டார். (ந.ரி4,9)

# பணிநயப்பு விழா



வவுனியா.பெப்.24
வவுனியா விபுலானந்தா கல்லூரியின் முன்னாள் அதிபரும் வவுனியா தெற்கு வலயக்கல்வி பிரதிக்கல்வி பணிப்பாளருமாகிய சு.அமிர்த லிங்கத்தின் சாரணிய சேவை வளர்ச்சியை பாராட்டி பணிநயப்பு விழா நேற்று நடைபெற்றது.
இந்த விழா சாரணிய மன்றத்தின் ஏற்பாட்டில் கல்லூரி அதிபர் த.மதிவண்ணன் தலைமையில் கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.
அதில் முதன்மை விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் ம.தியாகராசாவும் சிறப்பு விருந்தினர்களாக வவுனியா நகர கோட்டக்கல்வி அதிகாரி எம்.பி.நடராஜ், விழாநாயகன் சு .அமிர்த லிங்கம் உட்பட ஆசிரியர்கள், மாணவர்கள் என பலர் கலந்து கொண்டனர். (ந.ரி4)

## பாடசாலை ஆசிரியர் கைது

கொழும்பு.பெப்.24
நுகவெல பகுதி பாடசாலை ஒன்றின் ஆசிரியர் புஸ்ஸல்லாவை பொலிஸாரால் நேற்றுக் கைதுசெய்யப்பட்டார். விளையாட்டு பாட ஆசிரியர் ஒருவரே கைது செய்யப்பட்டதாகப் புஸ்ஸல்லாவை பொலிஸார் தெரிவித்தனர்.
கூடைப்பந்து விளையாட்டுப் பயிற்சியில், பங்குபற்றவில்லை என பாடசாலை மாணவி ஒருவரைத் தாக்கிய குற்றச்சாட்டின் பேரிலேயே, இவர் கைது செய்யப்பட்டார். தாக்குதலில் பாதிக்கப்பட்ட மாணவி கம்பளை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக கண்டி மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். (ந.ரி2)



## போதைப் பொருள் வைத்திருந்த நபர் கைது

கொழும்பு.பெப்.24
கொழும்பு கிராண்ட்பாஸ் பகுதியில் ஹெரோயின் போதைப் பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டார். லஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் சாரதியாகப் பணியாற்றியவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டார். அவரிடம் இருந்து 182 மில்லிகிராம் ஹெரோயின் மீட்கப்பட்டது. மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ந.ரி4)

# பாரிசவாத விழிப்புணர்வு இன்று மட்டக்களப்பில்

மட்டக்களப்பு.பெப்.24
தேசிய பாரிசவாத தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பு கல்லடி பாடுமீன் பூங்காவிலிருந்து தேசிய பாரிசவாத விழிப்புணர்வு நடைப்பயணம் ஒன்று இன்று நடைபெறவுள்ளது. இவ்வாறு நரம்பியல் வைத்திய நிபுணரும், இலங்கை தேசிய பாரிசவாத சங்கத்தின் உதவிச் செயலாளருமான மருத்துவர் ரி.திவாகரன் தெரிவித்தார்.
2018 தேசிய பாரிசவாத விழிப்புணர்வு நடைப்பயணம் தொடர்பில் நேற்று ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது;
"பாரிசவாதத்தைத் தடுப்போம்! குணமாக்குவோம்! வாருங்கள், சேர்ந்து நடப்போம்! எனும் தொனிப் பொருளில் இந்த நடைப்பயணம் இடம்பெறவுள்ளது.
இலங்கை தேசிய பாரிசவாத சங்கமும், மட்டக்களப்பு போதனா மருத்துவமனையின் நரம்பியல் மருத்துவ பிரிவும், அரச அதிபர் தலைமையிலான மாவட்டச் செயலகமும், மாநகர சபையும் இணைந்து இதை ஏற்பாடு செய்துள்ளன. இதன் நோக்கம் பாரிசவாதத்தை எவ்வாறு தவிர்க்கலாம், வந்தவர்களுக்கு இன்னுமொறு முறை வராமல் எவ்வாறு தடுக்கலாம், பாரிசவாதம் ஏற்பட்டவர்கள் தங்களுக்கு ஏற்பட்ட உடல் ஊனங்களில் இருந்து எவ்வாறு விடுதலை பெறலாம் என்பனவற்றைச் சொல்வதே.
பாரிசவாத விழிப்புணர்வுக்காக முதல் முறையாக கிழக்கு மாகாணத்தில் இடம்பெறும் மாபெரும் நடைப்பயணத்தில் இணைந்து பங்குபற்றி பயன்பெற வேண்டும் - என்றார். (ந.ரி4)

# பசிலுக்கு எதிரான வழக்கில் ஜூன் மாதம் சாட்சியப் பதிவு

கொழும்பு,பெப்.24
முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ச அரசுக்கு நட்டம் ஏற்படுத்தியமை தொடர்பான வழக்கு விசாரணை கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று இடம்பெற்றது.
அதன் போது ஜூன் மாதம் 4 ஆம் திகதி இருந்து சாட்சியப் பதிவுகளை மே[illegible]கொள்ளுமாறு நீதிவான் பணிப்புரை விடுத்தார். கடந்த அரசதலைவர் தேர்தலின் போது இரும்புக் குழாய்களை கொள்வனவு செய்து உள்ளூராட்சி மன்றங்களுக்கு வழங்கியதன் ஊடாக 365 லட்சம் ரூபா அரசுக்கு நட்டம் ஏற்படுத்தினார் என்று குற்றம் சாட்டியே இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
முன்னாள் பொருளாதார அபிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஸ மற்றும் திவிநெகும திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஜெனரல் கித்சிறி ரணவக்கவுக்கும் எதிராக, சட்டமா அதிபரால் இந்த வழக்கு கொழும்பு மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (ந.ரி4)

# உதவிகள் வழங்கல்

வவுனியா.பெப்.24
தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் திரு. எஸ். சந்திரகுமார் தனிமையில் வசித்துவரும் கிருஷ்ணன் குருநாதனுக்கு புலம்பெயர்ந்து சுவிஸ் நாட்டில் வாழும் உறவுகளின் உதவியுடன் வாழ்வாதார உதவிகள் வழங்கினார்.
இந்த உதவிகள் நேற்று வவுனியா பிரதேச செயலகத்திலுள்ள ஆலயத்தின் முன்றிலில் வழங்கப்பட்டது.
தனக்கு வாழ்வாதாரத்தை மேற்கொள்வதற்கு வியாபாரம் செய்வதற்கு உதவிகள் வழங்கிவைக்குமாறு கோரியதனாலேயே இந்த உதவிகள் வழங்கப்பட்டன. எனத் தெரிவிக்கப்பட்டது. (ந.ரி4)



see more news in NEWUTHAYAN.COM



## தாக்குதலை உடன் நிறுத்தவும்; சிரியாவை எச்சரிக்கிறது சவூதி

டமஸ்கஸ், பெப். 24
சிரியாவில் கிளர்ச்சியாளர்கள் கட்டுப்பாட்டுப் பகுதியில் அரச படைகள் நடத்திவரும் வான் தாக்குதல்கள் உடனடியாக முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும் என்று எச்சரித்தது சவூதி அரேபியா.
"சிரியாவின் கூட்டா பகுதியில் நிகழும் வன்முறைகளை நிறுத்துமாறு நாங்கள் வலியுறுத்துகிறோம். தாக்குதலுக்கு உள்ளான பகுதிகளில் மருத்துவ உதவிகளை அளிக்க அனுமதிக்க வேண்டும். அங்கு நடைபெறும் வன்முறைகளுக்கு அரசியல் ரீதியாக முடிவு எடுக்கப்பட வேண்டும். நாங்கள் தொடர்ந்து சிரிய மக்கள் மீது அக்கறை கொண்டுள்ளோம்" என்று சவூதியின் தரப்பில் இருந்து அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## தாக்குதல…

தோல்வி…

வொஷிங்டன், …
சிரியாவில் மேற்…
டும் வான் தாக்…
நிறுத்துமாறு ஐ.…
புச் சபையில் கொ…
பட்ட தீர்மானத்…
முட்டுக்கட்டை…



## பொழுதுபோக்கு துறைக்கு 64 பில்லியன் டொலர்கள்

பொழுதுபோக்கு மற்றும் கேளிக்கைத் துறையை மேம்படுத்தும் வ்கையில் சவூதி அரேபியா 64 பில்லியன் டொலர்களை முதலீடு செய்ய உத்தேசித்துள்ளது.
சவூதிஅரேபியாவின்பட்டத்துஇளவரசராகமுகமதுபின் சல்மான அறிவிக்கப்பட்ட பின்னர் அவர் நாட்டின் பொருளாதாரத்தின் மட்டில் பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறார். 'விஷன் 2030' என்ற தொனிப்பொருளின் கீழ் இந்தத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. 2030ஆம் ஆண்டில் சவூதியின் பொருளாதாரம் எண்ணெய்ஏற்றுமதியைமட்டும்நம்பியதாகஇருக்கக்கூடாது என்பதே இந்தத் திட்டத்தின் நோக்கம். இந்தப் பின்னணியிலேயே பொழுதுபோக்குத் துறைக்கு 64 பில்லியன் அமெரிக்க டொலர்கள் ஒதுக்கப்பட்டுள்ளது.
கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் சினிமா மீதான தடையை தளர்த்தி இருந்தது சவூதி அரசு. இதையடுத்துசுற்றுலாவைமேம்படுத்தும்நோக்கில், அமெரிக்காவின்லொஸ்வெகாஸ்அளவிற்கானமிகப்பெரிய பொழுதுபோக்கு நகரத்தை ரியாத் அருகே நிர்மாணிக்கசவூதிதிட்டமிட்டுள்ளதாகதெரிவிக்கப்பட்டுள்ளது. பெண்கள்தொடர்பாக விதிக்கப்பட்டிருந்தகடுமையானசட்டங்களையும்சவூதிதளர்த்தியுள்ளது. பெண்கள்கால்பந்தாட்டத்தைபார்க்கவிதித்திருந்த தடைநீக்கப்பட்டுள்ளமைகுறிப்பிடத்தக்கது. (ம)

## ஒரு வாரமாகத் தொடர் த…

# ஐயோ சிரியா



டமஸ்கஸ், பெப். 24
சிரியாவில்அரசதரப்புக்கூட்டுப்படையால்கடந்தஒருவாரகாலமாகதொடர்ந்துவான் தாக்குதல்கள் நடத்தப்படும் நிலையில் இந்தத் தாக்குதல்களில் இதுவரை சுமார் 550 அப்பாவிப் பொதுமக்கள் உயிரிழந்தனர் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. லண்டனைத் தலைமையகமாகக் கொண்டு சிரியாவில் செயற்படும் மனித உரிமைகள் கண்காணிப்புக்குழு இந்தத் தாக்குதலை உறுதிப்படுத்தியுள்ளது.

சிரிய அதிபர் அல் அசாத் பதவியில் இருந்து விலக வேண்டும் என்று வலியுறுத்தி அங்கு ஆயுதக் குழு போராடிவருகிறது. அரசுக்கு ஆதரவாகரஷ்யா உள்ளது. கிளர்ச்சிக் குழுவுக்கு ஆதரவாக அமெரிக்கா உள்ளது. 'கூட்டா' நகரம் ஆயுதக் குழுவின் முழுக் கட்டுப்பாட்டில் உள்ளது.
அந்தநகரைமீட்பதற்காககடந்தஒருவாரகாலமாக அங்கு கூட்டுப் படை கடும் தாக்குதல்களை நடத்தி வருகிறது. இந்தத்தாக்குதல்களில்இதுவரைசுமார் 550பொதுமக்கள்உயிரிழந்துள்ளனர். இவர்களில் சுமார் 300 வரையிலானோர் 10 வயதை எட்டாத சிறுவர்கள்.
சிரிய உள்நாட்டுப்போரில், இதுவரைநடைபெறாத மனிதப்பேரவலம் நடைபெற்றுக் கொண்டுள்ளது என்றுசிரியாவில்செயற்படும்போர்க்கண்காணிப்பகம் தெரிவித்தது. (ம)



ஈராக்கின் பஸ்ரா நகரில் ஐ.எஸ்.ஐ.எஸ். ஆயுதக் குழுவால் அண்மையில் நடத்தப்பட்ட தாக்குதலில் 17 சிப்பாய்கள் உயிரிழந்தனர். ஈராக்கில்இருந்துவிரட்டியடிக்கப்பட்டஐ.எஸ்.ஐ.எஸ். ஆயுதக்குழுமீண்டும்அங்கு ஊடுருவியுள்ளதாஎன்றசந்தேகங்கள்இந்தத்தாக்குதலை அடுத்து வலுவாக வேரூன்றின. இதையடுத்து தற்போது அங்கு பாதுகாப்புபலமடங்காக உயர்த்தப்பட்டுள்ளது. (ம)

## இஸ்ரேலுடனான… ஜெருசலேம் அறி…

பலஸ்தீனத்துக்கு அது தேவையில்ல…

வொஷிங்டன், பெப். 24
இஸ்ரேலின் தலைநகராக ஜெருசலேமை அமெரிக்கா அங்கீகரித்ததன் பின்னணியில் இரு நாடுகளுக்கும்இடையிலானதனிப்பட்டஉறவேஉள்ளது. பலஸ்தீனத்தின் பிரச்சினையை இந்த விடயத்தில் தொடர்புபடுத்தவேண்டியஅவசியம்இல்லைஎன்று தெரிவித்தார் ஐக்கிய நாடுகள் சபைக்கான அமெரிக்கத் தூதுவர் நிக்கி ஹாலே.
மத்தியகிழக்கில்பலஸ்தீனத்திற்கும், இஸ்ரேலுக்கும் இடையே நீண்டகாலமாக மோதல் நீடித்து வருகிறது. ஜெருசலேம் நகரை இஸ்ரேல், பலஸ்தீனம் ஆகிய இரண்டு நாடுகளும் உரிமை கொண்டாடி வருகின்றன. இந்த நிலையில் கடந்த வருடத்தின் இறுதிப்பகுதியில்ஜெருசலேமைஇஸ்ரேலின்தலைநகராக அறிவித்தது அமெரிக்கா. இதையடுத்து யூதர்களுக்கும் பலஸ்தீனர்களுக்கும் இடையில் அங்குஉச்சக்கட்டகுழப்பம்தோற்றம்பெற்றுள்ளது.

இந்தப்…
காப்புச்…
றது. இ…
தெரிவி…
"பலஸ்…
னைக…
னாட்டு…
பேச்…
ளின் வ…
பிட்ட க…
பலஸ்…
சபைய…
னைக…
றையி…
திற்கு …
அங்கீ…
தலை…

## தலை நிறுத்துவதற்கு ரஷ்யா கடும் முட்டுக்கட்டை

*வியில் ஐ.நா. அமர்வு*

ன், பெப். 24
மேற்கொள்ளப்ப
தாக்குதல்களை
ஐ.நா. பாதுகாப்
ம் கொண்டுவரப்
னத்துக்கு ரஷ்யா
டபோட்டது.
குவைத், சுவீடன் ஆகிய நாடு
கள் இணைந்து இந்தத் தீர்மா
னத்தைக் கொண்டுவந்தன.
30 நாள்களுக்கு போர் நிறுத்
தம் செய்யப்பட வேண்டும்.
72 மணிநேரத்துக்குள்
(மூன்று நாள்களுக்குள்) இந்
தத் தீர்மானம் கூட்டா நகரில்
நடைமுறைப்படுத்தப்பட
வேண்டும் என்று தீர்மானத்
தில் குறிப்பிடப்பட்டிருந்தது.
வீட்டோ அதிகாரத்தால்
அதை இல்லாமல் செய்தது
ரஷ்யா. (ம)



## தாக்குதல்







## ஆற்றில் வீழ்ந்தது பஸ்; 44 பேர் பரிதாபச் சாவு

*பெருவில் பெரும் துயர்*

லிமா, பெப். 24
தென்னமரிக்க நாடான பெருவில் பேருந்
தொன்று ஆற்றில் கவிழ்ந்து விபத்துக்கு
உள்ளானதில் 44 பேர் உயிரிழந்தனர். 24
பேர் காயமடைந்தனர்.
பெருவின் அரிகுவிபா மாகாணத்தில்
உள்ள ஒகனா ஆற்றிலேயே இந்த அசம்பா
விதம் பதிவானது. உயிரிழந்தவர்களைத்
தவிர மேலும் 24 பேர் காயங்களுடன்
மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரு
கின்றனர். அவர்களில் சிலரின் நிலைமை
கவலைக்கிடம் என்பதால் உயிரிழப்பு எண்
ணிக்கை அதிகரிக்க வாய்ப்புள்ளது என்று
கருதப்படுகிறது. (ம)

## சாம்பல் பாதி கறுப்பு பாதி

பிரான்ஸில் பிறந்த பூனை ஒன்று முழு
உலகினதும் கவனத்தை ஈர்த்துவிட்
டது. முகத்தின் சரிபாதி, சாம்பல் நிறமா
கவும் மீதி கறுப்பாகவும் அமைந்திருக்
கிறது. இரண்டு வெவ்வேறு மரபணுக்
கள் சேரும்போது இப்படிப்பட்ட தோற்
றம் உருவாவது உண்டு. இவற்றை
'கிமேரா பூனைகள்' என்று அழைக்கி
றார்கள்.
விலங்குகள், மனிதர்களில் கூட இந்தப்
பிரச்சினை ஏற்படுவதுண்டு. (ம)



## ஆப்கானில் தாக்குதல்; 8 பொலிஸார் உயிரிழப்பு

காபூல், பெப். 24
ஆப்கானிஸ்தானின் காஷ்னி
மாகாணத்தில் பொலிஸ் சோத
னைச்சாவடி மீது தலிபான் ஆயு
ததாரிகள் நடத்திய தாக்குதலில்
8 பொலிசார் உயிரிழந்தனர்.
இந்தத் தாக்குதலுக்கு விரை
வில் பதிலடி கொடுக்கப்படும்
என்று ஆப்கானிஸ்தான் அரசு
எச்சரித்துள்ளது. (ம)

## ஆசிரியர்களுக்கு துப்பாக்கிகள் வழங்குவதற்கு ட்ரம்ப் திட்டம்

வொஷிங்டன், பெப். 24
அமெரிக்காவில் பாடசாலைக
ளில் நடைபெறும் துப்பாக்கிச்
சூட்டு அசம்பாவிதங்களைத்
தவிர்ப்பதற்காக ஆசிரியர்க
ளுக்கு துப்பாக்கி வழங்குவ
தற்கு அமெரிக்க அதிபர் ட்ரம்ப்
திட்டமிட்டுள்ளார்.
"நீங்கள் துப்பாக்கி வைத்திருக்
கும் திறமையான ஆசிரியராக
இருந்தால் உங்களால் தாக்கு
தலை விரைவாக தடுக்க முடி
யும். பள்ளிகளில் 20 வீதமான
ஆசிரியர்கள் துப்பாக்கிச் சுடுத
லில் பயிற்சி பெற்றிருக்க வேண்
டும். துப்பாக்கியை திறமை
யாகக் கையாளும் நபர்களுக்கு
மட்டுமே நான் கூறுவது பொருந்
தும்" என ட்ரம்ப் மேலும் தெரி
வித்தார். (ம)



## இயந்திர துப்பாக்கிக்கு அமெரிக்காவில் வந்தது தடை

அமெரிக்காவில் இயந்திரத் துப்
பாக்கிக்கு தடை விதித்து உத்தர
விட்டுள்ளார் அதிபர் ட்ரம்ப்.
அமெரிக்காவில் பொதுமக்கள்
தத்தமது பாதுகாப்புக்காக துப்
பாக்கிகள் வைத்துக்கொள்ள
அனுமதி உள்ளது. இதனால்
அவ்வப்போது அங்கு துப்பாக்
கிக் கலாசாரம் மேலோங்குவ
துண்டு. இந்த வருடத்தின் முதல்
இரண்டு மாதங்களில் மட்டும்
சுமார் 20 தாக்குதல்கள் அமெ
ரிக்கப் பாடசாலைகளில் மட்டும்
அரங்கேறியுள்ளன. புளோரிடா
வில் அண்மையில் நடத்தப்பட்ட
தாக்குதல் ஒன்றில் 17 மாணவர்
கள் உயிரிழந்தனர்.
இதையடுத்து குறித்த பாடசா
லையின் மாணவர்களும்
பொதுமக்களும் இணைந்து
அமெரிக்க அரசுக்கு எதிராக பல
வலாக ஆர்ப்பாட்டங்களையும்
ஊர்வலங்களையும் நடத்தியி
ருந்தனர்.
அழுத்தங்களும் எதிர்ப்புக்க
ளும் பலமுனைகளில் இருந்து
வந்ததை அடுத்து இயந்திரத்
துப்பாக்கிக்குத் தடை விதிக்க
ட்ரம்ப் பரிசீலித்து வந்தார். இந்த
நிலையி‹› நேற்று முன்தினம்
அவர் தடை விதித்து உத்தரவிட்
டார். (ம)

## ன தனிப்பட்ட உறவே
## றிவிப்புக்குக் காரணம்

*ல்லை என்கிறார் அமெரிக்கத் தூதர் ஹாலே*

இந்தப் பிரச்சினை தொடர்பாக ஐக்கிய நாடுகள் பாது
காப்புச் சபைக் கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்
து. இந்தக் கூட்டத்தில் வைத்தே ஹாலே இவ்வாறு
தரிவித்தார்.
பலஸ்தீனம் இஸ்ரேல் இடையிலான பிரச்சி
னையை முடிவுக்க கொண்டு வருவதற்கு பன்
னாட்டு அமைதி மாநாடு நடத்த வேண்டும். அமைதிப்
பச்சைத் தொடர வேண்டும் என்பதுதான் எங்க
ளின் விருப்பம். இருதரப்பு ஒப்பந்தங்களை குறிப்
பிட்ட காலக்கெடுவுக்குள் செயல்படுத்த வேண்டும்.
லஸ்தீனம் தற்போது பார்வையாளராகவே ஐ.நா.
பையின் கூட்டத்தில் கலந்து கொள்கிறது. பிரச்சி
னைகளுக்கு தீர்வு காண்பதுதான் அடுத்த தலைமு
றையினருக்கு அவசியமான ஒன்று. பலஸ்தீனத்
ற்கு ஐநாவின் முழுமையான உறுப்பு நாடு என்ற
அங்கீகாரம் தேவை. ஜெருசலேமை இஸ்ரேலின்
லைநகராக அமெரிக்கா அங்கீகரித்ததன் மூலம்
பிரச்சினை மேலும் சிக்க
லாகியுள்ளது" என்று
தெரிவித்தார்.
இதற்கு பதிலளித்த ஐ.நா.
சபைக்கான அமெரிக்க
தூதர் நிக்கி ஹாலே,
"பலஸ்தீனமும், இஸ்ரே
லும் அமைதி வழியில்
பிரச்சினைக்கு தீர்வு
காண வேண்டும் என்ப
துதான் அமெரிக்காவின்
எண்ணம்.
ஜெருசலேமை இஸ்ரேலின் தலைநகராக அங்கீக
ரித்தது என்பது அந்த நாட்டுடனான உறவு சம்பந்தப்
பட்ட விடயம். இதனையும் பலஸ்தீன பிரச்சினையும்
சம்பந்தப்படுத்தி பார்க்க வேண்டிய அவசியம்
இல்லை. உங்களுக்கு இதில் விருப்பமில்லாமல்
இருக்கலாம். அதற்காக நாங்கள் நிலைப்பாட்டை
மாற்றிக் கொள்ள முடியாது" என்று தெரிவித்தார்.
ஹாலேவின் பேச்சை அடுத்து அமர்வில் சிறிது சலச
லப்பு ஏற்பட்டது. இதையடுத்து முக்கிய முடிவு எதுவும்
எடுக்கப்படாமல் கூட்டம் முடிவடைந்தது. (ம)



உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



## பிரார்த்தியுங்கள் சிரியாவுக்காக

மனிதப் பேரவலமொன்று மத்திய கிழக்கில் இடம்பெற்றுக்கொண்டிருக்கிறது. சிரியாவில், கடந்த ஒருவாரகாலமாக மீண்டும் சாவு ஓலங்கள் வானைப் பிளக்க ஆரம்பித்துள்ளன. பன்னாட்டுச் சமூகம் இது விடயத்தில் செய்வதறியாது திகைத்து, தடுமாறி, விழி பிதுங்கி நிற்கிறது.

சிரிய அதிபர் அசாத் ஷியா பிரிவைச் சேர்ந்தவர். அங்கு சன்னி பிரிவைச் சேர்ந்த இஸ்லாமியர்கள் பெரும்பான்மையாக உள்ளனர். ஷியா இஸ்லாமியர்கள் 30 வீதம், சன்னி இஸ்லாமியர்கள் 70 வீதம் என்றவாறாக சிரிய மக்கள் தொகை அமைந்துள்ளது. பெரும்பான்மையான எம்மை சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவர் ஆளுவதா என்ற எண்ணவோட்டமே சிரிய உள்நாட்டுப் போருக்கு தோற்றுவாயாக அமைந்திருந்தது. ஆரம்பத்தில் அரசுக்கு எதிரான அழுத்தக் குழுக்களாக இருந்த அமைப்புக்கள் படிப்படியாக ஆயுதக் குழுக்களாக மாற்றம் பெற்றுள்ளன. கடந்த 2011 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் இந்த உள்நாட்டுப் போர் நடைபெற்று வருகிறது. சிரிய அரசுக்கு ரஷ்யாவின் தலைமையில் கூட்டுப்படை உதவி செய்கிறது. கிளர்ச்சிக் குழுவின் பின்னணியில் அமெரிக்கா உள்ளது. மொத்தத்தில் வல்லரசுகளின் பலப்பரீட்சைக்கான பகடைக்காயாக சிரியா அமைந்துள்ளது. கடந்த 7 வருடங்களாக இடம்பெற்றுவரும் இந்த உள்நாட்டுப் போரில் இதுவரை சுமார் 4 லட்சம் மக்கள் உயிரிழந்துள்ளனர் என்று ஐ.நா. சபையின் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

அலெப்போ நகர் கடந்த வருடம் கிளர்ச்சிக் குழுவின் பிடியில் இருந்தது. அதை மீட்பதற்காக ரஷ்யாவும் சிரியாவும் கடுமையான வான் தாக்குதல்களை நடத்தியிருந்தன. பல்லாயிரக் கணக்கான அப்பாவிகள் கொன்றுகுவிக்கப்பட்டனர். இந்த வருடம் அவ்வாறான, அதைவிடக் கொடூரமான நிலை 'கவுடா' நகர மக்களுக்கு ஏற்பட்டுள்ளது. கடந்த ஆறு தினங்களாக அங்கு நடத்தப்பட்டுள்ள கொடூரமான தாக்குதல்களில் சுமார் 550 பேர் உயிரிழந்துள்ளனர். 'உயிரிழந்தவர்களில் அரைவாசிக்கும் மேற்பட்டவர்கள், அதாவது சுமார் 60 வீதமானவர்கள் சிறுவர்களும் குழந்தைகளும்' என்று சிரியாவில் செயற்படும் போர்க் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது. கடந்த 7 வருடங்களாக இடம்பெற்றுவரும் உள்நாட்டுப்போரில் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு தற்போது மனிதப் பேரவலம் இடம்பெற்றுள்ளது என்றும் கவலை தெரிவித்துள்ளது அந்த அமைப்பு.

வழக்கம்போன்று ஐக்கிய நாடுகள் சபை தனது கண்டனத்தை சிரிய அரசுக்கு எதிராகப் பதிவுசெய்துள்ளது. அரங்கேறிக் கொண்டிருப்பது 'போர்க் குற்றம்' என்றவாறாக அது தனது கண்டன அறிக்கையை விடுத்துள்ளது. இதே நிலை தொடர்ந்தால் சிரிய அரசுக்கு எதிராக போர் தொடுக்கப்படும் என்று அமெரிக்கா, பிரான்ஸ் ஆகியன எச்சரித்துள்ளன. இத்தனை எதிர்ப்புக்களை மீறியும் சிரியாவில் மனித வேட்டை தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றது.

அடுத்த 72 மணிநேரத்துக்குள் சிரியாவில் போர் நிறுத்தம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும், இந்தப் போர்நிறுத்தம் 30 நாள்களுக்கு நீடிக்கப்பட வேண்டும், பாதிக்கப்பட்ட இடங்களுக்கு மருத்துவ உதவிகள் அனுப்பி வைக்கப்பட வேண்டும் ஆகிய கோரிக்கைகள் அடங்கிய தீர்மானமொன்று குவைத் மற்றும் சுவீடன் நாடுகளால் ஐக்கிய நாடுகள் சபையில் நேற்றுமுன்தினம் கொண்டுவரப்பட்டது. எனினும் ரஷ்யா உடன்படாததை அடுத்து தீர்மானம் தோல்வியடைந்துள்ளது. ஆக, தீர்மானத்தில், தான் வெளிப்படுத்திய எதிர்ப்பின் மூலம் தனது வேட்டை இனியும் தொடரத்தான் போகிறது என்று சொல்லாமல் சொல்லியுள்ளது ரஷ்யா. ஒன்றுமட்டுமே எம்மால் இயலும். பிரார்த்திப்போம் சிரியாவுக்காக.



# குப்பைகள் உள்ளும் வெளியும்

செ. அன்புராசா அடிகள்

ஜேர்மனி நாடு பிளவுற்று இருந்த காலத்தில் பெர்லின் நகரத்தை கிழக்காகவும் மேற்காகவும் பெரிய மதில் சுவர் பிரித்திருந்தது. ஒருநாள் கிழக்கு பெர்லினைச் சேர்ந்த சிலர், ஒரு பெரிய வாகனத்தில் நிறைய குப்பைகளைக் கொண்டுவந்து மதில் தாண்டி மேற்கு பெர்லின் பக்கம் கொட்டிவிட்டுப் போனார்கள். அவ்வளவு ஆத்திரமும் பகைமையும் குரோதமும் கிழக்கு பெர்லின் நகர மக்கள் மேற்கு பெர்லின் நகர மக்கள் மீது கொண்டிருந்தார்கள். இதற்குப் பதிலடி கொடுக்க நினைத்த மேற்கு பெர்லினை சேர்ந்த மக்களுள் சிலர் முற்றிலும் வித்தியாசமான பாணியில் செயற்பட்டு இருந்தார்கள். அவர்கள் உணவுப் பண்டங்கள், அத்தியாவசிப் பொருட்கள் மற்றும் மரக்கறிகள் என ஒரு லொறி நிறையப் பொருட்களை ஏற்றி மதில் தாண்டி வந்து கிழக்கு பெர்லின் பக்கம் அழகாக அடுக்கி வைத்துவிட்டுப் போனார்கள். அப்படிச் செய்தவர்கள் அந்தப் பொருள்கள் மீது ஒரு வாசகத்தையும் எழுதிவைத்துவிட்டு போனார்கள்: 'ஒவ்வொருவரும் தம்மிடம் என்ன இருக்கிறதோ அதைதான் கொடுப்பார்கள்'.

### பானையில் இருப்பதுதான் அகப்பையில்

இதனை ஒருவகையில், பானையில் இருந்தால்தான் அகப்பையில் வரும் என்று முன்னோர்கள் கூறிவைத்ததை பானையில் இருப்பதுதான் அகப்பையில் வரும் என்று கொஞ்சம் மாற்றிக்கூறுவதன் மூலம் மேற்சொன்ன சம்பவத்தை ஆழச் சிந்திக்கத் தூண்டுவதாக அமையும். ஆக, ஒவ்வொருவரிடமும் என்ன என்ன, எந்த எந்த அளவில் உள்ளதோ அதனை அந்த அந்த அளவில் கொடுப்பார்கள். அது நன்மையானதாகவும் இருக்கலாம், நன்மை பயக்காதவை ஆகவும் இருக்கலாம்.

உள்ளமாகிய பானையில் இரக்கம் இருந்தால் இரக்கச் செயல்கள் வெளிப்படும். மாறாக அரக்கக் குணங்கள் இருந்தால் அரக்கத்தனங்கள் புறப்படும். அமைதியும் பொறுமையும் குடிகொண்டிருந்தால் அன்பும் கனிவும் பரிவும் வெளிவரும். மாறாக வன்முறையும் பொறாமையும் குடியிருந்தால் வாள்(ய்) வெட்டுக்களும் வாதைகளும் தொடரும். ஒவ்வொருவரும் எவை எவற்றை கொண்டிருக்கிறார்களோ அவை அவற்றைத் தம் செயல்களில் வெளிப்படுத்திக்கொண்டிருப்பார்கள்! இது, மிக இலகுவான ஒரு வாழ்வியல் உண்மை. இதில் வலிந்து புகுத்தவும் ஏதுமில்லை, குறைத்துக் கூறவும் யாதுமில்லை!

> உண்மையில், குப்பைப் பிரச்சினையை மிக இலகுவாகத் தீர்த்துவிடலாம்! ஆனால் இந்தக் குப்பைப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாமல் இருப்பதற்கான காரணம் குப்பைகளால்தான் என்பதை எப்போது குப்பைகள் எண்ணிப் பார்க்கிறார்களோ அப்போது குப்பைப் பிரச்சினைக்கான தீர்வைக் கண்டுபிடித்து விடலாம்!

### குப்பைப் பிரச்சினை குப்பைகளால்தான்!

குப்பைப் பிரச்சினை பெரும் பிரச்சினையாக உலகெங்கும் உருவெடுத்து வருவதை அவதானிக்கலாம். வளர்ச்சியடைந்த நாடுகளில் இது ஒரு பிரச்சினையாகவே கணிக்கப்படுவதில்லை. ஏனெனில் அவர்கள் இதற்கான வழிவகைகளை மிகச் சிறப்பாகக் கையாளுகின்ற காரணத்தினால் ஆகும். உண்மையில், குப்பைப் பிரச்சினையை மிக இலகுவாகத் தீர்த்துவிடலாம்! ஆனால் இக்குப்பைப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாமல் இருப்பதற்கான காரணம் குப்பைகளால் தான் என்பதை எப்போது குப்பைகள் எண்ணிப் பார்க்கிறார்களோ அப்போது குப்பைப் பிரச்சினைக்கான தீர்வைக் கண்டுபிடித்து விடலாம்!

### குப்பைகளால் குப்பைக்கு சாவடைந்தோர்

அடுத்து, குப்பையை வைத்து அரசியல் செய்யும் அரசியல்வாதிகளும் இந்த நாட்டில் இருக்கத்தான் செய்கிறார்கள். இல்லையெனில் 2017 தமிழ் சிங்களபுத்தாண்டு தினமாகிய சித்திரைத் திங்கள் 14ஆம் திகதி கொலன்னாவை பிரதேசத்தின் மீதொட்டமுல்லையில் உள்ள குப்பைமேடு சரிந்து சுமார் 40 உயிர்கள் காவுகொள்ளப்படாமல் பாதுகாத்திருக்கலாம் அல்லவா! பத்தாண்டுகளுக்கு மேலாக இந்தக் குப்பை மேட்டினால் ஏற்படப்போகும் பேராபத்துக்களை அந்த மக்கள் எடுத்துக்கூறி தமது பாதுகாப்புக்காகப் போராடி வந்திருக்கிறார்கள். இருந்தபோதும் ஆட்சியில் இருந்த அரசு அதனை அரசியல்படுத்தி அரக்கத்தனம் கொண்டு அடக்கியது. அதன் விளைவு அந்த மக்கள் குப்பைகளால் அநியாயமாகக் குப்பைக்குச் சாவடைந்தனர்.

### ஐந்து வகைக் குப்பைகள்!

இப்போது குப்பைகளை ஐந்தாக வகைப்படுத்துவதோடு குப்பைகளை இலகுவாகத் தரம் பிரிப்பதற்கு ஒவ்வொரு வகை குப்பைக்கும் ஒவ்வொரு நிறத்தினை குறிப்பிட்டு இருக்கின்றார்கள். 1. மீளவும் சுழற்சிக்கு உட்படுத்தப்படும் கழிவுகள் (நீலம்) 2. உக்கும் கழிவுகள் (பச்சை) 3. மீள் சுழற்சிக்கு உட்படுத்த முடியாத கழிவுகள் (கறுப்பு) 4. உலோக-கண்ணாடிப் பொருள் கழிவுகள் (சிவப்பு) 5. பிளாஸ்ரிக் கழிவுகள் (மஞ்சள்). இவ்வாறு கழிவுகளைபிரித்

துச் சேர்த்தெடுப்பது அவற்றை பொருத்தமானமுறையில்பயன்படுத்தவும்அப்புறப்படுத்தவும் உதவியாக இருக்கும் என்பதினால் ஆகும்.
இவ்வாறுஒவ்வொருவகைக்கழிவுக்கும் அந்தஅந்தநிறங்களைச்சுட்டும்பாத்திரங்களைஅல்லது தொட்டிகளை பொது இடங்களில்வைத்திருப்பதைஇப்போதுகாணக்கூடியதாக இருக்கிறது. இந்தச் செயற்பாடு பலபாடசாலைகளிலும்மருத்துவமனைகளிலும் பொது இடங்களிலும் ஏற்கனவே தொடங்கப்பட்டு விட்டது போல்தான் தெரிகிறது. எனினும் குப்பைகளை குப்பைத் தொட்டிகளில் பாத்திரங்களில் சேர்க்கும் பழக்கத்தை பாடசாலைகளில், அலுவலகங்களில் ஆரம்பிப்பது சமூக மட்டத்தில் சூழல்சுற்றாடலைசுத்தமாகவைத்திருக்க பேருதவியாக அமையும்.

**ஐந்து வகையைவிட ஆபத்தான குப்பைகள்!**

மேற்சொன்னவகைப்படுத்தலைவிடவும் இன்னுமொருவகைப்படுத்தலையும்இந்தக் காலத்தில் கவனத்தில் கொள்ளவேண்டி இருக்கிறது. இந்நோக்கில் குப்பைகளை அடிப்படையில் 02 வகையாகப் பிரித்துப் பார்க்கலாம்போல்தோன்றுகிறது. ஒன்று, வெளிக் குப்பை கூளங்கள். இவை, மேற்கூறப்பட்டகுப்பைகளைப்போலவெளியே தெரிகின்றன. அவை பற்றியே மேற்சொன்னபத்திவிபரிக்கிறது. இரண்டாவது, மனக் குப்பை கூளங்கள்! இவை அனேகமாகவெளியேதெரிவதில்லை. வெளியில் உள்ளகுப்பைகூளங்கள்ஆபத்தானவை. அதன்ஆபத்தினையேகொழும்புகொலன்னாவை நகரசபைக்கு உட்பட்ட பிரதேசமான மீதொட்டமுல்லை மக்கள் கடந்த ஆண்டுதமிழ் சிங்களபுத்தாண்டு அன்று அனுபவித்தரர்கள். இதனைநாடுமுழுதும் ஏன் உலகம் முழுதும் கண்ணுற்றது.
ஆனால், அதனைப்போல் அல்லது அதனைவிட ஆபத்தானது காட்டுச் செடிகொடி போல் மனிதர்களின் மனங்களில் வளர்ந்து கிடக்கும் குப்பைகள் என்பதைப் பலர் அறிவதுமில்லை, உணர்வதுமில்லை! மனக் குப்பைகளை கொண்டிருப்பவரின் மனமும்சிந்தனையும்செயற்பாடுகளும்வாழ்வும் எதிர்மறை விளைவு களையே ஏற்படுத்தும். அத்துடன் அடுத்திருப்பவர்களின் மனங்களை பல்வேறு வழிகளில் தாக்கி, காயப்படுத்தி, சித்திரவ தைப்படுத்தி குற்றுயிராக்குவதை யும் காணலாம். மனக் குப்பை கூளங்களின் ஒரு வடிவமே 'கொசிப்'(gossip) ஆகும். ஒன்றைக் குறித்தோ அல்லது ஒருவரைக் குறித்தோ உண்மைக்குப்புறம்பானவற்றைஅவதூறாகக் கூறுவதையே' கொசிப்' என்ற ஆங்கில வார்த்தை சுட்டிநிற்கின்றது.

**புறம் கூறலைத் தவிர்த்தால் புனிதராகலாம்**

'அவதூறுபேசுதல்மிகஅருவருப்பானது. தொடக்கத்தில் இனிப்புத் துண்டு போன்று மகிழ்வூட்டுவதாக இருக்கும். ஆனால் கடைசியில் உள்ளத்தை கசப்புணர்வினால்நிரப்பிநஞ்சூட்டிவிடும்!'எனபாப்பரசர் பிரான்சிஸ் 2014 ஆம் ஆண்டு புனித பேதுரு சக்கத்தில் குழுமிய மக்கள் மத்தியில் குறிப்பிட்டிருக்கிறார். 'அவதூறு பேசுவதை விடாமுயற்சியுடன் தவிர்ப்போம் என்றால்நாம்புனிதர்களாவதுஉறுதிஎன நான் நம்புகிறேன்' என மிக ஆணித்தரமாக-மிகஆழமாகஎடுத்துக்கூறியுள்ளார் பாப்பரசர்.
05வதுகட்டளைஊடாக'கொலைசெய்யாதிருப்பாயாக' என அறிவுறுத்துகிறார் இயேசு. ஒருவருக்குக்கேடுவிளைவிக்கும் உண்மைக்குப் புறம்பான அவதூறான பேச்சு அவரின் பெயரைக் கெடுத்து விடுகிறது. இதுவும்ஒருவரைக்கொன்றுவிடுகின்றது' எனக் அழுத்திக் கூறுவதன் மூலம் அவதூறு பேசுவதை முற்றாகத் தவிர்க்க வேண்டும் எனவும் வலியுறுத்துகிறார் பாப்பரசர் பிரான்சிஸ்.
அடுத்தவரின் தவறுகளை குற்றங்களை ஊதிப்பெருப்பித்துபுள்ளியாகஇருப்பதைப் புழுவாக மாற்றி, பின் புழுவை ஒருவாறாகப்பூச்சியாக்கி, அதன்பின்பெரியபிரயத்தனம் செய்து, பூச்சியாக மாற்றியதைப் பூதமாக்கிக் காண்பிப்பதில் பலருக்கு மகா சந்தோசம். சிறு புள்ளிகூட இல்லாது எதைஎதையோஎல்லாம்சோடித்துஒருபூதத்தை ஆக்கும்ஆற்றல்கொண்டவர்களும்இருக்கத்தான் செய்கிறார்கள். உண்மையில் பூதம் என்பதே சூனியம்தானே!

**வேலை அற்றவர்களின் வேலை!**

அடுத்தவருடையபெயரைக்கெடுப்பதுஒரு பொழுதுபோக்காகக்கூட இன்றைய சூழலில் சிலருக்கு மாறிவிட்டது. இப்படிப்பட்டவர்களின் வாழ்வை, செயற்பாடுகளை ஆராய்ந்து பார்த்தால் இவர்களைப் பற்றி வெளிவராத பல உண்மைகள் வெளிச்சத்திற்கு வரும். மேலும் இப்படிப்பட்டவர்கள் அடிப்படையில் உருப்படியாகச்செய்வதற்கென்றுஒன்றும்இல்லாவர்களாகஇருப்பதனால் அடுத்தவர்பற்றி இல்லாத - பொல்லாத கதைகளை கட்டவிழ்த்துவிட்டு அவற்றைப் பற்றிக்'கதைத்துக்கொண்டு திரிவதைத் தம் இயல்பாகக் கொண்டிருப்பார்கள். ஒருவகையில் இது அவர்களின் இயலாமையின்வெளிப்பாடே! காரணம், தங்களால்சாதிக்கமுடியாததை அவன்/ள் சாதிக்கிறான்ள்/, தங்களால்செய்யமுடியாததை செய்கிறார்கள்! எப்படி இவர்களால் முடிகிறதுஎன்றஒருவகைபொறாமைகூட இவர்களை இவ்வாறான செயற்பாடுகளுக்கு இட்டுச்செல்லக்கூடிய வாய்ப்பிருக்கிறது.

**குப்பைக் குணம் யாரிடத்தில்!**

சென் துறவிகள் இருவர் ஆறு ஒன்றைக் கடக்கநேரிட்டது. அவர்களில்ஒருவர் வயதானவர், மற்றயவர் இளையவர். இருவரும் ஆற்றைக் கடந்துபோது ஆற்று வெள்ளம் திடீரென அதிகரித்தது. அப்போது அவர்களோடு ஆற்றைக்கடந்து கொண்டிருந்தஓர்இளம்பெண்ஒருவர்நடுஆற்றில் அந்தரித்தபோது அவளைக் காப்பாற்றி அவள்மறுகரைஅடையஇளம்துறவிஉதவினார். அவ் இளம்பெண்ணும்தன்உயிரைக் காப்பாற்றிய இளம் துறவிக்குநன்றி தெரிவித்தாள். பின்னர் அவரவர் தத்தம் பயணம் தொடர்ந்தார்கள்.
வழியில்வயதானதுறவி, 'ஒருதுறவிஇளம் பெண்ணைத்தொடலாமா?'எனதமக்குள் முணுமுணுத்தபடி சென்றுகொண்டிருந்தார். அந்த இளம் துறவியோ, 'ஐயா, நான் அவளை ஆற்றங் கரையிலேயே விட்டுவிட்டேன்! நீங்கள் இன்னுமா அவளை சுமந்துகொண்டு வருகிறீர்கள்?' எனக் கேட்டபோது அவ்வயதான துறவி தன் நிலையுணர்ந்து வெட்கித்துப் போனார்.

**குப்பைகளைக் கொண்டாடுகிறவர்கள்!**

உளநலன்பாதிக்கப்பட்டஒருவன்பயணப் பொதிஒன்றில்பலபொருள்களைவைத்திருந்தான். அந்தப் பொதியினுள் இருந்து ஏதோஒருபொருளைஎடுப்பதும், கையில் வைத்துப்பார்ப்பதும், அதனைஏசுவதும், பின் அப்பொருளை பொதியினுள் வைப்பதும் என இந்தச் செயலைத் தொடர்ந்து மீண்டும் மீண்டும் செய்து கொண்டிருந்தான். இந்தச் செயலைப் பார்த்தவர்கள் உண்மையில் அவன் மனநோயாளி என்பதைப்புரிந்துகொண்டார்கள். உண்மையும்அதுதான். குப்பைகளால்ஏற்படும் எல்லா வகைப்பட்ட குப்பைப் பிரச்சினைகளையும்தீர்ப்பதற்கானவழிகுப்பைகளை பொதுவெளி, மன வெளிகளில் இருந்து அகற்றுவதும்அப்புறப்படுத்துவதும்தான்!

**தீர்த்துவிடவேண்டும், தொடர்ந்தால் ஆபத்து!**

ஏதோவொருகாரணத்துக்காகத்தங்களுக்குப்பிடிக்காதவர்களை, தம்மீதுவீணாகக் குற்றம் சுமத்தியவர்களை, தமக்கு ஏசியவர்களை, தம்கோபத்திற்குஉள்ளானவர்களைத் தம் நினைவுக்கு வருகிறபோது ஏசித் தீர்த்துவிடுவது ஒருவகையில் நல்லது. காரணம் உடலுக்கு ஒவ்வாதவை வாந்தியாக வெளிவருவதுபோல மனதில் அடைகாக்கக் கூடாத உணர்வுகளான வெறுப்பு, கோபம், பகைமைபோன்றவை வெளியேறுவது கட்டாயமானது. அவ்வகையில் உள்ளத்திற்கு ஒவ்வாத, வேண்டாத உணர்வுகள் ஏச்சாக பேச்சாக பெருமூச்சாக பெரும் சத்தமாக வெளியேற்றுவது உளநலத்திற்குநன்மைபயக்கலாம். ஆனால், அதனைஎங்கு, எப்படிச்செய்வது என்பது மிகமிக முக்கியமானது. உண்மையில், உளநலத்தோடு வாழ்பவர் ஒரு தடவை அல்லது ஓரிரு தடவைகளோடு இப்பேர்ப்பட்ட செயற்பாட்டை நிறுத்திக் கொள்வார். ஆனால்சிலர்மனநலன்பாதிப்புற்றவரைப்போல நினைக்கிற போதெல்லாம் ஏசுபவராக பேசுபவராக இருப்பாரென்றால் அவரும் மனநலன் பாதிப்புற்ற நிலையை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறார் என்பதே அடையாளமாகும். இப்படிப்பட்டவர்களின் செயல் வாந்தியெடுத்ததை மீண்டும்உண்பதுபோன்றஒன்றாகவே மாறிவிடும். இப்பேர்ப்பட்டவர்கள் உளவளத் துணையை நாடுவது அவருக்கும், குறிப்பாக, அவரைச்சுற்றிஇருப்பவர்களுக்கும் பெரும் ஆசீர்வாதமாக அமையும்.

*குப்பைகளைஅடிப்படையில்02வகையாகப் பிரித்துப் பார்க்கலாம் போல் தோன்றுகிறது. ஒன்று, வெளிக் குப்பை கூளங்கள்.. இரண்டாவது, மனக்குப்பை கூளங்கள்!இவைஅனேகமாகவெளியே தெரிவதில்லை. வெளியில்உள்ளகுப்பை கூளங்கள் ஆபத்தானவை. அதன் ஆபத்தினையே கொழும்பு கொலன் னாவை நகரசபைக்கு உட்பட்ட பிரதேசமான மீதொட்டமுல்லைமக்கள்கடந்தஆண்டு தமிழ் சிங்கள புத்தாண்டு அன்று அனுபவித்தார்கள். இதனை நாடு முழுதும் ஏன் உலகம்முழுதும்கண்ணுற்றது. ஆனால், அதனைப்போல் அல்லது அதனைவிட ஆபத்தானது காட்டுச் செடி கொடிபோல் மனிதர்களின் மனங்களில் வளர்ந்து கிடக்கும் குப்பை கள் என்பதைப் பலர் அறிவதுமில்லை, உணர்வதுமில்லை!*



## ஆசிரியருக்கான கடிதம்

# மகிழ்ச்சியான, திருப்தியான செய்தி இது

யாழ்ப்பாணபொதுநூலகத்துக்குவருகைதரும்வாசகர்களின்எண்ணிக்கை கடந்த வருடம் அதிகரித்துள்ளது என்றதொரு செய்தியை 'உதயன்' பத்திரிகையின் நேற்றைய பதிப்பில் காணக்கூடியதாக இருந்தது. அருமையான, அழகான, அற்புதமான செய்தியல்லவா இது.
எனதுமண்ணுக்கேஉரித்தானஅறிவுத்தேடல்செத்துவிடவில்லை. அதுஇன்றும்உயிர்ப்புடன்இருக்கிறது. இனிவரும்சந்ததிகளும்அதைக்கட்டிக்காக்கும் என்றுஆணித்தரமாகஎனதுகருத்தைப்பதிவுசெய்யவேஉதயன் ஆசிரியருக்கானகடிதம்பகுதிக்கு இதை அவசரஅவசரமாக வரைந்தேன்.
போதை, வாள்வெட்டு, கடத்தல், துர்நடத்தை என்று தீண்டத்தகாத, எண்ணத்தகாத, வெளிப்படுத்தத் தாகாத செய்திகளுக்கு மத்தியில் எவ்வளவொரு அற்புதமான, ஆத்மார்த்தமானசெய்திஇது. யாழ்ப்பாணபொதுநூலகம்கடந்துவந்த பாதை துன்பம் நிறைந்தது. அது யாழின் மகுடமாக மாறியுள்ளதற்கு அதன் வரலாறு இன்றியமையாதது. அந்த வரலாற்றுக்கு கடந்த வருடத்தில் குறித்த நூலகத்துக்குச்சென்றுதிரும்பியஅத்தனைவாசகர்களும்மேலும்அணிசேர்த்துள்ளனர். அனைவருக்கும் வாழ்த்துக்கள். உங்கள் அறிவுப்பசி அது சார்ந்த தேடல் இடைவிடாமல் தொடரட்டும்.
இதே செய்தி அடுத்த வருடமும் வரவேண்டும். ஒவ்வொரு வருடமும் வந்துகொண்டிருக்க வேண்டும். அற்புதமான, அழகான நூலகமொன்று எமக்குக் கிடைத்துள்ளது. தொடர்ந்து பயன்படுத்துவோம்.

லயனல்

# அன்பேதான் அரிச்சுவடி




'உங்கள் விண்ணகத் தந்தை நிறைவுள்ளவராக இருப்பது போல் நீங்களும் நிறைவுள்ளவராய் இருங்கள்'

இதற்கு அடித்தளமாக விளங்குவது அன்பாகும். அன்பு முதலில் கடவுளோடு எம்மை இணைக்கின்றது. திருச்சட்டங்களை வாழ்ந்து காட்ட கடவுளின் நியமங்களின்படி செயற்பட எம்மைத் தூண்டுகிறது. அன்பிலே வாழ்பவன் இறைவனில் நிலைத்திருப்பான். அதே அன்பை அடுத்தவரிடமும் வெளிப்படுத்துவான்.

எதிரியையும் மன்னித்து ஏற்றுக் கொள்ளக்கூடிய மனநிலை உருவாகும். இதனையே இறைவன் விரும்புகின்றார்.

எம்மீது அன்புகாட்டுபவர் மீது அன்பைப் பொழிவதைவிட பகைவர் மீது அன்பு செலுத்தும் மனநிலையை உருவாக்க வேண்டும். பழிக்குப்பழி அல்ல, விழிக்குவிழி அல்ல, பல்லுக்குப்பல் அல்ல. துன்புறுத்துவோருக்காகச் செபிப்பதேமேலானது. என்றும் அன்பு மொழி பேசுவோம். இறை உறவாய் நல்லுறவை வளர்ப்போம். அப்போது தான் நிறைவுள்ள மக்களாக மாறமுடியும். அன்பைப் பரிமாறும் காலமா இந்தத் தவக்காலம் அமையட்டும்.

எஸ். யேசுதாஸ், கொழும்புத்துறை.



# தலையை ஆதிக்கம் செய்கின்ற நவக்கிரகங்கள்

மனிதன் பிறக்கும்போதே, அவனுக்கான தலைவிதி எழுதப்படுவதாக மக்களின் நம்பிக்கை. அந்தத் தலையெழுத்தைத்தான் ஜோதிடம் கணித்துக் கூறுகிறது. 'எண் ஜான் உடலுக்கு சிரசே பிரதானம்' என்பார்கள். ஆறு அடி உயரம் கொண்ட மனிதனில், ஒரு அடி கொண்ட தலை தான் முக்கியத்துவம் பெறுகிறது.

எமது உடலில் ஏற்படும் அனைத்து வகையான உணர்ச்சிகளுக்கும் தலையே முக்கிய பங்கு வகிக்கிறது. எம்முடைய அனைத்து செயல்களுக்கும் மூளையே உத்தரவு பிறப்பிக்கிறது. மூளையின் உத்தரவின்றி எந்த விதமான அசைவுகளும், உணர்வுகளும் எம்மிடம் இருக்காது. ஒரு மனிதனின் அடையாளம் என்ன என்பது, தலையை வைத்து தான் கூறப்படுகிறது.

நாம் ஒரு கடின முயற்சியில் வெற்றி பெறுகிறோம். அதற்குரிய வெற்றி கிரீடம் எமது தலையில் தான் வைக்கப்படுகிறது. எம் தலை அப்படி என்ன செய்து விட்டது?. அந்த வெற்றிக்குரிய அறிவும், ஆற்றலும், விடாத முயற்சியும், ஓயாத உழைப்பும் மூளையின் செயற்பாட்டால் வந்தது. எமது மூளைக்கு மகுடம் சூட்ட முடியாமல், அந்த மூளை பகுதி இருக்கும் தலைக்கு மகுடம் சூட்டி விடுகிறோம். ஆழ்ந்த சிந்தனை, தெளிவான அறிவு, அதி புத்திசாலித்தனம் இவையாவற்றுக்கும் காரணம் எம் மூளை தான்.

இத்தகைய சிறப்புகள் கொண்ட தலைப்பகுதியை நவக்கிரகங்கள் எவ்வாறு ஆதிக்கம் செய்கின்றன என்பதைப் பார்ப்போம்.

**சூரியன்**: உச்சி தலை, மண்டை ஓடு, கண் ஒளி, மேல் தாடை, கருவிழி ஒட்டிய தசை, பார்வை சக்தி.

**சந்திரன்**: கவர்ச்சியான காந்த ஈர்ப்பு கொண்ட முக அமைப்பு, முக வடிவம், கன்னம், தலையில் உறையும் நீர், எச்சில், சுரப்பிகள், நெற்றி.

**செவ்வாய்**: மூளையை சுற்றி ஓடும் குருதி ஓட்டம், குருதி நாளம், செவிப்பறை, மேல் உதடு.

**புதன்**: சிறு மூளை, இரண்டு காது, தலை உச்சியில் தொடங்கும் நரம்பு மண்டலம், கண்களுக்குள் இருக்கும் நரம்பு.

**குரு**: பெரிய மூளை, மூளையின் சக்தி, பற்கள், தலை தசைகள், கண் கருவிழி.

**சுக்ரன்**: மூக்கு, அழகான மூக்கு வடிவம், கண்கள் கீழ் தாடை, கீழ் உதடு, கண் லென்ஸ், பார்வையின் தூரம்.

**சனி**: பின் தலை, தலைமுடி, புருவம், நாக்கு, நாக்கின் கீழ் உள்ள தசைகள், சிறு நாக்கு.

**ராகு**: மூக்கு துவாரம், நாசி, மூச்சுக் குழாய்.

**கேது**: பற்களைத் தாங்கும் ஈறுகள், கீழ் தாடை தசைகள்.

எமது ஜாதகத்தில் ஏதாவது கிரக பாதிப்புகள் இருந்தால், அதற்குரிய அவயங்களில் பாதிப்புகள் உண்டாகும். ஒருவரது ஜாதகத்தில் குருவும், புதனும் இணைந்து இருந்தால், அந்த நபர் மிகப்பெரிய அறிவாளியாக இருப்பார். இதுவே குரு, புதன் வலிமை குருவாக காணப்பட்டால், அந்த நபரின் அறிவுக்கூர்மை சொல்லும் படியாக இருக்காது. எமது மூளைக்கு அதிபதியாக குருவும், நரம்புக்கு அதி பதியாக புதனும் இருப்பதாலேயே இந்த அறிவுத் திறன் வெளிப்படுகிறது. ஆகவே கிரகங்களின் காரணமாகத் தான் எமது செயற்பாடுகள் உள்ளது என்பதை ஜோதிட சாஸ்திரங்கள் எமக்கு உணர்த்துகின்றன.

## வரலாற்றில் இன்றைய தினம் 24.02.2018

1303 - ஸ்கொட்லாந்தின் விடுதலைக்கான முதலாவது போரான 'றொஸ்லின் போர்' ஆரம்பமானது.

1386 - நேபிள்ஸ் மற்றும் ஹங்கேரி அரசர் மூன்றாம் சாள்ஸ் புடாவில் வைத்துப் படுகொலை செய்யப்பட்டார்.

1826 - யன்டோபா ஒப்பந்தத்தை அடுத்து ஆங்கிலேய - மியன்மார் போர் முடிவுக்கு வந்தது.

1848 - பிரான்ஸ் அரசர் லூயிஸ் பிலிப் முடிதுறந்தார்.

1881 - சீனாவும் ரஷ்யாவும் சீன - ரஷ்ய ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டன.

1918 - எஸ்தோனியர் சுதந்திர அறிவிப்பை விடுத்தனர்.

1976 - கியூபாவின் தற்போதைய அரசமைப்பு முறைப்படி அறிவிக்கப்பட்டது.

2008 - கியூபாவின் முன்னாள் அரச தலைவரான பிடல் காஸ்ரோ ஓய்வு பெற்றார்.

## நாளை

**25.02.2018**

ஞாயிற்றுக்கிழமை

**மாசி 13**

திதி: தசமி மாலை 5.44
நட்சத்திரம்: மிருகசீரிடம் காலை 07.35 வரை
சுபநேரம்: 09.29–10.59 வரை
ராகுகாலம்: 04.59–06.29 வரை

# பத்தி எழுத்து

## ஆசிரிய சமூகத்துக்கு ஓர் எச்சரிக்கை இது

தாம் பணி புரிந்த பாடசாலையில் கல்வி கற்ற ஒன்பது வயதேயான ஒன்றுமறியாத அப்பாவிச் சிறுமியை ஏமாற்றி அழைத்துச் சென்று வன்புணர்வு செய்த பாடசாலை அதிபருக்கு 10 ஆண்டுகள் கடூழியச் சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்துள்ளது யாழ்.மேல் நீதிமன்றம். ஒட்டுமொத்த கல்விச் சமூகமும் வெட்கித் தலைகுனியும் அளவுக்கு அதிபர் மிருகத்தைவிடக் கேவலமாக நடந்துள்ளார். அதற்குரிய தண்டனையும் பெற்றுள்ளார். மாதாவுக்கும் பிதாவுக்கும் அடுத்த் நிலையிலுள்ளவர் குரு. தெய்வதற்குக் கூட குருவுக்கு அடுத்த இடம்தான் வழங்கப்பட்டுள்ளது. இத்தகைய உயர்ந்த நிலையில் வைத்து மதிக்கப்படுகின்ற ஆசிரியர்கள் இழிவான செயல்களில் ஈடுபடுவதை எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாது.

தீர்ப்பை வழங்கிய மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் கூறிய சில கருத்துக்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. இந்தத் தீர்ப்பானது பாடசாலை மாணவிகள் மீது பாலியல் தொல்லை கொடுக்கும் அதிபர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் ஒரு பாடமாகவும் அதேவேளை எச்சரிக்கையாகவும் அமைய வேண்டும்.

மேலும் இந்தச் சம்பவமானது வேலியே பயிரை மேய்வதற்கு ஒப்பானதாகும். தமது பிள்ளைகள் சிறந்த கல்வியைப் பெற வேண்டும் என்பதற்காகவே அவர்களைப் பெற்றோர் பாடசாலைக்கு அனுப்பி வைக்கின்றனர். அவ்வாறு பாடசாலை அதிபரையும் ஆசிரியர்களையும் நம்பி அனுப்பி வைக்கப்பட்ட பிள்ளையை பாடசாலை அதி பரே பாலியல் இச்சைக்கு உள்ளாக்கியமை பாரதூரமானதொரு குற்றச் செயலாகும். இவ்வாறு யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி குறிப்பிட்டி ருந்தார். அண்மைக்காலமாகவே பாடசாலை மாணவிகளுக்குப் பாலியல் தொல்லை கொடுப்பதாக ஆசிரிய சமூகத்தினர் மீது குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு வருகின்றன. ஓரிருவர் இத்தகைய செயல்களில் ஈடுபடுகின்ற போதிலும் முழு ஆசிரிய சமூகமும் மக்களால் வெறுக்கப்படுகின்றதொரு நிலை உருவாகுமேயானால் அதன் எதிர் விளைவுகள் பாரதூரமானதாக மாறிவிடும் என்பதைச் சொல்லத் தேவையில்லை.

தம்மீது பெரு மதிப்புக் கொண்ட மாணவிகளை இழிவுபடுத்துகின்ற செயல்களில் ஆசிரியர்கள் ஈடுபடுவதை எவ்வாறு மன்னிக்க முடியும்? யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி குறிப்பிட்டதைப் போன்று அவர் வழங்கிய தீர்ப்பானது அனைத்து ஆசிரியர்களுக்கும் ஒரு பாடமாகவும் எச்சரிக்கையாகவும் அமைய வேண்டும்.

## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**திருமதி வாலாம்பிகை யோகராஜா (அம்பிகை)**

(ஓய்வுபெற்ற ஆசிரியை – இரத்மலானை, இந்துக்கல்லூரி)

அன்னை மடியில் 31.03.1929 — இறைவன் அடியில் 24.02.2014

திதி 10.03.2018

எங்கள் வீட்டுக்குலவிளக்கே! பாசத்தின் பிறப்பிடமாய்
பண்பின் உறைவிடமாய்
அன்புக்கு இலக்கணமாய் வாழ்வின் வழிகாட்டியாய்
வாழ்ந்து எம்மை வழிநடத்திய
எங்கள் அன்புத் தெய்வமே!
எம்மை சடுதியாக விட்டுப்பிரிந்தது ஏனோ?
காணும் இடமெல்லாம் உங்கள் புன்னகை பூத்தமுகம் தோன்ற...
கண்கள் நிறைகிறதே! கண்ணீர் சொரிகிறதே!
எங்கள் அன்புத் தெய்வமே ஆண்டது நான்கானாலும்
உங்கள் நினைவுகள் என்றும் எமை விட்டகலாது
ஓயாது உம் குரல் இனிமை எதிரொலிக்க...
ஒவ்வொரு கணமும் நினைத்து நினைத்து அழுகின்றோம்
அம்மா என்றழைக்க நீங்கள் இல்லையே!
அம்மா உங்கள் ஆத்மா சாந்தியடைய நெஞ்சுருகி
நித்தமும் இறைவனை வேண்டி நிற்கும்....

**அன்புள்ள கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,சகோதர சகோதரிகள், அவர்களின் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்.**

18, Inner Fairline Road, Dehiwela.
Tel.No:- 27 16624

(ACO/170)(11.17)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



கடந்த 25.01.2018 வியாழக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி

**அமரர் சுந்தரம் தங்கம்மா**

பிறப்பு 16.07.1927 — இறப்பு 25.01.2018

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 22.02.2018 வியாழக்கிழமை காலை 7.00 மணிக்கு கீரிமலை புனிததீர்த்தக் கரையில் நடைபெற்றன. வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (24.02.2018) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்**

மடத்தடிச் சந்தி,
பெருங்குளம் வீதி, சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

(J. 757)(13.7)

## மரண அறிவித்தல்

### கதிரவேலு செல்லத்துரை

(முன்னாள் நெல் சங்க முகாமையாளர் – கண்டாவளை)



மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு செல்லத்துரை 22.02.2018 வியாழக்கிழமைஇறைவனடிசேர்ந்தார்.

அன்னார் அன்னலட்சுமியின் அன்புக் கணவரும், பாஸ்கரன், துசியந்தன், ஜானகி (லண்டன்), கோகிலா (ஜேர்மனி), காலஞ்சென்ற பார்த்தீபன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.02.2018) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 11 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக நுணாவில் குச்சப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

தகவல்
குடும்பத்தினர்.

077 247 9793

(ACH/330)(11.17)

உதயன்
விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com, 021 493 1111

# மரண அறிவித்தல்

## தம்பிராசா தவராசா

(இளைப்பாறிய முன்பள்ளி உதவிக்கல்விப்பணிப்பாளர் - தீவக வலயம், தலைவர் - புங்குடுதீவு பெருங்காடு கிராஞ்சியம்பதி கந்தசுவாமி ஆலய தர்மகர்த்தா சபை, தலைவர் - புங்குடுதீவு இறுப்பிட்டி ஐங்கரன் சனசமூக நிலையம்)



தோற்றம் 27.11.1945 — மறைவு 21.02.2018

புங்குடுதீவு 05 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், புங்குடுதீவு 06 ஆம் வட்டாரத்தை வதிவிடமாகவும், கலாசாலை வீதி, திருநெல்வேலியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிராசா தவராசா (21.02.2018) புதன்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிராசா (ஓய்வு பெற்ற இலிகிதர், புங்குடுதீவு) காமாட்சி தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் (ஓய்வு பெற்ற அதிபர், புங்குடுதீவு) மற்றும் செல்லம்மா தம்பதி யரின் அன்பு மருமகனும் மீனலோசனியின் அன்புக்கணவரும் சகிலா, கார்த்திகா, ஜெயகாந் ஆகியோரின் பாசமிகு தந்தையும் பிரதீபன், கஜேந்திரன், காயத்திரி ஆகியோரின் அருமை மாமனாரும் யோகேஸ்வரி, சங்கரராசா, நகுலேஸ்வரி ஆகியோரின் அன்புச்சகோதரரும் சர்வலோச்னி, காலஞ்சென்ற தேவதாசன் மற்றும் குகதாசன், கோகிலதாசன், குமாரதாசன், தியாகராசா காலஞ்சென்ற சவுந்தராதேவி மற்றும் துரைசிங்கம் ஆகியோரின் அன்புமைத்துனரும் கலன்சூரியவின் அன்புச்சகலனும் ஜெகதீஸ்வரி (விஜயா), றொமானா, சந்திரிகா, கிரியா ஆகியோரின் உடன்பிறவாச்சகோதரரும் சமீதா, நிலக்ஷன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.02.2018) ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று மு.ப. 9 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக புங்குடுதீவு கேரதீவு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கலாசாலை வீதி, 04 ஆம் ஒழுங்கை ,**
**திருநெல்வேலி, யாழ்ப்பாணம் .**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(cs9373)(17.8)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், நீர்வேலி அத்தியார் பாடசாலைக்கு முன்பாக உள்ள 3 பரப்பு உறுதிக்காணி உடன் விற்பனைக்கு.

**077 770 7170, 077 778 8111, 024 222 1693**

(00271)(11,17)

## கண்ணீர் அஞ்சலி

"எமது மன்ற உறுப்பினரும் சேமிப்புத்திட்ட உறுப்பினருமான"

**செ.துஷ்யந்தன்**

*(துஷி தையலகம் சாவகச்சேரி)*

அவர்களின் பாசமிகு தந்தை

**கதிரவேலு செல்லத்துரை**

அவர்கள் 22.02.2018 அன்று காலமானார். அன்னாரின் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு மன்றம் தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறது.

(IN 5971/15/17)

**சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்**

## IZZY

உங்கள் சகல விதமான காஸ்குக்கர் (Gas Cooker) உடனுக்குடன் பழுதுபார்த்து Service செய்து குறைந்த கட்டணத்துடன் 6 மாத உத்தரவாதத்துடன் திருத்தி Service செய்து கொடுக்கும் ஒரே ஸ்தாபனம்.

(CS 14193/15/17)

**IZZY 179, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 078 494 5757**

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் (50 பேர்ச்சஸ்) 5 பரப்புக் காணியில் 8 அறைகள், 2 ஹோல், 5 குளியலறைகள் உடைய வீடு விற்பனைக்கு.

**077 760 1224**

## மரண அறிவித்தல்



**அருட்சகோதரி மரியகொறற்றி பஸ்தியாம்பிள்ளை**

கரம்பனை பிறப்பிடமாகவும், திருச்சிலுவைக் கன்னியர்மடம், யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட அருட்சகோதரி மரியகொறற்றி பஸ்தியாம்பிள்ளை 22.02.2018 வியாழக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பஸ்தியாம்பிள்ளை சின்னத்துரை - அன்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான அலெக்சாண்டர் அழ்கராசா , வலன்ரைன் பூராசா, இன்பம் (கனடா), புஸ்பம் (கொழும்பு), புனிதம் (கனடா), சுகி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், றுக்குமணி, மணி, காலஞ்சென்ற பிரான்சிஸ், றெஜினோல்ட் (கொழும்பு), ராஜசிங்கம் (கனடா), ஜோர்ஜ் (கனடா) ஆகியோரின் மைத்துனியும், ஒஸ்மன், துஷி, அஜந்தா, குயின்ரன், விஜிதா ஆகியோரின் மாமியும், விஜி, ரஜி, றொபின்சன், அருட்சகோதரி டிலிசியா (டொறிஸ் திருச்சிலுவை கன்னியர்மடம், கொழும்பு), தர்சினி, அன்று, மிளான், நிகால், நிஷாந்தி, வேளா, ஜெருஷா, கிறிஸ்ரா ஆகியோரின் பெரியம்மாவுமாவார்.

அன்னாரின் பூதவுடல் திருச்சிலுவைக் கன்னியர் மடத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்ள்ளது. இறுதிக்கிரியைகள் 26.02.2018 திங்கட்கிழமை பிற்பகல் 3 மணியளவில் புனித மரியன்னை பேராலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

(CS/14189)(11,17)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



அமரர் **பொன்னையா மோகனராசன்**

**(கமலக்கண்ணனி)**

எமது குடும்பத் தலைவர் கடந்த 25.01.2018 அன்று எம்மை விட்டுப் பிரிந்த செய்திகேட்டு உடன்வந்து உதவியோர், தொலைபேசி, தந்திமூலம் அனுதாபம் தெரிவித்தோர், நேரில் வருகை தந்து அன்னாரின் ஈமைக்கிரியைகளில் பங்கு கொண்டோர், உதவியோர், உணவு வழங்கியோர், பனர்கள், அஞ்சலிப்பிரசுரங்கள் மூலம் அனுதாபம் தெரிவித்தோர், 23.02.2018 அன்று கீரிமலையில் நடந்த கிரியை நிகழ்வில் பங்கு கொண்டோர் மற்றும் பல்வேறு வகையில் எமக்கு உதவி நின்றோர் அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பில் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு இன்று (24.02.2018) சனிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் கலந்துகொள்வதோடு தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் பங்கு கொள்ளுமாறு தாழ்மையுடன் வேண்டுகின்றோம்.

(CS/14192)(11,17)

இல.62, இராமலிங்கம் வீதி,
முடமாவடி, திருநெல்வேலி.
077 678 7363, 077 211 5897

**குடும்பத்தினர்.**

## பெயர் மாற்றம்

இதுவரை காலமும் **செல்வேந்திரன் வீரப்பன்** என இருந்த எனது பெயரை இன்றிலிருந்து அனைத்து ஆவணங்களிலும் **செல்வேந்திரன் விதுசன்** என இலங்கை சோசலிச ஜனநாயக குடியரசுக்கு அமைவாக உறுதி செய்து கொள்கின்றேன்.

(AKN 365/15/17)

**தகவல்: செ. விதுசன்**

## ES Printers

மக் பிரிண்ட் (MUG) 450/=



# 357, Kasthuriyar Road, Jaffna.

021 492 7471 / 021 492 7472

## இந்த வாரம்









ஓயாத குரல்

கப்பல் வந்திருக்கு...

ஐக்கியத்தைக் கோரும் தமிழ் மக்கள்

பின்பற்ற வேண்டிய முன்னுதாரணம்

உணவுக்குத் தளம்பும் இலங்கை


மொரீஷியஸின் வரலாற்றுப் பாதையில் பழந்தமிழர்

ஏட்டுச் சுரக்காய்களால் சீரழியும் விளையாட்டுத்துறை









அனைத்து முகவர்களிடமும் பெற்றுக்கொள்ளலாம்

தொடர்புகளுக்கு: 021 493 2222

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** பயன்தராத விஷயங்கள்பற்றி பேசவேண்டாம். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி சுமாராக இருக்கும். அளவான பணவரவு கிடைக்கும். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும்.

**இடபம்:** பேச்சு, செயலில் வசீகரம் உண்டாகும். நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால் இலாபம் அதிகரிக்கும்.

**மிதுனம்:** சுயதேவையை நிறைவேற்ற ஆர்வம் கொள் வீர்கள். முக்கியமான விஷயம் மறந்து போகலாம். தொழில், வியாபாரத்தில் நிதானம் பின்பற்றுவது நல்லது.

**கடகம்:** முன்யோசனையுடன் செயல்பட்டு வருவீர்கள். திட்டமிட்ட செயல் இலகுவாக நிறைவேறும். தொழில், வியாபார வளர்ச்சியால் பெருமிதம் கொள்வீர்கள். ஆதாயம் உயரும்.

**சிங்கம்:** வசீகர பேச்சால் பிறரை கவர்வீர்கள். எதிரியால் இருந்த தொல்லை குறையும். தொழில், வியாபார வளர்ச்சி யால் நன்மை காண்பீர்கள். நிலுவை பணம் வசூலாகும்.

**கன்னி:** உங்கள் மனதில் சோம்பல் குணம் ஏற்படலாம். முக்கியமான பணிகளை தாமதமின்றி நிறைவேற்றுவது நல்லது. தாயின் ஆறுதல் வார்த்தை நம்பிக்கை தரும்.

**துலாம்:** எதிர்மறையாக பேசுபவர்களிடம் விலகுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் நேரம் தவறாமையை பின்பற்றுவது நல்லது.

**விருச்சிகம்:** மனதில் தெய்வீக சிந்தனை வளரும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி இலக்கு எளிதில் நிறைவேறும். கூடுதல் வருமானத்தால் வாழ்க்கைத் தரம் உயரும்.

**தனுசு:** பேச்சு, செயலில் நேர்மை நிறைந்திருக்கும். நண்பரிடம் பெற்ற உதவிக்கு நன்றி சொல்வீர்கள். தொழில், வியாபாரத்தில் திருப்திகரமான வளர்ச்சி உருவாகும். வருமானம் அதிகரிக்கும்.

**மகரம்:** பணிகளை கூடுதல் கவனமுடன் நிறைவேற்றுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் மிதமான லாபம் கிடைக்கும். குடும்பத்தின் பணத்தேவை அதிகரிக்கும்.

**கும்பம்:** எதிர்மறை எண்ணம் உள்ளவர்களிடம் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் வேலைப்பளு அதிக ரிக்கும். லாபம் சீராக இருக்கும்.

**மீனம்:** மனம், செயலில் உற்சாகம் நிறைந்திருக்கும். நண்பர்க ளிடம் கலை உணர்வுடன் பேசுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிப்பணி நிறைவேறும்.




# மார்ச் 10இல் வெளியாகிறது காலா 'டீசர்'

கபாலியைத் தொடர்ந்த பா. ரஞ்சித் இயக்கத்தில் ரஜினி நடித்துள்ள படம் காலா. ரஜினியுடன் ஹூமா குரோஷி, நானாபுடேகர் உட்பட பலரும் நடித்துள்ளனர். சந்தோஷ் நாராயணன் இந்தப் படத்துக்கு இசையமைத்துள்ளார். இந்தப் படத்தின் படப்பிடிப்பு கடந்த ஆண்டே முடிந்துவிட்டபோதும் 2.0 படத்துக்காக காலா படத்தின் வெளியீட்டைத் தள்ளிவைத்தனர். அதனால் காலா படத்தின் முன்னோட்டக் காணொலியும் வெளியிடப்படவில்லை. தற்போது 2.0 படத்தின் வெளியீடு பிற்போடப்பட்டுள்ளதால் அந்தப் படம் வெளியாக இருந்த ஏப்ரல் 27ஆம் திகதி காலா திரைக்கு வருகிறது. காலா படத்தின் முன்னோட்டக் காணொளியை மார்ச் 10ஆம் திகதி வெளியிடத் திட்டமிட்டுள்ளனர்.




# சுடோக்கு

எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 4 | | | |
| | 1 | | | 3 | | | 2 | |
| 8 | | 5 | | | | 1 | | 7 |
| | | 1 | | | | | | 4 |
| | 9 | | | 6 | | | 3 | |
| 7 | | | | | | 8 | | |
| 5 | | 4 | | | | 9 | | 8 |
| | 2 | | | 1 | | | 6 | |
| | | | 9 | | | | | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 8 | 5 | 4 | 7 | 3 | 6 | 2 | 9 |
| 7 | 4 | 2 | 1 | 6 | 9 | 3 | 8 | 5 |
| 6 | 3 | 9 | 8 | 2 | 5 | 7 | 4 | 1 |
| 4 | 9 | 1 | 7 | 5 | 2 | 8 | 3 | 6 |
| 3 | 5 | 7 | 6 | 1 | 8 | 4 | 9 | 2 |
| 8 | 2 | 6 | 3 | 9 | 4 | 1 | 5 | 7 |
| 9 | 1 | 4 | 5 | 3 | 7 | 2 | 6 | 8 |
| 2 | 6 | 8 | 9 | 4 | 1 | 5 | 7 | 3 |
| 5 | 7 | 3 | 2 | 8 | 6 | 9 | 1 | 4 |

நேற்றைய விடை




செல்லம் கொடுத்து வளர்ப்பது என்பது. இப்பொழுது "செல்"லை கொடுத்து வளர்ப்பது!!

twitter

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரை களையும் கொண்டது. 3X3ஆக உள்ளே 3 நிரல்களையும் 3 நிரைகளை யும் கொண்டி ருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கி றார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக் கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை.





## கற்றுக்கொள்வோம்

பூக்களிடம் கற்றுக்கொள்
புன்னகை புரிவாய்!
மரங்களிடம் கற்றுக்கொள்
வள்ளலாய் வளர்வாய்

பறவையிடம் கற்றுக்கொள்
உறவை இணைப்பாய்
விலங்கிடம் கற்றுக்கொள்
வீரமாய் நடப்பாய்

நதியிடம் கற்றுக்கொள்
நன்மைகள் செய்வாய்
மலையிடம் கற்றுக்கொள்
மாண்புடன் இருப்பாய்

கடலிடம் கற்றுக்கொள்
ஞானத்தைப் பெறுவாய்
காற்றிடம் கற்றுக்கொள்
காலத்தை வெல்வாய்!

விண்ணிடம் கற்றுக்கொள்
விஞ்ஞானி ஆவாய்
மண்ணிடம் கற்றுக்கொள்
வாழ்வியல் தெளிவாய்!

## சேர்த்தெழுதுக

1. நெய் + வயல் - ..............
2. பல் + பொடி - ..............
3. மலை + உச்சி - ..............
4. மரம் + வேர் - ..............
5. முள் + செடி - ..............
6. தமிழ் + சொல் - ..............
7. மலர் + செண்டு - ..............
8. வாழை + தண்டு - ..............

## பிரித்தெழுதுக

1. வடகிழக்கு - ..............
2. கப்பற்கூலி - ..............
3. பச்சைக்கிளி - ..............
4. மனமாற்றம் - ..............
5. தேன்மொழி - ..............
6. வாழைக்காய் - ..............
7. தென்மாகாணம் - ..............
8. காவுயுடைய - ..............


# பாரதிதாசன்

புரட்சிக் கவி பாரதிதாசன் 29.04.1891 இல் புதுவையில் பெரிய வணி கராயிருந்த கனகசபை முதலியாருக்கும் இலக்குமி அம் மாளுக்கும் மகனாகப் பிறந்தார். இவரது இயற்பெயர் கனக சுப் புரத்தினம் .1920இல் பழனி அம்மையார் என்பவரை மணந் தார்.

ஆரம்பத்தில் பிரெஞ்சு மொழிப் பள்ளியில் கற்ற இவர் தனது பதி னாறாம் வயதில் கல்வே கல்லூரியில் தமிழ் புலமைத் தேர்வுக் காகப் புகுந்தார். தமிழ் மொழிப் பற்றுகாரணமாக இவர் தமிழ றிவு நிறைந்தவராக இருந்தமையால் இரண்டாண்டுகளிலேயே கல்லூரியில் முதலாமவராக தேர்வுற்றார். பதினெட்டுவயதி லேயே இவரின் சிறப்பு உணர்ந்த அரசார் அவரை அரசினர் கல்லூரிக்கு தமிழாசிரியர் ஆக்கினர்.

இவர் சிறுவயதிலேயே சிறிய சிறிய பாடல்களை அழகாக சுவை பட எழுதி, தமது தோழர்களுக்குப் பாடிக்காட்டுவார். ஒருநாள் தனது நண்பர் ஒருவரின் திருமண விழாவில் பாரதியாரின் நாட் டுப் பாடலொன்றை அழகாகப் பாடிக்காட்டினார். பாரதியாரும் அந்த விழாவுக்கு வந்திருந்தமை இவருக்குத் தெரியாது. இவர் பாடிய நாட்டுப்பாடலே பாரதியாருக்கு இவரை அறிமுகம் செய்து வைத்தது. "இப்போது என் நண்பர்கள் முன்னால் பாடு" என்று பாரதி கூற "எங்கெங்கு காணினும் சக்தியடா"என்று ஆரம்பித்து இரண்டு பாடல்களைப் பாடினார். இவரது முதற்பாடல் பாரதியா ரால் பாராட்டப்பட்டு சுதேசமித்திரன் இதழில் பிரசுரமானது. இதன் பின்னர் இவர் புதுமையில் வெளியான பல தமிழ் ஏடு களில் கிறுக்கன், கிண்டல் காரன், பாரதிதாசன் என்ற புனைபெயர்களில் பல கவிதைகளை எழுதி வந் தார். இவர் பாரதியார் மீது மிகுந்த பற்றுக் கொண்ட வர். அதனால் பாரதிதாசன் என்ற புனை பெயரி லேயே பல கவிதைகளை எழுதினார். நாளடைவில் சொந்தப் பெயரை விடவும் புனை பெயரான பாரதிதா சன் என்ற பெயரே இவ ருக்கு நிலைத்து விட்டது. இவர் சாதி மறுப்பு, கடவுள் மறுப்பு, மத எதிர்ப்பு போன்றவற்றினைத் தனது பாடல்கள் மூலம் பதவு செய்தார். இவர் நாளடைவில் அரசியலில் புகுந்து புதுச்சேரி சட்ட மன்ற உறுப்பினராக 1954ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்டார். அறிஞர் அண்ணாவால் "புரட்சிக்கவி"என்று பாராட்டப்பட்டு மதிப்புறுத்தப்பட்டார். சிறந்த நகைச்சுவை உணர்வுடைய இவ ரின் "பிசிராந்தையார்' நாடக நூலுக்கு 1969இல் சாகித்திய அக டமி விருதி கிடைத்தது. இவரது கவிதைகள் உட்பட்ட படைப்புகள் அனைத்தும் தமிழ் நாடு அரசினால் 1990ஆம் ஆண்டில் பொது உடமையாக்கப்பட்டன.





இரு படங்களுக்கும் இடையே 5வேறுபாடுகள் உள்ளன; கண்டுபிடியுங்கள்

# ஒற்றுமை அவசியம்

சிங்கம் ஒன்று காட்டில் வாழ்ந்து வந்தது. அது தண்ணீர் அருந்த ஆற்றங்கரைக்குச் சென்றது . அதன் அருகே நான்கு எருதுகள் மேய்ந்துகொண்டிருப்பதைப் பார்த் தது. நான்குமே நன்கு கொழுத்துப் போயிருந்தன. சிங்கத்தின் நாவில் எச்சில் ஊறியது. அதற்கு அந்த எரு துகளை அடித்துத் தின்னும் ஆசை பெருகியது.


அதனால் பெரிதாக கர்ச்சனை செய் தது. ஆனால் அந்த எருதுகளோ பயப்படவில்லை. ஒன்றாகச் சேர்ந்து கொண்டு சிங்கத்தை எதிர்த்தன. அவைகள் ஒற்றுமையோடு எதிர்த் ததால் சிங்கத்தால் சமாளிக்க முடி யவில்லை. அவற்றின் கொம்புகள் சிங்கத்தின் உடலைக் கிழித்தன. சிங்கம் தோற்றுப்போய் ஓடியது. தன் குகையினை வந்ததடைந்தது. ஆனால் அதன் மனமோ சாந்திய டையவில்லை. தன்னைத் துரத்தி யடித்த அந்த எருதுகளைப் பழி வாங்க வேண்டும் என்ற சிந்தனை யிலேயே இருந்தது.

அப்போது நரி ஒன்று அங்கே வந்து "அரசே! ஏன் சோகமாக இருக்கின் றீர்?"என்றுகேட்டது. சிங்கம்நடந்ததை யெல்லாம் கூறியது. நரி சிரித்தது. அதனால் சிங்கம் கோபமானது. "நரியோ! நான் என் வருத்தத்தைச் சொல்கிறேன். நீ கேலியாகச் சிரிக் கிறாயே?" என்றது. "அரசே உங்கள் உடலில் வலிமையுள்ள அளவுக்கு மூளையில் வலிமை இல்லையே"! என்றது நரி. "நரியே நீ அதிகம் பேசு கிறாய்" என்றது சிங்கம்.

"அரசே கோபம் வேண்டாம். நான் சொல்பவற்றைத் தயவு செய்து காது கொடுத்துக் கேளுங்கள்" என்றது நரி. சிங்கம் அமைதியானது. நரி பேசத் தொடங்கியது.

"அரசே! அந்த நான்கு எருதுகளும் ஒற்றுமையாக இருக்கும் வரை யில் உங்களால் அவைகளை எது வும்செய்ய முடியாது" நான்கு எருதுக ளையும் தனித்தனியாகப் பிரித்து விட்டால் நீங்கள் இலகுவாக அவற் றைக் கொன்று தின்ன முடியும்" என்றதுநரி. "எப்படிஅவற்றைப்பிரிக்க முடியும்?" என்று கேட்டது சிங்கம்.

"அரசே அந்த வேலையை நான் கவனித்துக்கொள்கிறேன். ஆனால் தாங்கள் என்னைத் தங்கள் நிரந்தர உதவியாளனாக வைத்துக்கொள்ள வேண்டும்" என்றது நரி.



சிங்கம் அதற்கு ஒப்புக்கொண்ட பின் நரி அங்கிருந்து சென்றது. இப்போது எருதுகளிடம் சென்ற நரி அவற்றுடன் இனிமையாகப் பேசி நட்பைப் பெற்றுக்கொண்டது. அதன் பின்னர் ஒவ்வொரு எருதை யும் தனித்தனியாக சந்தித்துக் குறை கூறி அவற்றிடையே பகையை மூட்டிவிட்டது.

இதனால் எருதுகள் ஒற்றுமை குலைந்தது. தனித்தனியாக பிரிந்து போயின. தினமும் தனித் தனியே வேறிடங்கள் சென்று மேயத் தொடங்கின.

இந்தச் செய்தியை நரி சிங்கத்திடம் சென்று கூறியது. உடனே சிங்கம் ஆற்றங்கரைக்கு வந்தது. எல்லா எருதுகளும் திசைக்கு ஒன்றாய் மேய்ந்து கொண்டிருப்பதைக் கண் டது.

அப்போது ஓர் எருதின் பக்கம் சென்ற சிங்கம் அதன் மீது பாய்ந்தது. இப் போது எருது அலறியது. ஆனால் ஒன்றுக்கொன்று பகையான எருது கள் அந்த எருதிடம் உதவி கொடுக் கச் செல்லவில்லை. பாவம் எருது சிங்கத்துக்கு உணவானது.

இப்படியே தினமும் ஒவ்வொரு எரு தாக அடித்து வீழ்த்திச் சென்றது சிங்கம். ஒற்றுமை குலைந்ததால் நான்கு எருதுகளும் சிங்கத்துக்கு விருந்தாயின.

**ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு. ஒற்றுமை நீங்கில் அனைவருக் கும் கேடு.**



# மனதில் உறுதி வேண்டும்

மனம் என்பது ஒரு நிலைப்பட்டது அல்ல. மனம் மின்சாரம் போல் பாயும் தன்மை வாய்ந்தது. மனம் போன இடமெல்லாம் மனி தன் போகத் தொடங்கினால் அந்த மனிதன் உலகில் தனக்கென ஒரு நிலையினை உண் டாக்கிக் கொள்ள முடியாது. எனவே பெரி யோர் மனதை அடக்கப் பழகிக் கொண்டனர். மற்றவர்களிடம் அன்பு செலுத்த நாம் முயலும் போது முதலில் செய்ய வேண்டியது. மற்றவர் களின் தவறுகளை மன்னிப்பதும் அவர்க ளின் பால் குற்றம் குறை கூறாமலிருப்பதுமே ஆகும். நிறை மனிதன் உலகில் இல்லை. எல்ல மனிதர்களிடமும் ஒவ்வொரு பலவீனம் இருக்கத்தான் செய்கின்றது. அந்தப் பலவீனத்தை நாம் மிகைப்படுத்தாமல் அவரது பலத்தை நாம் போற்றுதல் வேண்டும். மற்றவரை நாம் வசப்படுத்த நம்பால் ஈர்க்க நாம் செய்யக் கூடிய மிக எளிமை யாக கைங்கரியம் அவரது பெருமைகளை யும் அவரது ஆற்றல்களையும் புகழ்வதே. மன உறுதி ஏற்பட்டால் அங்கு தவறுகள் ஏற்பட இயலாது. கொண்ட கொள்கையில் பற்றும் இறுக்கமும் ஏற்படும். இதனாலே தான் ஒரு தனி மனித ஆளுமை ஏற்படுகின் றது. இவர் இப்படிப்பட்டவர் என்றும் இத்த கைய ஆளுமையை உடையவர் என்றும் உலகம் ஒருவரைக் கணிப்பது அவர் தன் மன உறுதி என்னும் அத்திபாரத்தில் எழுப் பிய கட்டடத்திலேதான்.

அத்திபாரம் தளர்வுற்றால் எவ்வாறு கட்டடம் ஆட்டம் காணுமோ அவ்வாறே மன உறுதி யில் ஆட்டம் காணும் மனிதனின் வாழ்க்கை. யும் ஆட்டம் காணத் தொடங்கி விடும். கொண்ட கொள்கையில் தளராத பிடிப்பும் பற்றும் எந்த நிலையிலும் அதில் தளர்ச்சிய டையாத மன உறுதியும் வேண்டும்.

## மக்கள்...

தலைமை அமைச்சர் அவ்வாறு கூறினார். அவர் தெரிவித்ததாவது:

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மக்கள் எமக்குப் பாடம் புகட்டியுள்ளனர். தவறுகளைத் திருத்திக் கொண்டு அரசை முன்னோக்கிக் கொண்டு செல்ல வேண்டும்.

நாங்கள் முன்னெடுத்த அபிவிருத்திகளில் மக்களுக்கு முழுமையான விருப்பம் இல்லை. உள்ளூராட்சித் தேர்தல் முடிவு அதையே பறைசாற்றுகின்றது. இது எமக்குப் பெரிய பின்னடைவாகும். மக்களின் மனநிலையை அறிந்து கொள்வதற்கே எல்லா நாடுகளிலும் தேர்தல் நடத்தப்படுகின்றது. தேர்தல் முடிவுகளின் அடிப்படையில்தான் அரசு கொண்டு செல்லும் வேலைகள் மற்றும் அதன் கொள்கைகளை மக்கள் ஏற்றுக் கொள்கின்றார்களா அல்லது நிராகரிக்கின்றார்களா என்று தெரிந்து கொள்ள முடியும். அரசு என்ற ரீதியில் மக்களின் எதிர்பார்ப்புகளை முழுமையாக பூர்த்திசெய்ய முடியாது போனமையை ஏற்றுக்கொள்கின்றோம். நாங்கள் அபிவிருத்தித் திட்டங்களைச் செய்துள்ளோம். சில அபிவிருத்தித் திட்டங்களின் வேகம் போதாது. சிலவற்றில் திருப்தி யுள்ளது. தேர்தல் பெறுபேறுகளை கவனத்திற் கொண்டு முன்னோக்கிச் செல்லத் தீர்மானித்துள்ளோம்.

ஐக்கிய தேசியக் கட்சியில் புதிய தலைமைத்துவப் பரம்பரை உருவாக்கப்படும். அதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றோம். அமைச்சர்களாக, நாடாளுமன்ற உறுப்பினர்களாக, மாகாண சபை உறுப்பினர்களாக அந்தத் தலைமைத்துவத்துக்கு உரியவர்கள் இருக்கின்றார்கள். செய்யவேண்டிய மறுசீரமைப்புக்களை நாம் விரைவில் செய்வோம் - என்றார்.

அதேவேளை, கூட்டு அரசில் விரிசல் ஏற்பட்டிருந்தபோது, தலைமை அமைச்சர் ரணில் மற்றும் அரச தலைவர் மைத்திரிபால இருவரையும்தனித்தனியேசந்தித்த கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், 2015ஆம் ஆண்டுதேர்தலில் மக்கள் வழங்கிய ஆணையின்படி செயற்பட வேண்டும் என்று வலியுறுத்தியிருந்தார். (ற-5)

## பின்னடைவு...

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கட்சித் தலைவர்கள் கூட்டம் நேற்று இடம்பெற்றது.

உள்ளூராட்சித் தேர்தலில், கடந்த தேர்தல்களுடன் ஒப்பிடும்போது கூட்டமைப்புக்கான ஆதரவு சரிந்துள்ளது. இது தொடர்பிலும் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் நேற்று பேசப்பட்டுள்ளது.

பின்னடைவுக்கான காரணம் என்பதைக் கண்டறிவது என்றும், அதனை எப்படித் திருத்திக் கொள்வது என்றும் ஆராய்வது என நேற்றைய கூட்டத்தில் முடிவெடுக்கப்பட் டுள்ளது. இது தொடர்பில் மேலும் விரிவாக ஆராய்வதற்கும் விரைவில் கட்சித் தலைவர்கள் கூடிப் பேசுவது என்றும் நேற்றைய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ற-5)

## ஆதரவு...

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கட்சித் தலைவர்கள் கூட்டம், கொழும்பில் நேற்று மாலை 5.30 மணி தொடக்கம் 6.30 மணி வரை நடைபெற்றது. கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், கட்சியின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்தி ரன், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை.சோ.சேனாதிராசா, ரெலோ அமைப்பின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், செயலர் ந.சிறிகாந்தா, புளொட் அமைப்பின் தலைவர் த.சித்தார்த்தன், ராகவன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 40 சபைகளில் அதிகூடிய ஆசனங்களைப் பெற்றுக் கொண்ட கட்சியாக உள்ளது. இந்தச் சபைகளில் மக்கள் விரும்பியவாறு ஆட்சி நிர்வாகங்களை எப்படி முன்னெடுத்துச் செல்வது என்பது தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது.

ஏனைய கட்சிகளின் ஒத்துழைப்புடனேயே சபைகளின் நிர்வாகத்தைக் கொண்டு நடத்த முடியும் என்று கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஈ.பி.டி.பி. மற்றும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியுடன் பேச்சு நடத்தக் கூடாது என்று, கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் குறிப்பிட்டுள்ளார்.

ஒவ்வொரு சபைகளிலும் உள்ள நிலமைகளை, ஏனையோர் இரா.சம்பந்தனுக்கு எடுத்துக் கூறியுள்ளனர். இதன் பின்னர், கூட்டமைப்பு ஆட்சி அமைப்பதற்கு ஆதரவு தெரிவிக்கும் கட்சிகளுடன் பேசுவது என்ற முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

**ஆட்சி அமைக்க ஆதரவு கோரி எந்தக் கட்சிகளுடனும் பேசுவதில்லை என்றும், ஆனால் கூட்டமைப்புக்கு ஆதரவு தெரிவிக்கும் தமிழ்க் கட்சிகளுடன் சபைகளில் ஆட்சி அமைப்பதற்கு மாத்திரம் பேச்சு நடத்துவது என்று நேற்றைய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.** (ற-5)

ராசி அதிர்ஷ்டம்
திகதி 23.02.2018 | வெற்றி வாரம் 2254 | வர்ணம் சிவப்பு
துலாம்
வெற்றி இலக்கங்கள் 01 13 20 59
ஞாயிற்றுக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 11, 966, 516/=
2018.02.25ம் திகதி ஞாயிற்றுக் கிழமை ஊதா நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 771
சீட்டிழுப்பு திகதி 2018.02.22 வியாழக்கிழமை
V 51 52 57 68
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 56,118,004/-
தொ.பே: 011 4062002 / 011 4062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்

கோடிபதி சவிதா
சீட்டிழுப்பு வாரம்: 258
வர்ணம்: செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 2018.02.23
ரூ. 85,603,812/-
O 22 45 63 76
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 177
வர்ணம்: செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 2018.02.23
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 52,299,685/-
வெற்றி இலக்கங்கள் 09 18 26 65 I
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

வீடு, காணி விற்பனைக்குண்டு
இல.76, அரியாலை,இலந்தைக் குளம் வீதியில், மாம்பழம் சந்திக்கு அருகில் அமைந்துள்ள வீடும் காணியும் விற்பனைக்கு உண்டு. நிலப்பரப்பு 3. (CS/14184) (11,17)
திருநீலகண்டன் - 076 887 2343

### மரண அறிவித்தல்

## இராமன் சின்னத்தம்பி

*(ஓய்வுபெற்ற ஆசிரியர்)*



சண்டிலிப்பாய் மத்தி, ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்மன் ஆலயத்தின் அருகாமையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராமன் சின்னத்தம்பி (ஓய்வுபெற்ற ஆசிரியர்) நேற்று (23.02.2018) வெள்ளிக் கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்ற இராமன் - குட்டி தம்பதிகளின் அன்பு மகனும் பஞ்சரத்தினத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சின்னத்துரை - வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை, காலஞ்சென்ற பூரணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை, கனகரட்ணம் மற்றும் சந்திரசேனா, இராஜரட்ணம் (இந்தியா), காலஞ்சென்ற பட்டு, செல்வநாயகம் காலஞ்சென்ற சந்திரலேகா, சற்குணவதி, சந்திரகலா ஆகியோரின் மைத்துனரும் ஞானசீலன் (லண்டன்), யோகசீலன் (கட்டடத் திணைக்களம், யாழ்ப்பாணம்), குணசீலன் (தபால் திணைக்களம், யாழ்ப்பாணம்), விஜயராணி (ஆசிரியை - உடுவில் மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் கிருஷ்ணகுமார் (யா/ சாவகச்சேரி இந்துக்கல்லூரி), சந்திரா (லண்டன்), நிறஞ்சனா, சுனித்திரா (ஆசிரியை - புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமனும் சவீதன், கறோலினா, சுலக்ஷனா, பிறின்சிஜா (லண்டன்), சாருஜன், வினோஜா, பாணுஜா, டனோஜிதன், தனுசிகன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.02.2018) ஞாயிற்றுக் கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மாகியப்பிட்டி, கொட்டுப்பனை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சண்டிலிப்பாய் இராஜராஜேஸ்வரி அம்மன் வீதி.**
**"வளர்மதி சண்டிலிப்பாய்" 077 547 7632**
**தகவல்: குடும்பத்தினர்.**

வெள்ளிக்கிழமை நியத ஜய
வெற்றி இலக்கங்கள் 24 18 27 63 R
அடுத்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட் ரூ. 11,605,272/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

## 21 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 24 . 06 . 1942

மறைவு 17 . 03 . 1997

## அமரர் செல்லையா சீவரத்தினம்

திதி - வளர்பிறை நவமி

வானுறையும் தெய்வத்தின் பாதார விந்தங்களில்
சாந்தியுடன் சங்கமித்திருக்கும் எம் அன்புக்குரிய அப்பாவே !
உங்கள் உயரிய வழித்தடத்தில்,
அன்புத் தந்தையாய் அறிவூட்டிய ஆசானாய்
நீங்கள் வாழ்ந்து காட்டி எங்களையும் வாழ வைத்து
நாங்கள் நல்வழியில் வாழ வழிகாட்டிக் கொண்டிருக்கும்
உங்களது அன்புருவம் என்றென்றும்
நிலைத்திருக்கும் எம் மனதில்

**விளாத்தியடி வீதி, உரும்பிராய் வடக்கு.**

**உங்கள் பாதங்களில் பணிந்து பாசமுடன் நினைவு கூரும் குடும்பத்தினர்.**

## 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் மகாலிங்கம் மகேந்திரன்

ஆண்டுகள் பத்து ஓடிப்போனது ஆறாததுயர் மட்டும்
இன்றும் ஓய்ந்ததில்லை மாறாத பந்தமும்
நீங்காத நினைவுகளும் அலைகொண்டு போனாலும்
அப்பா எங்களோடுதான் வாழ்ந்திடுவாய்
வருடங்கள் பலவானாலும்

**சுதுமலைச் சந்தி, மானிப்பாய்.** (cs14071 -13,17)

**என்றும் நினைவுகளுடன் மனைவி, பிள்ளைகள்.**

### மரண அறிவித்தல்

## பாலசிங்கம் டனுசன் (கண்ணன்)



பிறப்பு 09.12.1993 இறப்பு 21.02.2018

இல.40, ஜயனார்புரம், வன்னேரிக்குளத்தைப் பிறப்பிடமாகவும், தற்போது இல.21, உதயநகர் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட பாலசிங்கம் டனுசன் (கண்ணன்) 21.02.2018 புதன் கிழமை காலமானார்.

அன்னார் பாலசிங்கம் - புஸ்பராணி தம்பதிகளின் செல்வப் புதல்வனும், சியாமளா (பிரான்ஸ்), காலஞ்சென்ற முகுந்தன், லக்சி (அக் ஷிகா அழகு கலையகம் - White stone முன்பாக, உதயநகர்), முரளி (பல்கலைக்கழக மாணவன் - 2011), பாஸ்கரன் (பல்கலைக்கழக மாணவன், 2012), யதுசன் ஆகியோரின் அன்பு சகோதரரும், சத்தியரூபனின் (பிரான்ஸ்) மைத்துனரும், அஸ்விகன், அக் ஷிகா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், இராசம்மாவின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.02.2018) ஞாயிற்றுக் கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்துக்காக கிளிநொச்சி, திருநகர் பொதுமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.21, உதயநகர் கிழக்கு, கிளிநொச்சி.** (AKN/383)(11,17)

**தகவல் குடும்பத்தினர்.**

# விற்பனைச் சந்தைகளை நேர்த்தியான முறையில் உருவாக்கும் கலந்துரையாடல் நிகழ்வு

## *'கவாட் பிஸ்னஸ் ஸ்கூல்' மற்றும் அபான்ஸ் பங்குபற்றல்*

"வளர்ச்சியடைந்து வரும் விற்பனைச் சந்தைகளை நேர்த்தியான முறையில் எவ்வாறு உருவாக்குவது" என்ற தலைப்பின் கீழான கலந்துரையாடல் நிகழ்வு உலகளாவிய ரீதியில் புகழ்பெற்ற 'கவாட் பிஸ்னஸ் ஸ்கூல்' (Harvard Business School) இன் வணிக வரலாறு முனைவின் தலைமை அதிகாரி பேராசிரியர் ஜெப்ரி ஜோன்ஸ் மற்றும் அபான்ஸ் குழுமத் தலைவி திருமதி.அபான் பெஸ்டோன்ஜி ஆகியோரிடையே இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடல் நிகழ்வு பல தலைப்புக்களை உள்ளடக்கியிருந்தது. குறிப்பாக வணிகத்துறையில் புதிய அறிமுகங்கள், பன்னாட்டு தொழில்நுட்பங்களை கைப்பற்றுதல், குடும்ப நடவடிக்கைகள், தொழிற்றுறை முகாமைத்துவ நடவடிக்கைகளில் இணைத்துக் கொள்ளுதல், அரசு மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள்.பன்னாட்டு அமைப்புகளுடனான உறவை பேணுதல், இயற்கைச் சூழல்கள் மற்றும் சமூகம் தொடர்பான பொறுப்பு, பூகோளமயமாக்கல் செயல்விளைவில் உள்ள சவால்கள் மற்றும் அதன் மூலம் ஏற்படுத்திக் கொள்ளக் கூடிய வாய்ப்புகள், பன்னாட்டு விற்பனை நாமங்கள் போன்ற தலைப்புக்கள் இடம்பெற்றிருந்தன.

இது குறித்து கருத்துரைத்துள்ள அபான்ஸ் குழுமம்,

"பேராசிரியர் ஜெப்ரி ஜோன்ஸ் மற்றும் திருமதி அப்பான் பெஸ்டோன்ஜி ஆகியோருக்கு இடையிலான இந்த வீடியோ நேர்காணல் கலந்துரையாடல்' நிகழ்வு மும்பையிலுள்ள தாஜ் மஹால் பேலஸ் ஹோட்டலில் 2 மணி நேரங்களுக்கு அதிகமாக இடம்பெற்றது.கலந்துரையாடலின் முழு உரைவடிவத்தை 'கவாட் பிஸ்னஸ் ஸ்கூல்' (Harvard Business School) இல் அமைந்துள்ள பேகர் நூலகத்தில் உள்ள பெறுமதிமிக்க ஏனைய முக்கியமான ஆவணங்களுடன் காணலாம். கல்விச் செயற்பாடுகளில் ஈடுபடும் மாணவர்கள்,ஆராய்ச்சிகள் மற்றும் சட்டக்கல்வியை மேற்கொள்பவர்கள் இதனூடே தேவையான தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.அபான்ஸ் வியாபாரக் குழுமத்தின் வெற்றிப் பயணம் தொடர்பான



கதையாடல்கள் 'கவாட் பிஸ்னஸ் ஸ்கூல்' பாடத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

'கவாட் பிஸ்னஸ் ஸ்கூல்' உலகளாவிய ரீதியில் காணப்படுகின்ற முன்னணி நிறுவனங்களின் தலைவர்கள் தமது பட்டப்பின் கற்கை நெறியை, குறிப்பாக MBA மற்றும் முதுகலை பட்டங்களை பெற்றுக்கொள்ள தெரிவுசெய்கின்ற வணிக கல்லூரியாக திகழ்கிறது.

உபயோகிக்கப்பட்ட வீட்டுப் பாவனை மின் உற்பத்திகளை விற்பனை செய்யும் மிகச் சிறிய விற்பனை நிலையமொன்றின் மூலமே அபான்ஸ் சாம்ராச்சியம் உருவானது. தற்போது அதீத வளர்ச்சி கண்டு வானத்தை முகரும் அளவில் அபிவிருந்தியடைந்துள்ளது. இலங்கையில் இலத்திரனியல் மற்றும் வீட்டுப் பாவனை மின் உபகரண துறையில் முன்னணியாளனாக உள்ளதுடன், அபான்ஸ் நிறுவனம் ஒன்றுடன் ஒன்று மாறுபட்ட துறைகளில் பணியாற்றி 30இற்கும் அதிகமான சுயாதீன நிறுவனங்களை தமது வியாபார குழுமத்தில் கொண்டுள்ளது.

அதேபோன்று நாடு முழுமையுமாக 400 இற்கும் அதிகமான வாடிக்கையாளர் கிளை வலையமைப்புடன் சேவை நிலையங்கள் மற்றும் விற்பனை வலையமைப்பை செயற்படுத்துகின்றது." - என்றுள்ளது.

மேலும், 'கொழும்பு சிற்றி சென்ரர்' (Colombo City Centre ) திட்டம் குறித்து கருத்துரைத்துள்ள அபான்ஸ்,

"அபான்ஸ் நிறுவனத்தின் புதிய திட்டமாக இது விளங்குகிறது. ஐக்கிய அமெரிக்கா, சிங்கப்பூர், டுபாய் உள்ளிட்ட உலகளாவிய முதன்மை நாடுகள் மற்றும் நகரங்களில் உருவாக்கப்பட்டுள்ள நவீன கூட்டுத் திட்டங்களுக்கு இணையான முறையில் இலங்கையில் முதல் முறையாக உருவாகிவரும் திட்டமாக அமைந்துள்ளது. இதில் உருவாகிவரும் கடைத் தொகுதிகள் சுற்றுலா பயணிகளை கவரும் விதமாக அமைந்துள்ளதோடு, உள்நாட்டு மக்களும் அவர்களின் குடும்பத்தோடு வருகை தந்து சுதந்திரமாகவும், நிம்மதியாகவும் பொழுதைக் கழிப்பதற்கு மிகச் சிறந்த இடமாக திகழ்கிறது.

சில்வர்நீடில் ஹொஸ்பிட்டாலிடிஸ் நிறுவனத்துடன் இணைந்தவிதமான இந்த கூட்டுத்திட்டானது உலகின் நவீன வாஸ்த்து சாஸ்த்திர நிர்மாணங்களின் அடிப்படையில் உருவாக்கப்பட்டு வருகிறது. 48 மாடிகளைக் கொண்ட இந்தத் திட்டமானது சகல விதமான பொழுதுபோக்கு அம்சங்களையும் உள்ளடக்கிய கடைத்தொகுதிகள், Next ஹோட்டல், அபார்ட்மென்ட் கம்ப்ளெக்ஸ் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது.

இந்த அதிசொகுசு கடைத்தொகுதிகளில் உலகளாவிய முதல்தர விற்பனை நாமங்கள் பலவற்றைகாணக்கூடியதாக உள்ளதோடு, இலங்கையர்கள் முன்எப்போதும் இல்லாதவகையில் கடைத்தொகுதிகளில் ஷொப்பிங் அனுபவத்தைப் பெற்றுக்கொள்ள முடியும்.நாளாந்தம் திரைப்படங்களைப் பார்த்து இரசிக்கக் கூடிய மிகப் பெரிய 6 திரைகளைக்கொண்ட திரையரங்கு இதில் உருவாகி வருகிறது. உலகின் பல்வேறு நாடுகளிலும் உள்ள பன்முக குடிபானங்கள் மற்றும் உணவுகள் கொண்ட பன்னாட்டு தரத்திலான நவீன உணவகங்கள் இங்கு உருவாக்கப்பட்டு வருகின்றன.இதன் அடிப்படையில் இலங்கை மக்கள் மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் பல்வேறு துறை சார் செயற்பாடுகளை இடையூறுகள் ஏதுமின்றி கையாண்டு மகிழ்வுறும் சந்தர்ப்பம் விரைவில் வழங்கப்படும்." - என்றுள்ளது. (ஓ)

# ஜி.எஸ்.பி வரிச் சலுகையை நீடிக்காதிருக்க நடவடிக்கை

## *அமெரிக்க தூதுவராலயம் அறிக்கை மூலம் சுட்டிக்காட்டு*

இலங்கை உள்ளிட்ட 122 நாடுகளுக்கு வழங்கப்பட்ட ஜி.எஸ்.பி வரிச் சலுகையை நீடிக்காதிருக்க அமெரிக்க அரசு தீர்மானம் மேற்கொண்டுள்ளது. டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் வரிச்சலுகை முடிவுறுத்தப்படுகிறது. இவ்வாண்டுக்கான வரி சலுகையின் மீள் அங்கீகாரத்தை அமெரிக்க காங்கிரஸ் வழங்கவில்லை. இந்தத் தகவல்களை அமெரிக்க தூதுவராலயம் வெளியிட்டுள்ள அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

பொருள்கள் ஏற்றுமதிக்கு, கடந்த ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையிலான வரி விதிப்பனவு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 2016 ஆம் ஆண்டு வர்த்தக வரைபுகளின் அடிப்படையில் நோக்கின், அமெரிக்காவானது 2.8 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான பொருள்களை கொள்வனவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இது குறித்து கருத்துரைத்துள்ள தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் பிரதி அமைச்சர் ஹர்ஷ டி சில்வா,

"2.8 பில்லியன் அமெரிக்க டொலர் ஜி. எஸ்.பி வரிச் சலுகை ஊடாக 173 மில்லியன் அமெரிக்க டொலர் அமெரிக்காவுக்கு வழங்கப்பட்டது.எமது நாட்டில் ஆடை உற்பத்திக்கு ஜி.எஸ்.பி வரிச் சலுகை வழங்கப்படுவதில்லை.173 மில்லியன் என்பது அமெரிக்காவுக்கான ஏற்றுமதியின் 6.2 வீதமாகும்.27 மில்லியன் டொலருக்கு ஆடைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.இது மொத்த பெறுமதியின் ஒரு வீதமாகும்.அவ்வாறெனில் 3 வீத வரி விதிக்கப்ப டும்.இது எவ்வளவு சிறிய பெறுமதி என்பதை எம்மால் புரிந்துகொள்ள முடிகிறது.உலகில் 120 நாடுகளுக்கு இந்த வரிச்சலுகை நீக்கப்படும்.இது இலங்கைக்கு மட்டுமானதல்ல ஏனைய நாடுகளுக்கானதாகவும் காணப்படுகிறது.அரச தலைவர் ட்ரம்ப் ஒரேவிதமாகவே பகிர்ந்தளித்துள்ளார்.இந்த வரிச்சலுகையானது 120 நாடுகளுக்கு வழங்கப்படுகின்ற போதும் ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகை 9 நாடுகளுக்கு மாத்திரமே வழங்கப்படுகிறது. ஜி.எஸ்.பி பிளஸ்




வரிச்சலுகை எமக்கு கிடைத்துள்ளமையால் இந்தச் சலுகையை அதிகரிக்குமாறு ஐரோப்பிய ஒன்றியத்திடம் கோரிக்கைகளை முன்வைக்க முடியும்.இந்தநிலையிலே ஜி. எஸ்.பி பிளஸ் வரிச் சலுகை இல்லாது போயுள்ளதாகவும்,வீழ்ச்சி அடையுமெனவும் சிலர் அரசியல் ரீதியில் தேவையற்ற குழப்பங்களை ஏற்படுத்த முற்படு கின்றனர். அவ்வாறான விடயங்கள் எதுவும் இடம்பெறவில்லை.இது பாரதூரமான விடயமல்ல." - என்றார். (ஓ)

### முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## வாக்களிப்போரை...

வர்கள் தெரிவின் போது இரகசிய வாக்கெடுப்பு நடத்தக் கோருவோம் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அறிவித்திருந்தது. சபைகளில் இரகசிய வாக்கெடுப்புக் கோரப்பட்டால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்க்கும் என்றும், பகிரங்கமாகவே எதுவும் சபைகளில் இடம்பெறவேண்டும் எனவும் அந்தக் கட்சி தெரிவித்திருந்தது. யார் யாரோடு கூட்டுச் சேர்கின்றார்கள் என்பதை மக்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்திருந்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இந்த நிலைப்பாடு தொடர்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அமைப்பாளர் சட்டத்தரணி வி.மணிவண்ணனிடம் கேட்டோம்.

"தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரிய விடயத்துக்கு சில நிபந்தனைகளுடன் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கின்றோம்.

உள்ளூராட்சி சபைகளில் தலைவர்களுக்கான வாக்கெடுப்பு நடக்கும்போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புச் சார்பில் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களை சபையில் சுயாதீனமாகச் செயற்பட அனுமதிக்க வேண்டும்.

அவர்கள் வாக்களித்த பின்னர் அந்த உறுப்பினர்கள் பழிவாங்கப்படக் கூடாது. அவர்கள் எமக்கு ஆதரவு வழங்கினார்கள் அல்லது வேறு கட்சிக்கு ஆதரவு கொடுத்தார்கள் என்று அந்த உறுப்பினர்கள் மீது கூட்டமைப்புத் தலைமைத்துவம் நடவடிக்கை எடுக்காது என்று உறுதிப்பாடுகளை வழங்கினால், நாம் பகிரங்க வாக்கெடுப்புக்குத் தயார்." என்று அவர் கூறினார். (ந-5.8)

## அமைச்சரவையு...

யில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

உள்ளூராட்சித் தேர்தல் முடிவின் பின்னர் கூட்டு அரசில் விரிசல் ஏற்பட்டிருந்தது. தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க வைப் பதவி விலகவேண்டும் என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சி வலியுறுத்தியிருந்தது. அமைச்சரவையை மாற்றியமைத்து, தலைமை அமைச்சர் பதவியில் ரணில் தொடர்வதற்கு பின்னர் இணக்கம் காணப்பட்டிருந்தது. அமைச்சரவை மாற்றம் இன்னமும் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

அலரிமாளிகையில் நேற்றுக் கருத்துத் தெரிவித்த தலைமை அமைச்சர் ரணில், "அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் அமைச்சுப் பதவிகளில் மாற்றம் மேற்கொள்ளப்படவுள்ளது. அரசின் கொள்கைகளிலும் மாற்றங்கள் மேற்கொள்ளப்படும்" என்று கூறியுள்ளார். (ந-5)


COLOMBO STOCK EXCHANGE — CSE

கொழும்பு பங்குப்பரிவர்த்தனை - 147-2/3, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் - 0212221455

23/2/2018 — www.cse.lk

பங்குச்சந்தைத் தகவல்கள்

| சுட்டிகள் | | | இன்று | நேற்று |
|---|---|---|---|---|
| ASPI | ↑ | 3.85 | 6,575.39 | 6,571.54 |
| S&P SL20 | ↑ | 5.76 | 3,728.31 | 3,722.55 |
| வியாபாரப்புரள்வு | | | 813,632,580 | 1,535,237,120.00 |
| உள்நாடு:- கொள்வனவு | | | 485,460,128 | 675,478,910.00 |
| விற்பனை | | | 468,563,264 | 1,336,005,890.00 |
| வெளிநாடு:-கொள்வனவு | | | 328,172,448 | 859,758,210.00 |
| விற்பனை | | | 345,069,312 | 199,231,264.00 |




| கம்பனி-அதிகூடிய பங்குப்பரிமாற்றம் | குறியீடு | இறுதிவிலை | பங்குகள் | புரள்வு (Rs) |
|---|---|---|---|---|
| ஜனசக்தி காப்புறுதி நிறுவனம் | JINS.N | 31.00 | 6,033,826 | 196,532,943 |
| ஹற்றன் நஷனல் வங்கி | HNB.N | 242.00 | 688,048 | 166,500,760 |
| கொமர்சியல் வங்கி | COMB.N | 139.00 | 453,623 | 60,389,167 |
| ஜோன் கீல்ஸ் கோல்டிங்ஸ் | JKH.N | 160.00 | 367,769 | 58,746,209 |
| மெல்ஸ்ரா க்ரோப் | MELS.N | 68.00 | 494,366 | 34,358,711 |
| லயன் பிரெவெரி சிலோன் | LION.N | 552.00 | 61,559 | 33,980,568 |
| சம்பத் வங்கி | SAMP.N | 332.00 | 57,635 | 19,021,268 |
| எயிட்கன் ஸ்பென்ஸ் ஹோல்டிங்ஸ் | AHUN.N | 30.00 | 578,950 | 17,356,507 |
| டயலொக் | DIAL.N | 13.70 | 1,246,295 | 16,992,221 |
| ஓரியன்ட் பைனான்ஸ் | BFN.N | 21.00 | 780,782 | 16,393,471 |

பங்குலாபம் அறிவித்தல்

சிலோன் ஹோல் ஸ்ரோஸ் ரூபா7.00 (இடைக்கால பங்குலாம்)

மேலதிக தகவல்களுக்கு - 0777822014

| சந்தைக் குறிகாட்டிகள். | | |
|---|---|---|
| கம்பனிகள் | ↑ | 299 |
| பரிமாற்றத்தில் | ↑ | 216 |
| விலை உழைப்பு | ↓ | 10.9 |
| புத்தகப்பெறுமதி | ↓ | 1.3 |
| பங்குலாப விளைவு | ↓ | 3 |

## ஐயோ...

சுமார் 550 அப்பாவிப் பொதுமக்கள் உயிரிழந்தனர் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

சிரிய அதிபர் அல் அசாத் பதவியில் இருந்து விலக வேண்டும் என்று வலியுறுத்தி அங்கு ஆயுதக் குழு போராடி வருகிறது. அந்தக் குழுவின் கட்டுப்பாட்டில் உள்ள கவுடா நகரிலேயே இந்தத் தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன. இதுவரை சுமார் 550 பொதுமக்கள் உயிரிழந்துள்ளனர். இவர்களில் சுமார் 300 வரையிலானோர் 10 வயதை எட்டாத சிறுவர்கள்.

ஐக்கிய நாடுகள் சபை, அமெரிக்கா, பிரான்ஸ், சவூதி உள்ளிட்ட தரப்புக்களிடம் இருந்து சிரிய அரசுக்கு கண்டனங்கள் குவிந்துள்ளன. போரை நிறுத்துமாறு ஐ.நா. சபையில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை ரஷ்யா இல்லாமல் செய்துள்ளது.

(தொடர்புடைய செய்திகள் பக்கம் 15)

## அமைச்சரவை மாற்றத்தால்...

கள் அடங்கிய புதிய அமைச்சரவைக்கான இறுதிப் பட்டியலை தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு நேற்றுமுன்தினம் இரவு அனுப்பியிருந்தார். புதிய அமைச்சரவை எப்படி அமையவேண்டும் என்ற தனது யோசனையின் பிரகாரம் இந்தப் பட்டியல் இருக்கவில்லை என்பதால் அதை அரச தலைவர் நிராகரித்தி ருந்தார்.

புதிய பட்டியலைத் தயாரிக்கும் பணியில் ஈடுபட்ட தலைமை அமைச்சர் அது தொடர்பில் தனது கட்சியின் மூத்த உறுப்பினர்களுடன் பேச்சு நடத்தியிருந்தார். அரச தலைவரின் ஆலோசனைப்படி அமைச்சரவை மாற்றம் இடம்பெற வேண்டுமாயின் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் சில விட்டுக் கொடுப்புக்களைச் செய்யவேண்டும் என்று தலைமை அமைச்சர் அப்போது வலியுறுத்தியிருந்தார். பல மூத்த உறுப்பினர்கள் அதற்குச் சம்மதம் தெரிவிக்கவில்லை என்று அறியமுடிகின்றது.

முன்னாள் அமைச்சரும் கட்சியின் மூத்த உறுப்பினருமான ரவி கருணாநாயக்க மற்றும் மாத்தளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் அலுவிஹாரே ஆகியோர் அமைச்சுப் பதவிகள் தங்களுக்கு கிடைக்காத பட்சத்தில் தீர்க்கமான முடிவொன்றை எடுக்கப்போகின்றோம் என்று தலைமை அமைச்சரிடம் தெரிவித்துள்ளனர். அதேபோல் நெடுஞ்சாலைகள் அமைச்சுப் பொறுப்பு தம்மிடமே இருக்க வேண்டும் என்று அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்லவும் விடாப்பிடியாக நிற்கின்றார் என்று அறிய முடிகின்றது.

இப்போதுள்ள அமைச்சுப் பொறுப்புக்களை ஏதோவொரு காரணத்துக்கு விட்டுக் கொடுத்தால் அல்லது அமைச்சுப் பதவிகளை வேறு ஒருவருக்கு வழங்க இடமளித்துவிட்டு விலகினால் மக்கள் மத்தியில் தவறான அபிப்பிராயமொன்று ஏற்பட்டு அது தங்களது அரசியலிலும் தாக்கத்தை ஏற்படுத்திவிடும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் மூத்த அமைச்சர்கள் பலர் ரணிலிடம் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இப்போதுள்ள அரசியல் சூழ்நிலையில் அரச தலைவருடன் பகைமை ஏற்பட்டுவிடக்கூடாது எனக் கருதும் சில அமைச்சர்கள் தமது அமைச்சுப் பொறுப்புக்களை விட்டுக் கொடுக்கத் தீர்மானித்துள்ளனர்.

புதிய முகங்களாக இருக்கும் பின்வரிசை உறுப்பினர்களை அமைச்சர்களாக்க தலைமை அமைச்சர் ரணில் உத்தேசித்துள்ள அதேசமயம் சுமார் 45 பேர் வரை பிரதி அமைச்சர்களாக நியமிக்கத் தீர்மானித்துள்ளார். இந்த அமைச்சரவை மாற்றத்தில் கட்சிகளின் தலைவர்களுக்கு முக்கிய அமைச்சுப் பொறுப்புக்கள் வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ந-5)

## சமாதானத்துக்கான...

72 நாடுகளில் 123 நாள்களில் சுமார் 4 ஆயிரம் கிலோ மீற்றர் இவர் மரதன் ஓடவுள்ளார். நேற்று வவுனியாவில் இருந்து கிளிநொச்சி நோக்கி மரதன் ஓட்டத்தை ஆரம்பித்தார்.

"பண்டாரவன்னியன் பிறந்த இடமான வவுனியா மண்ணில் இதை ஆரம்பிப்பதால் மகிழ்ச்சியடைகின்றேன். இவ்வாறு நான் உலகுக்கு சொல்லிக்கொள்வதில் பெருமையடைகின்றேன். பலஸ்தீனத்தில் இருந்து இந்த மரதன் ஓட்டம் ஆரம்பமானது. கிளிநொச்சியை அடைந்தவுடன், இந்தியாவின் சென்னை சென்று அங்கு தொடரும். இதுவரை 69 உலக சாதனைகளைச்செய்துள்ளேன்."என்று ஜோஷிம் தெரிவித்தார். (ந)

## உருளைக்...

விடுத்திருந்த நிலையில் வரி அதிகரிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மற்றும் நுவரெலியா மாவட்டங்களில் உருளைக் கிழங்கு உற்பத்தி இந்த முறை அதிகரித்துள்ளது. ஆனால் சந்தையில் உருளைக் கிழங்கின் பெறுமதி குறைந்துள்ளது. இறக்குமதி செய்யப்படும் உருளைக் கிழங்கும் சந்தையில் தாராளமாகக் கிடைப்பதால், உள்ளூர் கிழங்கின் விலை சரிவடைந்திருந்தது.

இறக்குமதி செய்யப்படும் உருளைக் கிழங்கு மீதான வரியை அதிகரிக்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதுவரை காலமும் உருளைக் கிழங்கு இறக்குமதி செய்யப்படும்போது விதிக்கப்பட்ட ஒரு ரூபா வரி, 29 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு 30 ரூபாவாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. எதிர்வரும் மார்ச் மாதம் 31 ஆம் திகதி வரை இந்த நடைமுறை இருக்கும் என்றும் நிதி அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (ந-5)

## அமைச்சரவை...

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுடன் நேற்று நீண்ட நேரம் பேச்சு நடத்தினார் எனவும், அதில் சில உடன்பாடுகள் எட்டப்பட்டன எனவும் அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

அரச தலைவர் விடுத்த பணிப்புரைக்கமைய ஐக்கிய தேசியக் கட்சியின் தூண்களாகக் கருதப்படும் தலைமை அமைச்சர் ரணிலுக்கு நெருக்கமானவர்களாகச் செயற்பட்ட முக்கிய அமைச்சர்கள் சிலர் இந்தப் புதிய அமைச்சரவையில் ஓரங்கட்டப்பட்டுள்ளனர் என்று அறியமுடிந்தது.

கட்சித் தலைவர்களான மனோ கணேசன், பழனி திகாம்பரம், ரிசாத் பதியுதீன் ஆகியோருக்கு முக்கிய அமைச்சுப் பொறுப்புக்கள் வழங்கப்படவுள்ளன. அமைச்சர் சம்பிக்கவின் அமைச்சுப் பொறுப்புக்களில் மாற்றங்கள் செய்யப்படமாட்டாது எனத் தெரிகின்றது. (ந-5)


## 8 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
29.10.1942

உதிர்வு
31.01.2010

அமரர்
**கமலாச்சி இராசதுரை**

திதி - நவமி

பாசம் வைத்து எங்களைப் பண்புடனே வாழ வைத்து பாவி அவன் காலனின்
அழைப்பை ஏற்று பாதியில் எம்மை தவிக்கவிட்டு பிரிந்தது ஏனோ அம்மா!
நீங்கள் வாழ்ந்திட்ட காலங்களை அல்லும் பகலும் விழித்திருந்து எமை
வளர்த்த நேரங்களை எல்லாம் எண்ணி எம் கண்கள் பனிக்கின்றன
ஓராண்டு கழிந்தாலும் அம்மா தங்களின் பாச நினைவுகள்
காலத்தால் அழியாது கனவிலும் உம் நினைவே - நீங்கள்
விண்ணுலகு சென்றாலும் விலகாது உம் நினைவு எம் மனதை விட்டு

ஒஸ்கா லேன்,
உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய்.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் : குடும்பத்தினர்.



## மரண அறிவித்தல்

## இராமலிங்கம் வைத்திலிங்கம்



பிறப்பு 14.07.1926 இறப்பு 22.02.2018

சாவகச்சேரி வடக்கைப் பிறப்பிடமாகவும் குஞ்சுப்பரந்தன், பரந்தனைவதிவிடமாகவும் சங்கத்தானை, சாவகச்சேரி வடக்கை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட இராமலிங்கம் வைத்திலிங்கம் கடந்த (22.02.2018) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராமலிங்கம் தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற செல்லத்துரை செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் பராசக்தியின் அன்புக் கணவரும் பரமேஸ்வரன் (டென்மார்க்), கலைச்செல்வி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜெயந்தி (லண்டன்), நடராசா (கிளி - பிரான்ஸ்), ஆகியோரின் அன்பு மாமனும் பரமேஸ்வரி, காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் (ஆமி), கிருஸ்ணபிள்ளை (கோமாளி) மற்றும்சரஸ்வதி ஆகியோரின் அன்பு அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற சுவாமிநாதன் (இ.க.வ. கூட்டுத்தாபனம்), நாகேஸ்வரி (ஆசிரியர்), காலஞ்சென்ற துரைராஜன் (இ.மி. சபை), சுந்தரம்பிள்ளை, துரைராசா (காந்தி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் பிரசன்னா (பிரான்ஸ்), பிரசாந் (பிரான்ஸ்), ஜெனாந்தன் (லண்டன்), கிருஜன் (லண்டன்), நிருஜன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.02.2018) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி, கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

33136/15/17

**சங்கத்தானை.**
**சாவகச்சேரி வடக்கு.**

**தகவல்: குடும்பத்தினர்.**



## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்



கடந்த 26.01.2018 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவி

அமரர் திருமதி **பராசக்தி துரைராஜா**

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை (25.02.2018) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11.30 மணியளவில் தியாகி அறக்கொடை நிலைய (T.C.T) சொர்ணாம்பிகை மண்டபத்தில் இல.527 நாவலர் வீதி யாழ்ப்பாணம் நடைபெறவுள்ளது. இத்தருணம் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

இல. 70, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

**குடும்பத்தினர்.**

## இறுதியாட்டத்துக்கு அனுமதி மறுத்த விவகாரம்

# பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை நிர்வாகத்தால் வீராங்கனைகளின் பெற்றோருக்கு பதில் வழங்கப்படவில்லை

### திங்கட்கிழமை மீண்டும் சந்திக்கத் திட்டம்

யாழ்ப்பாணம், பெப். 24

பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை பெண்கள் அணியை வடமாகாண ரீதியிலான கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் களமிறங்காமை தொடர்பாக நேற்றைய தினத்துக்குள் பதில் வழங்க வேண்டும் என்று வீராங்கனைகளின் பெற்றோர் அறிவுறுத்தியிருந்த நிலையில், எந்தப் பதிலும் நேற்று மாலை வரை அவர்களுக்கு வழங்கப்படவில்லை. இதையடுத்து நாளைமறுதினம் பாடசாலை நிர்வாகத்தை மீண்டும் சந்திக்கத் திட்டமிட்டுள்ளதாக வீராங்கனைகளின் பெற்றோர் உதயனுக்குத் தெரிவித்தனர்.

யாழ்ப்பாண மாவட்ட பாடசாலைகள் கால்பந்தாட்டச் சங்கம் நடத்திய மாகாண மட்ட கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை அணியை எதிர்த்து தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி அணி கடந்த சில தினங்களுக்கு முன்னர் மோதவிருந்தது. ஆனால் இறுதியாட்டத்தில் பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலையின் அணி பங்கு பற்றுவதற்கு பாடசாலை நிர்வாகம் தடை விதித்தது. இது தொடர்பில் பாடசாலை நிர்வாகத்திடம் பெற்றோர் கேள்வி எழுப்பிய போது தடை விதிக்கப்பட்டமைக்கான காரணம் எதுவும் அறிவிக்கப்படாமல் வெள்ளிக்கிழமை (நேற்று) தங்களுக்கான சாதகமான முடிவு அறிவிக்கப்படும் எனவும் தெரிவித்ததாக பெற்றோர் உதயனுக்குத் தெரிவித்திருந்தனர்.

ஆனால் நேற்று வரைக்கும் எந்த முடிவும் பெற்றோருக்கு வழங்கப்படவில்லை. இதையடுத்து நிர்வாகத்திடம் திங்கட்கிழமை விளக்கம் கோரவுள்ளதாக பெற்றோர் உதயனுக்குத் தெரிவித்தனர். தமக்கு திங்கட்கிழமை சாதகமான பதில் தராதவிடுத்து வடமாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சர் க.சர்வேஸ்வரனிடம் முறையிடவுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர். இந்த விவகாரத்தில் விரைவில் விசாரணை நடத்தப்படும் என்று அமைச்சர் சர்வேஸ்வரன் உதயனுக்குத் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (ம-422)

## நியூட்டன் இறுதியில்

யாழ்ப்பாணம், பெப். 24

கரவெட்டி பிரதேச செயலக பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான கால்பந்தாட்டத் தொடரில் சமரபாகு நியூட்டன் அணி-இறுதிக்குத் தகுதி பெற்றது.

அல்வாய் மனோகரா விளையாட்டு கழக மைதானத்தில் நேற்று நடைபெற்ற அரையிறுதியாட்டத்தில் அல்வாய் மனோகரா அணியை எதிர்த்து சமரபாகு நியூட்டன் அணி மோதியது.

கோல்கள் இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாவது பாதியாட்டத்திலும் இரு அணிகளும் சம பலத்துடன் மோதினர்.

ஆட்டத்தின் இறுதிப் பகுதியில் இரண்டு அணிகளும் தலா ஓர் கோலைப் பெற்றிருந்தன. இதனால் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 3:0 என்ற கோல் கணக்கில் நியூட்டன் அணி வெற்றி பெற்றது. (ம-422)

# இந்தியா - தென்னாபிரிக்கா இறுதி ரி-20 ஆட்டம் இன்று




இந்தியா - தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட ரி-20 தொடரின் மூன்றாவதும் இறுதியானதுமான ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது.

இந்திய அணி தென்னாபிரிக்காவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. இரண்டு அணிகளுக்கும் இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரை 2:1 என்ற அடிப்படையில் தென்னாபிரிக்கா கைப்பற்றியது. தொடர்ந்து நடைபெற்ற ஆறு ஆட்டங்ளைக் கொண்ட ஒரு நாள் தொடரை 5:1 என்ற அடிப்படையில் இந்திய அணி கைப்பற்றியது. இரண்டு அணிகளும் தலா ஒவ்வொரு தொடரைக் கைப்பற்றியுள்ளதால் ரி-20 தொடரில் எந்த அணி கிண்ணம் வெல்லும் என்ற எதிர்பார்ப்பு பெரியளவில் நிலவியது. முடிவடைந்த இரண்டு ஆட்டங்களில் இரு அணிகளும் தலா ஒரு வெற்றியைப் பெற்றுள்ளன. மூன்றாவது ஆட்டம் இன்று நடைபெறுகிறது. இன்றைய ஆட்டத்தில் வெற்றிபெறும் அணியே சம்பியனாகும். இலங்கை நேரப்படி இரவு 9.30 மணிக்கு ஆட்டம் நடைபெறவுள்ளது. (ம)

## கபில்தேவுடன் பாண்டியாவை ஒப்பிடக்கூடாது

*ரோயர் பின்னி கருத்து*

இந்திய அணியின் முன்னாள் சகலதுறை வீரர் கபில்தேவுடன் தற்போதைய சகல்துறை வீரர் பாண்டியாவை ஒப்பிடக் கூடாது என்று தெரிவித்தார் இந்திய அணியின் முன்னாள் வீரர் ரோயர் பின்னி.

கபில்தேவ் வேகப்பந்து வீச்சு மேற்கொள்ளக்கூடிய ஒரு சகலதுறை வீரர். பாண்டியாவும் அப்படிப் பட்டவர். பாண்டியா சில ஆட்டங்களில் அபாரமாகச்செயற்பட்டுள்ளார். இதையடுத்து அவர் கபில்தேவ் போன்று வருவார் என்று பலரும் கருத்துத் தெரதிவித்திருந்தனர். இந்தப் பின்னணியில் இந்த ஒப்பீடைத் தவறு என்று தெரிவித்தார் ரோயர் பின்னி.

"நிலைத்துநின்று விளையாடும் ஒரு வீரராக பாண்டியா இல்லை. அவரது ஆட்டம் சிறப்பாக இல்லை. பந்துவீச்சில் ஓரளவு சிறப்பாகச் செயற்படுகிறார். பாண்டியா ஒரு சகலதுறை வீரர் என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால் கபில்தேவுடன் அவரை ஒப்பிடுதல் தவறு. அதற்காக பாண்டியா இன்னும் அதிகம் உழைக்க வேண்டும்" என்று பின்னி மேலும் தெரிவித்தார். (ம)

## கழகங்களின் சொந்த மைதானத்தில் அவற்றின் ஆட்டங்கள் வேண்டாம்

*ஆர்வலர்கள் வேண்டுகோள்*

யாழ்ப்பாணம், பெப். 24

கால்பந்தாட்டங்களில் கலந்து கொள்ளும் கழகங்களின் சொந்த மைதானத்தில் அவற்றின் ஆட்டங்களை நடத்த வேண்டாமென வடமராட்சி விளையாட்டு ஆர்வலர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கரவெட்டி பிரதேச செயலக பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இமையாணன் மத்திய விளையாட்டு கழக மைதானத்தில் நடைபெற்ற அரை யிறுதியாட்டத்தில் இமையாணன் மத்திய அணியை எதிர்த்து டயமன்ஸ் அணி மோதியது. இதில் பார்வையாளர்களின் குழப்பத்தால் ஆட்டத்தை தொடர முடியாமல் டயமன்ஸ் அணி வெளி யேறியது.

இதேபோல் நேற்று நடைபெற்ற இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் அல்வாய் மனோகரா மைதானத்தில் மனோகரா அணியை எதிர்த்து சமரபாகு நியூட்டன் அணி மோதியது. ஆட்டம் நிறைவடைந்ததும் முறுகல் நிலை ஏற்பட்டது. இதையடுத்தே களமிறங்கும் கழகங்களின் சொந்த மைதானங்களில் அவற்றின் ஆட்டங்களை நடத்த வேண்டாம் அல்லது உரிய பாதுகாப்புடன் நடத்துமாறு ஆர்வலர்கள் கோரிக்கை வைத்துள்ளனர். (ம-422)




ஸ்பானியக் கழகங்களுக்கு இடையிலான லா லிகா தொடரில் இன்று இடம்பெறவுள்ள ஆட்டத்தில் பார்சிலோனா, ஜிரோனா அணிகள் மோதவுள்ள நிலையில் இந்த ஆட்டத்துக்காக நேற்றுக் கடும் பயிற்சியில் ஈடுபட்டது பார்சிலோனா அணி. (ம)

## இன்றைய மோதல்கள்

**இலங்கை கிரிக்கெட் சபையின் பெண்களுக்கான ஆட்டங்கள்**

இலங்கை கிரிக்கெட் சபை நடத்தும் 23 வயதுப்பிரிவு பெண்களுக்கான யாழ்ப்பாண மாவட்ட ரீதியிலான டெஸ்ட் ஆட்டமொன்று வவுனியா சிதம்பராக் கல்லூரி மைதானத்தில் இன்று இடம்பெறவுள்ளது.
ஆட்டத்தில் மன்னார் - வவு னியா அணியை எதிர்த்து இணைந்த, கிளிநொச்சி - முல்லைத்தீவு மாவட்ட இணைந்த அணி மோதவுள்ளது.

**கலைமதியின் கால்பந்தாட்டம்**

நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின் றன. இந்தத் தொடரில் இன்று சனிக்கி ழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மனோகரா விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக்
கழக அணியை எதிர்த்து நியூட்டன் விளையாட்டுக் கழக அணி மோதவுள் ளது.


(ம-23)

## வவுனியா பி.செயலக கபடித் தொடர் இன்று

வவுனியா பிரதேச செயலக கிராம சேவ கர் பிரிவுகளுக்கு உட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான இருபாலா ருக்குமான கபடித் தொடர் வவுனியா சிறு வர் பூங்கா மைதானத்தில் இன்று இடம் பெறவுள்ளது. (ம-23)

## வளர்மதி சம்பியன்

தென்மராட்சி பிரதேச அணிகளுக்கு இடையிலான துடுப்பாட்டத் தொடரில் மட் டுவில் வளர்மதி விளையாட்டுக் கழக அணி சம்பியனானது.
மட்டுவில் வளர்மதி மைதானத்தில் நேற்று முன்தினம் இந்த இறுதியாட்டம் நடைபெற் றது. மட்டுவில் வளர்மதி வி.கழக அணி யும் சாவகச்சேரி சீ.ஆர்.சீ. அணியும் கள மிறங்கின.
நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சாவ கச்சேரி சீ.ஆர்.சீ. அணியினர் முதலில் துடுப்பாட்டத்தை தேர்ந்தெடுத்து நிர்ண யிக்கப்பட்ட 8 பந்துப் பரிமாற்றங்களில் 52 ஓட்டங்களைப் பெற்றனர். 53 ஓட்டங் கள் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய மட்டுவில் வளர்மதி அணி எட்டாவது பந்துப் பரிமாற்றத்தின் இறுதிப் பந்தில் வெற்றி இலக்கையடைந்து பிரதேச சம்பிய னாகியது. (ம-9)




ஸ்கந்தா - மகாஜனா வீரர்களின் போர்

# முதலாம் நாள் முடிவின்போது இரண்டு அணிகளும் சமபலம்

யாழ்ப்பாணம், பெப். 24

வீரர்களின் போர் என்று வர்ணிக்கப்படும் சுன்னாகம் ஸ்கந் தவரோதயக் கல்லூரிக்கும் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிக்கும் இடையிலான இரண்டு நாள்களைக் கொண்ட டெஸ்ட் ஆட்டத்தில் நேற்றைய முதல்நாள் நிலவரத்தின்படி இரண்டு அணிகளும் சமமான பலத்துடன் உள்ளன.
தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் தொடரின் ஆட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மகாஜனக் கல்லூரி அணி முதலில் களத்தடுப் பைத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி 69.1 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 233 ஓட்டங்களைக் குவித்தது. அதிகபட்சமாக அஜிந்தன் 55 ஓட்டங்களையும், பிரசன்னா 31 ஓட்டங்களையும், கலிஸ்ரன் 20 ஓட்டங்களை யும் பெற்றனர்.
பந்துவீச்சில் மகாஜனக் கல்லூரி அணியின் சார்பில் தயுஸ்ரன் 7 இலக்குகளையும், சதுர்சன் 2 இலக்குகளையும், பகீதரன் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.
பதிலுக்குத் தனது முதலாவது இன்னிங்ஸை ஆரம்பித்த மகா ஜனக் கல்லூரி அணி, நாள் முடிவில் 2 இலக்குகளை இழந்து 93 ஓட்டங்களைப் பெற்றது. கிருசான் 46 ஓட்டங்களுடனும், தனிஸ்ரன் 2 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். ஜனுசன் ஆட்டமிழக்காமல் 33 ஓட்டங்களுடனும், பகீரதன் ஆட்டமி ழக்காமல் 4 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். பந்துவீச் சில் டான்சன், டிலக்சன் இருவரும் தலா ஓர் இலக்கைக் கைப் பற்றியுள்ளனர்.
வீரர்களின்போர் கடந்த 2001ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இதுவரை 17 ஆட்டங்கள் நடைபெற்றுள்ளன. 18ஆவது ஆட் டம் தற்போது நடைபெற்று வருகிறது. முடிவடைந்த 17 ஆட்டங் களில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணி 4 ஆட்டங்க ளிலும், சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி 3 ஆட்டங்க ளிலும் வெற்றிபெற்றுள்ளன. 10 ஆட்டங்கள் சமநிலையில் முடிவடைந்தன.
நடப்பு வருடத்துக்கான ஆட்டத்தில் பதிலடி கொடுத்து 4:4 என்ற சமப்படுத்த ஸ்கந்தவரோதயக் கல்லூரி முனைப்புக் காட்டும்.





ஆனால் தனது சொந்த மைதானத்தில் ஸ்கந்தாவின் ஆதிக்கத்தை மகாஜனா அனுமதிக்காது. இந்தப் பின்னணியில் இந்த ஆட்டத்தின் மீது பெரியளவில் எதிர்பார்ப்புக்கள் உள்ளன. (ம-23)



## மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை சம்பியன்

யாழ்ப்பாணம், பெப். 24
வடமராட்சி கல்வி வலய பாடசாலைகளுக்கு இடையிலான 16 வயதுக்கு உட்பட்ட பெண்களுக்கான வலைப்பந்தாட்டத்தில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துள்ளது.
கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி மைதா னத்தில் நேற்று முன்தினம் இந்த இறுதியாட்டம் நடைபெற்றது.
இதில் மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணியை எதிர்த்து வட இந்து மகளிர் கல்லூரி அணி மோதியது.
ஆரம்பம் முதல் இரண்டு அணிகளும் விடாப் போராட்டத்தை வெளிப்படுத்தின.
மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை அணி 15:14 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று கிண்ணம் வென்றது.
மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில் வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து கம்பர்மலை மகா வித்தியாலய அணி மோதியது. இதில் வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி அணி 15:9 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது.
(ம-422)

## ENGLISH / SINHALA (BASIC to ADVANCED) PERSONAL CLASSES & TRANSLATION (PVT)

யாழ். மாணவர்களுக்கு ஏற்றவாறு, கிராமமான முறையில் தயாரிக்கப் பட்ட பாடங்கள் - பயிற்சிகள்/ மொழி பெயர்ப்புப் பயிற்சிகள் மூலம் **அடிப் படையிலிருந்து** கற்பிக்கப்படும். **6 ஆம் தரத்துக்கு மேற்பட்ட மாண-வர்கள், பாடசாலை விலகியவர்கள் மற்றும் அரச, தனியார்துறை ஊழி யர்** உட்பட எவ் வயதினரும் இணைந்துகொள்ளலாம். அடிப்படையிலிருந்து சிறப்பான ஆங்கில/ சிங்கள இலக்கண அறிவோடு க.பொ.த.சாதாரண தரம் வரை கற்பிக்கப்படும். ஒவ்வொருவருக்கும் தனிக் கவனம் செலுத்தப்படும். பாஸ் போட், விசா உட்பட எத்தகைய படிவங்களும் நிரப்பித் தரப் படும் நூல்கள், இணையத்தள மற்றும் ஆய்வுக்கட்டுரைகள் கடிதங்கள் உட் பட பிரத்தியேக மொழிபெயர்ப்பு வேலைகள் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் செய்துதரப்படும் விவரங்களுக்கு:

T.SAGATHEVAN (B.A.London) (cs.14130)
T.P.No.021 222 3520 / 077 821 0178 (13.17)

## WIN REPAIRS

சகல விதமான குளிர்சாதன பெட்டிகளும் A/C களும் உங்கள் வீடுகளுக்கு வந்து திருத்திகொடுக்கப்படும்.

**தொடர்பு - 077 9648 942**

## சிக்கன் பிரியாணி

அறிமுகம் - Rs 250/=

ப்றைட் சிக்கன் - றைஸ் & பைட்ஸ்
**Fried Chicken - Rice & Bites**

யாழ் பாடியில் 49-51, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
**021 222 6868, 077 736 0353, 075 987 5800** (C/59237) (13.17)

## கார் விற்பனைக்கு

Suzuki K10, Eingne 1000 C.C, Auto, Alarm, Reverse Camara, CALxxxx, 26000km, Burgendy Red, 23km/ Li. Petrol For sale.

**077 630 6733, 077 842 2969**


# காணவில்லை



## அப்புத்துரை பத்மநாதன்

(வயது - 80)

என்பவரை கடந்த தை மாதம் 17 ஆம் திகதிதொடக்கம் காண வில்லை எங்கு கண்டாலும்

**077 453 3490**

எனும் இலக்கத்துக்கு தயவு செய்து தெரியப்படுத்தவும்.

**தகவல்: மனைவி** (cs/14172) (13.17)


## வீடு விற்பனைக்கு

வடமராட்சி, மந்திகை, குரும்பகட்டி வைரவர் கோயிலுக்கு அண்மையில் 5 அறைகள் கொண்ட 3 1/2 பரப்புக் காணியிலமைந்த வீடு விற்பனைக்கு உண்டு. **தொடர்பு - 077 843 5453**

## முதலாம் தவணைக்கான மாதிரி வினாத்தாள் - 2018

(நாவலர் வெளியீடு)

**தரம் 1 முதல் O/L வரை**

சகல பாடங்களுடன் வெளிவரவுள்ளது. தேவைப்படும் கல்விநிறுவனங்கள், பிரத்தியேக வகுப்புக்கள், குழு வகுப்புக்கள், பெற்றோர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு:
**புதிய நாவலர் கல்வி நிலையம்**
ஆனைப்பந்தி சந்தி, யாழ்ப்பாணம்.
**077 459 8440**

## போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்

சகல போட்டிப் பரீட்சைகளுக் குமான வகுப்புக்களும் வெவ்வேறு நேரங்களில் நடைபெறுகின்றன.

தொடர்புகளுக்கு
**076 688 3394**


# செல்சி - பார்சா ஆட்டம் சமநிலை





ஐரோப்பியக் கழகங்களுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரில், நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பார்சிலோனா - செல்சி அணி களுக்கு இடையிலான ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. ஆட்டத்தின் முதல் பாதியில் இரண்டு சிறப்பான வாய்ப்புக்கள் செல்சிக்குக் கிடைத்தது. எனினும் அவை கோலாக்கப்பட வில்லை. கோல்கள் இல்லாத நிலையில் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாவது பாதியின் 62ஆவது நிமிடத்தில் வில்லியன், செல்சியின் முதல் கோலைப் பதிவுசெய்தார். பார்சிலோனா மீது அழுத்தம் அதிகரித்தன. 75ஆவது நிமிடத்தில் மெஸ்ஸி கோலொன்றைப் பதிவுசெய்து கோல் கணக்கை 1:1 என்றாக்கினார். மாற்றங்கள் ஏற்படவில்லை. ஆட்டம் சமநி லையானது. (ம)


# தென்னிந்திய யாத்திரை

**தமிழ்நாடு, ஆந்திரா, கேரளா, கர்நாடகா, பாண்டிச்சேரியூடான யாத்திரை**

**ஆரம்பம் : 10.04.2018 | யாத்திரீகர் : 10 | நாள்கள் : 16**

**தரிசிக்கும் இடங்கள் :-** மலைக்கோட்டை விநாயகர், திருப்பதி, ஸ்ரீரெங்கம், சமயபுரம், பிரம்மாகோயில், இராமேஸ்வரம், பழனி, திருத்தணி, திருப்பரம்குன்றம், திருச்செந்தூர், சிதம்பரம், ஏகாம்பரேஸ்வரர், காள கஸ்திரி, திருவெண்ணாமலை, சுவாமிமலை, பழமுதிர்ச்சோலை, திருவானைக்காவல், மேல்மருவத்தூர், தஞ்சாவூர், நவபாஷானம், சூரியன், சந்திரன், சுக்கிரன், புதன், வியாழ பகவான், செவ்வாய், ராகு, கேது, சனி பகவான், திருநள்ளாறு, நளன்குளத்தில் நீராடல், தோணியப்பர், குருவாயூர், கோடி, லிங் கேஸ்வரர், மைசூர் சாமூண்டீஸ்வரி, நந்-திகோவில், கன்னியாக்குமரி, சுசீந்திரம், மனக்குழவிநாயகர், திருக்கடையூர் பஞ்சவடி பிள்ளையார், பட்டி விநாயகர், வடபழனி முருகன் உட்பட 60 இற்கும் குறையாத ஆலயங்களைத் தரிசிப்பதுடன் மெரீனாபீச், பாண்டிச்சேரி பீச், MGR: ஜெயலலிதா, அண்ணா சமாதி களையும் மைசூர் பாலஸ், பிருந்தாவனம் காடின், அப்துல் கலாமின் மணிமண்டபமும் பார்க்கலாம்.

**தங்களிடம் பெற்றுக் கொள்ளும் ரூபாவுக்கு எமது சேவை :-** இருவழி விமான ரிக்கட், மூன்றுவேளை சுத்தமான சைவ உணவு, குடிநீர், 2 பேருக்கு கட்டில் மெத்தை, குளியலறை இணைந்த அறைகள், AC வாகன வசதி, கொழும்பில் இருந்து ஏயர்போட் போகவும் வரவும் வாகன வசதி. இவை அனைத்தும் எமது சேவை.

மேலும் விவரங்களைக் கேட்டு அறிந்து பதிவு செய்யவும். சகல ஆலயங்களும் பூசை நேரத்தில் தரிசிக் கலாம். **(இத்துடன் யாழ். - கொழும்பு, யாழ் போக வர வாகன வசதி செய்து தரப்படும்)**

**கலாநிதி. T.ஸ்ரீரெங்கநாதன் மகன் - ராஜன்**
**59, 3/6 செட்டியார் தெரு, கொழும்பு - 11**
**077 768 0102/ 077 736 2154** (m5856) (13.17)


# மரண அறிவித்தல்

## திருமதி கமலாதேவி குமாரசாமி

(தேவி அக்கா)



கொக்குவில் கிழக்கு, சம்பியன் ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கு, ஆடியபாதம் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலாதேவி குமாரசாமி கடந்த (22.02.2018) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.


அன்னார் காலஞ்சென்ற கந்தையா - இராஜேஸ்வரி தம்பதி களின் அன்பு மகளும் காலஞ்சென்ற அப்புத்துரை - செல்லம் தம்பதிகளின் மருமகளும் காலஞ்சென்ற குமார சாமியின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான தையல்நாயகி, சிவசுப்பிரமணியம் (பிரான்ஸ்) மற்றும் செல்வராணி, சூரியகலா (பிரான்ஸ்), தட்சணாமூர்த்தி, ரூபகலா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத்தாயாரும் காலஞ்சென்ற சிவயோகநாதன் மற்றும் இந்திராணி, சிவஸ்கந்தகுமார் கணேஸ்கந்தன் (பிரான்ஸ்), ஆகியோரின் அன்பு மாமியும் தம்பாபிள்ளை - தங்கரட்ணம் தம்பதிகளின் மருமகளும் நாகம்மா, செல்லத்தம்பி ஆகியோரின் பெறாமகளும் கோமதி, வளர்மதி, றஞ்சன், ஸ்ரீறி, காந்தன் ஆகியோரின் உடன்பிறவா சகோதரியும் காலஞ்சென்ற சிவக்கொழுந்து, நல்லம்மா மற்றும் ஜெயமணி (கனடா), லீலாவதி, தங்கராணி, பராசக்தி, றஞ்சினி (பிரான்ஸ்), ஜெயக்குமார் ஆகியோரின் மைத்துனியும் சந்திரிக்கா - குணசீலன், மதுசன் (கனடா), சுவேதா, அக்ஷயன், அக்ஷரன், அக்ஷனா (பிரான்ஸ்) ஆகியோரின் பேர்த்தியும் பவர்னிசாவின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.02.2018) ஞாயிற்றுக் கிழமை மு.ப. 11.00 மணியளவில் கொக்குவில் மேற்கு, ஆடியபாதம் வீதியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தனக்கிரியைக் காக நண்பகல் 12.00 மணியளவில் கொக்குவில் கிழக்கில் அமைந்துள்ள கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித் தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**0774807303** (CS 561/15/17) **தெட்சணாமூர்த்தி (மூர்த்தி - மகன்)**

# 61 ஆவது பிறந்தநாள் நினைவலைகள்

தோற்றம் 1957 . 02 . 24



மறைவு 2017 . 12 . 01

## சிங்காரவேலு யோகநாதன்

(உரிமையாளர் ogesta)

தோற்றச் சுடரொளியாய்
சொல்லாத நுண்ணுணர் வாய்
மாற்றமாம் வையகத்தில்
வந்துதித்த அப்பாவே நீ பிறந்து
ஆண்டு அறுபதுதொன்று ஆகுமிந்தவேளையில்
நீண்ட துயரோடு நினைக்கின்றோம்.
சாந்தி பெறுக

**குடும்பத்தினர்.**

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 24.02.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.